உத்ஸவ காண்டம்

பிரமோத்ஸவ தத்வ தீபிகை

இரண்டாம் பாகம்.

சோபகிருது.
பங்குனி.



ஸ்ரீவேங்கடேசோ விஜயதேதராம்.

பிரமோத்ஸவதத்வதீபிகை.

இரண்டாம்பாகம்

உத்ஸவகாண்டம்.

இஃது
ப்ரஹ்மஸ்ரீ ராஜயோகாநந்த
ஸ்ரீவேங்கடப்பிரபந்த ஸ்வாமிகளால்
இயற்றப்பட்டு

திருச்சிறுப்பள்ளி
'லக்ஷ்மி விலாஸ்'' அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை அணா 8.
சோபகிருது௵ பங்குனி௴

யா
குமால்
தி மூவந்தே
ணையிலயென்று
விண்டுபுகழ்வரே

ஸ்ரீ ரஸ்து

ஸ்ரீவேங்கடேச பரப்ரஹ்மணே நம:

...றப்புப்பாயிரம்.

...லர்தலையுலகின் வளமெலாநிறைந்த
...சொலவருங்காச்சித் தொண்டைமண்டலத்தே
...ார்பெரும்பிள்ளைப் பாக்கவேதியர்குலத்
...ார்செயும்பூசனை யருளெலாந்திரண்டு
...ண்டுமாதவரெலாங் கொண்டபேருருவாய்
...ீண்டுவிணடிநிதங் தொண்டுசெய்வலியால்
...ந்தவாதூல வரகோத்திரப்பாற்
...ந்துவெண்டிங்களாய்த் தேசுலாஞ்சீநி
...ாசமாமறையோன் மகிழ்பங்மவல்லி
...சநற்றேவி நிமலசுகோதரந்
...ன்னிலேவளர்ந்துபின் றன்னிலைதெளிந்து
...ன்னியங்கதுவெறுத் துன்னியேயுலகின்
...ால்குடித்தூர்ந்தமப் பால்குடித்தேர்ந்து
...ரதிருவேங்கடப் பிரபன்னராஜ
...யோகாநந்த மோங்குநாமத்தொன்
...யாகாகுலமாம் புன்மைதவிர்த்தோன்
...லகிற்பெரிய வுத்தியோகந்தனில்
...லவகையநுபவித் திலகினோன்சீர்சால்
...திருப்புதிசோள சிங்கமாவளநகர்
...ருப்பதநகரியம் பதியிலுமேனைச்
...லதலங்களிலே புலவர்களுவக்க
...ித்தியாசாலைகள் விளங்கிடச்செய்தோன்
...த்தியோகத்தால் பரகதியடைகுவான்
...ூன்மவிசாரத் தழுந்துவோர்தமக்கு
...மன்மையாஞ்சபைகளை வியப்புறநாட்டினோன்
...சாதிசேர் வேதவி யாதமாமுனிவர்
...துபுராணப் போதப்பொருளெலாஞ்
...ற்றறிவாற்சிலா குற்றமுடைத்தெனுப்
...ற்றிலாதுரைக்கும் பழிமொழியகற்றி
...ங்கதனுள்ளுறை யரும்பொருளனைத்தும்
...ிய நூற்பல வுணர்வுறவியற்றினோன்
...கடந்தருள்கொ... திடம்பெறவுலாவி
...ர்தமக் காரியவறிவு
...பறச் சாற்றுவிவேகா
...ந்த் சொந்தமேசிகனுய்
விளங்குஞ்சீர்த்தியோன்
லறமெறியனைத்துஞ்
சேர்பிரபந்ந
கதற்வாதியரொடு

கபமுறுமிலேச்சக்
மருமத்தாரையும்
அத்தகைகீர்த்தியோ
மூத்தனிற்றைறக்கு
காண்மினுவந்துளங்
அங்காலயத்தி
பொங்கார்வமாகப்
வறிவிலாரவ்வழி
பொறிபுலன்காணவிப்
ளார்ச்சையம்படிவத்
மெச்சுமாங்கிறையவன்
ஆலயங்கோபுர
கோலமெய்த்தம்பமுங்
திருமடப்பள்ளியுஞ்
வருவிழாவாகன
போதருந்தத்துவப்
தேதமற்றவர்தமக்
வடகலையொடுதமிழ்
உற்சவகாண்டமென்
சற்சம்பிரதாய
புகல்பெருநூலதன்
திகலுறமுபனிட
டத்துரிகாசிப
வித்தகன்விகனசன்
டத்தனுரணன்
சத்தமாம்பாஞ்சராத்
லபலவற்றினு
மறைபொருளனைத்து
மறைகரதலத்து
ன்றுருகாட்டிடுங்
ன்னுமங்காலய
த்துவச்சுடர்கொளுத்
ங்களதீபமக
ங்கிறுவறிந்தே
ரியைகிரியை
புரியவருச்சையி
த்துவிதமதா
ந்திலிழிந்து
மைத்தவுக்கிந்நூ
ப்பதற்குறுமென
த்தருந்தரும்
சத்தலந்தனிலு
ணடுபுகழ்வரே

கசடறுமேனை
வெருவுறத்தாக்கிறே
னருந்தவசிவ
மொழிந்தனனுலசி
கேண்மினம்மெதன்னெ
லருந்தவமுனிவ
பூசனைபுரிவர
யறிகிலாமையினு
பூதலமதனு
தமர்ந்தனனிறைவன்
மேவியசீர்சா
மணிமதிண்மண்டப
குளிர்பலிபீடமு
செம்மகச்சாலையு
மாண்புமின்னனவெனு
போதமேதோன்
திருவினையகற்
தொடரிருசொற்களா
றுலகர்கொண்டாட
சமயநூலாய்த்
புலமையென்சொல்வேன்
மெழிற்புராணத்தே
னருந்தவப்பிரு
விரிந்தநூல்களிலே
றம்புயற்கருளிய
திரமெனுந்தொந்நூ
ளிலைமறைகாய்போ
மொருதிரளாக்கி
நெல்லியங்கனியெனு
தருப்பணமோவெனு
மாட்சிமையோவெனு
தொத்தமெஞ்ஞான
வரதேவதையெனு
யின்புடன்
சகலமுமுணர்ந்தபி
லுடனிகழ்மாந்தர்
மான்மகவிசா
நித்தியாநந்த
லின்றுயிர்த்துணையா
வுரைசெயலாகுமால்
மூத்தருமுவந்தே
வினையிலையென்று
விண்டுபுகழ்வரே

கணபதிநாவலர்.



பிழை திருத்தம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	16	புடமி	புடவி
5	23	னுண்மைப	னுண்மைம
7	23	அவற்றுள் பக்தியுத்ஸவமே சிறந்தது	நித்யோத்ஸவமே சிறந்த
8	11	குறிக்குப்	குறிக்கும்
25	2	முறல	முரல
29	7	ஸிங்காதனம	சிங்காதனம்
38	பாட்டு 1-வது	செங்கோண்மை	செங்கோன்மை
72	1	அநுக்கிரககோல	திரோதானகோ
73	7	வவைப்படும்	வகைப்படும்

க்ரந்த சுலோகங்களில் பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்.
௬௭	௫	[illegible]	[illegible]
	௰௨	[illegible]	[illegible]
	௨௧	[illegible]	[illegible]
௭௪	௪	[illegible]	[illegible]
	௰௨	[illegible]	[illegible]
	௰௧	[illegible]	[illegible]
	௨௩	[illegible]	[illegible]
	௨௬	[illegible]	[illegible]
	௨௭	[illegible]	[illegible]
	௨௮	[illegible]	[illegible]
	௩௩	[illegible]	[illegible]
௭௬	௧	[illegible]	[illegible]
	௨	[illegible]	[illegible]
	௰௩	[illegible]	[illegible]
	௩௩	[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
		[illegible]	[illegible]
௮௰	௧	[illegible]	[illegible]
	௮	[illegible]	[illegible]
	௨௨	[illegible]	[illegible]
	௨௬	[illegible]	[illegible]
	௨௭	[illegible]	[illegible]
	௩௫	[illegible]	[illegible]

ஸ்ரீ ரஸ்து.

ஸ்ரீவேங்கடேசாய நம:

உத்ஸவ காண்டம்.

முதல் பிரகரணம்.

விஷ்ணு ஆலய உத்ஸவதத்வம்.

திருமால் துதி.

திருமாதும் புவிமாதுஞ் சிந்தைமகிழ் தரவுலகந் திருத்திக்காக்கும்
அருண்மாரி யனையானை யறம்பொருளின் பங்கள்வீ டாயினானைப்
பெருமாயை முதலாய பிரபஞ்ச மனைத்துமாம் பெற்றியானை
வருமாயை தீர்த்தருளும் வரதனையுள் ளன்பினொடு வணக்கஞ்செய்வாம்.

திருமகள் துதி.

காவாரத் துதித்திறைஞ்சு நாமகளா தியதெய்வ நல்லார்யார்க்கும்
தாவாத கற்பினொடு தகைமைசெல்வந் தழைப்பவரந் தருபொன்மாதை
மாவாதி மூலமென வானவரின் திரன்காண வந்துகாத்த
தேவாதி தேவனுரஞ் சேர்ந்தருளுந் திருமகளைச் சிந்தித்துய்வாம்.

சேனையர்கோன் துதி.

சீர்கொண்ட வானந்தந் திகழ்பரம பதமுதலாச் செப்புநூற்றெண்
பேர்கொண்ட திருப்பதிக டமினுறையுந் திருமாலைப் பேணியன்பாய்
ஏர்கொண்ட தேவர்குழா மிறைஞ்சநெடுங் கெல்லைதனி லினிதுநோச்சும்
வார்கொண்ட வேத்திரங்கை வயங்குவிச்சு வச்சேனன் மலர்த்தாள்காப்பாம்.

சடகோபர் துதி.

திருக்குருகை யைம்படையன் செங்கமலக் கண்ணனுயர் தேவதேவன்
திருக்குருகைச் சிறுபெருநீள் சிந்தூராங்காத் தருளினன்பாற் சேருமாறு
திருக்குருகைத் தூதாக நுங்கால்க ளென்தலைமேற் செல்வீரென்ற
திருக்குருகை மகிழ்மாறன் திருவடியே சரணமெனச் சிந்தைசெய்வாம்.

பன்னிருவர் துதி.

சீராரும் பொய்கைபூ தம்பெயரார் திருமழிசைச் செல்வன்மாறன்
பாராருஞ் சேரலர்கோன் பட்டர்பிரான் தொண்டரடிப் பொடிநற்பாணன்
கூராரும் வேல்வலத்துக் குறையலூர் கலியனிறை குறைவிற்கோதை
ஏராரு மதுரகவி யெனுமிவர்யாப் பதமலர்க ளேற்றியுய்வாம்.

எதிராசன் துதி.

வாதூரி னற்சமய மதகரிக்கோர் மடங்கலே றனையான்தொண்டர்
மீதூரின் கருணையின்மா றன்பதமே விருப்பெனயர்திரத்தையன்றோர்
வேதூரின் பிறவியற விண்டுமவர்க் காய்மார்க்கம் விண்ணப்பஞ்செய்
பூதூரி னெதிராசன் பொன்னடியே தஞ்சமெனப் போற்றிசெய்வாம்.

எதிராஜனுக்குப்பின்வந்த ஆசாரியர்கள் ஸ்துதி.

மின்னுரு மெதிராச னன்பினரா யவர்வகுத்த மிகுநூல்யாவும்
கன்னுவ லோராகித் துதிதிருவாய் மொழிப்பொருளாஞ் சதிர்விளக்கைத்
தன்னுவி னுலேற்றித் தமதடியா ருளத்திசைக டயங்கச்செய்த
பின்னுரு மாசிரியர் திருவடிநந் தஞ்சமெனப் பெற்றுய்வாம்யாம்.

ஸ்வாசாரியர் துதி.

மன்னுயிரா யிவ்வுலகில் வந்துபிறந் தேபயின்று வதிந்தயாவுந்
தன்னுயிர்போ லேகருதுந் தன்னருளாற் செங்கரமென் தலைமேற்சாத்திப்
பன்னுயிரு ளென்னுயிராய்ப் பரமனுயர் மந்திரத்தைப் பரிந்துகூறி
என்னுயிர்தந் தளித்தவனை யெழிற்குருவி னிருசரணை யிதயம்வைப்பாம்.



நூல்வரலாறு.

ஆதிநடு வந்தமோ டுருவமொடு பெயரிலா
தகிலவுலகுக்கு முதலாய்
அனவரத பொளிருமிறை யோனுயிர்க் கருளுமா
றடையுமொப்பற்ற வழகார்
சோதிலாவடிவகக் கண்படைத்தார்க்கலது
குறிகொள விசைந்திடாதால்
குவலயத் தோர்க்கினிய காட்சியி லடங்குவான்
கொண்டன னருச்சைவடிவம்;
யாதக மகற்றுமம் மகிமையெல் லாம்புதந்
பாகத்தி லினிதுரைத்தோம்;
தொல்லுலகி லவனுள முவக்கெழிலு லாவுமோர்
தூயவிழவின் பொருளெலாம்
போதிக்கு மணிகொளுஞ் சவகாண்ட மெனவினிது
போற்றவருமிந்த நூல்காண்!
புகலுமிதி லுறைகின்றபொருளறிய வல்லோர்கள்
புடமிமிசை குறைவிலாரே.

விசேஷார்த்தம்:—ஸ்ரீமதகில புவன நிர்மாணாலங்கார கர்த்த னும், ஆதிமத்தியாந்தரகிதனும், அவாப்த ஸமஸ்தகாமனுமான ஸர்வேசுவரன் அடியார்களுடைய தியானம் பூஜை முதலியவைக ளுக்கு உதவும்படி கரசரணாதி அவயவங்களுடன் கூடிய ஓர் அப் பிராகிருத திவ்யமங்களத் திருமேனியைத் திருவுளமுகந்து அடி யார்களை அனுக்கிரகிக்கவல்ல அனந்த கல்யாணகுணங்களையுடை யவராய், பரமபதமென்னும் ஓர் அப்பிராகிருத தேசவிசேஷத்தில் ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவியர்களுடன் வெள்ளிமலைபோல் விள ங்கும் ஆதிசேஷ சிங்காதனத்தில் வீற்றிருந்துகொண்டு ஸகலலோ கங்களிலும் தமதுசெங்கோல் செல்லும்படியாய் விளங்காநிற்பர். இத்தகைய திவ்ய மங்களத் திருமேனியையே "யோகாரம்பே மூர்த்தஹரிம்" என்கிறபடி அடியார்கள் தியானிக்கக் கடவர் கள். ஆயினும் இந்தத் திவ்யமங்களத் திருமேனியை ஞானக் கண்படைத்த மகாத்துமாக்கள் மாத்திரமே தியானிக்க வல்லவர். மற்றவர்கள் இத்திருமேனியைக் கண்களால் காணமுடியாதவர்க ளெனினும், இத்தகையதென்று சிந்திக்கவும் சக்தியற்றவர்களாக

இருப்பதை நோக்கி அப்பரவாஸுதேவன் அர்ச்சாவதாரத்தைத் திருவுளமுவந்து ஸ்ரீரங்கம், ஸ்ரீவேங்கடாசலம், ஸ்ரீகாஞ்சி முதலான திவ்யதேசங்களில் சகலமான சேதனர்களுக்கும் சேவைதந்தருளுகிறார். எம்பெருமானுடைய அனந்த கல்யாணகுணங்களில் ஒவ்வோர் கல்யாணகுணம் ஒவ்வோர் திவ்யதேசத்தில் விளங்காநிற்கும். எல்லாக்குணங்களுக்கும் உறைவிடமாயிருக்கிற பகவத் ஸ்வரூபத்தின் குணரகசியங்களை ஆழ்வார்களும், யோகிகளும், பிரமவித்துக்களும் உள்ளபடி அறியச்சக்தர்களாவார்கள். அர்ச்சாவதாரத்தில்அறிவதற்கு அறியனவாயும் இலையில் மறைந்த காய் போல்வனவாயும் மறைந்திருக்கிற தத்துவங்களையெல்லாம் இந்த நூலுக்கு முதல்பாகமாகியக்ஷேத்திரகாண்டத்தில் தெளிவாகவும் விரிவாகவும் அனேகப்பிரமாணங்களுடன் கூறினோம். க்ஷேத்திரங்களின் தத்துவங்களை அறிந்தபிறகு ஆங்கு நடக்கும் உற்சவங்களையும் அவற்றின் தத்துவங்களையும் அறிந்துகொள்ளுவது ஆவசியகமாகையால் "உத்ஸவகாண்டம்" என்னும் இந்த நூல் இனிது உபகரிக்கும்.

இந்த உத்ஸவகாண்டத்தில் எம்பெருமானுடைய உத்ஸவங்களின் முறைமைகளையும், உத்ஸவங்களின் பிறிவினைகளையும், அவற்றின் தத்துவங்களையும், அவற்றை அறிந்து உய்யவேண்டிய வகையையும், விசதமாக விவரிக்கப்பட்டிருப்பதோடும், ஒவ்வொரு உத்ஸவத்திலும் எம்பெருமானைச் சேவிக்கும்போது சேவார்த்திகள் அந்தந்த உத்ஸவத்தில் எம்பெருமானை ஸ்துதிசெய்வதற்கு ஸம்ஸ்கிருத சுலோகங்களும் தமிழில் ஆசிரியவிருத்தப்பாவினங்களும் அடங்கியிருக்கும். இந்த ஆசிரிய விருத்தங்களும் சுலோகங்களும் ஸ்தோத்திரம் செய்கிறவர்களுக்கு ஸ்தோத்திர ரூபமாயும், சாஸ்திரவிசாரணையால் தத்துவங்களை அறிய விரும்புகிறவர்களுக்கு சாஸ்திரமாயும் இருக்கும். உலகத்தில் சிலர் ஸ்தோத்திரத்தை விரும்புகிறவர்களாயும், சிலர் சாஸ்திரத்தை விரும்புகிறவர்களாயும் இருக்கிறார்கள். எம்பெருமானுடைய திருவருளைப் பெறுவதற்குச்சாஸ்திரங்களைப் பார்க்கிலும் ஸ்தோத்திரங்களே சிறந்தனவாகும். ஆயினும் தத்துவங்களை விளக்கும் சாஸ்திரங்

களில் சுவையை அடைந்திருப்பவர்களுக்கு இந்த நூல் தத்துவ சாஸ்திரமாகவும் விளங்கி எம்பெருமானது சரணாரவிந்தத்தைப் புகழ்ந்து உயிர்வாழ்வதில் ஆவல் கொண்டவர்களுக்குப் பகவத்ஸ்தோத்திரமாயும் உபகரிக்கும். இப்படி ஸ்தோத்திர ரூபமாய் இயற்றப்பட்ட இப்பிரபந்தத்தில் மண்ணோர் விண்ணோர் வெற்பென்றுசொல்லப்படுகிறஸ்ரீவேங்கடாசலத்துக்குநிர்வாஹகராய்அத்திருமலையின்மீது அர்ச்சாவதாரத் திருக்கோலங்கொண்டெழுந்தருளியிருக்கிற எம்பெருமானை ஸ்தோத்திரத்துக்கு விஷயமாக்கி ஸ்துதிக்கப்படுகின்றது. இப்படிச் சாஸ்திரரூபமாயும் ஸ்தோத்திரரூபமாயும் இயற்றப்பட்ட இந்தப்பிரபந்தமானது அறிவினால் குறைவில்லாத அகண்ட ஞானிகளுக்குப் பிரியமாய் விளங்கவேண்டுமாக!



பிரமோத்ஸவ விவரணம்.



அச்சுத னருச்சைபம் படிவத் தமர்ந்துவிட
பாசலா தியபிலமெலாம்
அத்யாத்ம தத்வாவ போதரூ பத்திலகு
மதுலதிரு விழவனைத்தும்
இச்சையோடு நித்தியம் பத்தியென மூன்றுவித
மேற்த மம்மூன்றுவகையால்
ஈற்றினுரைசெய்தது சிறப்புடைத் தாமிதனி
லிசைவுறும் பிரமோற்சவம்;
மெச்சுவர யோகிதன் சம்யமா ரம்பாதி
மேவுமுற் கிரமணாந்தம்
மீமிசை விளங்குமனு பூதியித னுண்மையோ
மினிரன்ன மாளிகாகம்
அச்சமில் விரவிசசி யானையரி புட்புரவி
யதுமனணி தேராதியாம்
அற்புத வகத்தடிக ளெழிலுலாப் போதருத
லாலறிந் தகமகிழ்வமே.



இதுவுமது.

ஆக்கலொடு காத்தலு மழித்தலு மெனத்திகழு
மந்தவொவ்வோர் தொழிலினுக்
கார்ந்த மும்மூன்றாக வாய்ந்ததின மொன்பானி
லடிக ளுற்சவ மமருமால்,
நோக்குமுழி ராசதஞ் சத்துவந் தாமதமு
னாங்கு குணமேளனத்தால்
கொடிதலுறு மத்தத்வ முறைசெயுங் காலரோ
துண்ணறிவி னுதயமாக்கல்,
போக்கின்றி யதனையபி விர்த்திசெய் தந்தநிலை
புக்குவதுவே காத்தலாம்;
போராடு மதமுலோ பங்காமமாதியன
பொன்றுத லழித்த லதன்மேல்,
நீக்கமற வினிதுதத் துவலயங் கொடுதன்னி
னிற்றலித னுண்மையிதுகாண்!
நீணிலத் தீர்ந்த நெறிநாமுணர்ந்துமிக
நியலனடி தொழுதுயவமே.

(வி - ம்) எம்பெருமான் தமது அர்ச்சாவதாரத்தில் கண்டருளும் உத்ஸவங்கள் பலவகையாகக்காட்டியருளுகிறார். இந்திரியஜெயம்பெற்ற ஞானிகள் அந்தச்சொரூபவுண்மைகளை அகக்கண்ணால் அறிந்து கலந்துய்வர். சஞ்சலசித்தமுள்ள அஞ்ஞானிகள் அந்தச்சொரூபவுண்மைகளை அர்ச்சாவதாரத்தில் புறக்கண்ணால் தரிசித்துத்தியானித்து உய்வர். அர்ச்சாவதார க்ஷேத்திரங்களினுடைய வரலாற்றை ஆராயுங்கால் அவைகளெல்லாம் ஒவ்வோர் காலவிசேஷத்திலே எம்பெருமான் தமது மெய்யன்பர் பொருட்டாக அவர்களுக்குத் தரிசனங்கொடுத்துத் திருவருள் புரிந்தகாலத்தில் அவ்வடியார்கள் தாம் அரிதில் அடைந்தபேறு யாவரும் எளிதில் அடையவேண்டுமென்னுங் கருணாநோக்கத்துடன் பெருமானைப் பார்த்து, "சுவாமீ! தேவரீர் இவ்விடத்துத் திருக்கோயில்கொண்டுவீற்றிருந்து வருகின்ற மெய்யடியார்களுக்கு எளிதில்அருள் புரியவேண்டும்" என்று பலவாறு வணங்கித்துதிக்க, அன்பர்கள் வேண்டியவேண்டி யாங்கீயும் பெருமான் அதற்குடன்பட்டு வீற்றிருந்தருளும் திவ்யதேசங்களாம். *அறிவிற்சிறந்தோர் அக

* க்ஷேத்திரகாண்டம் 4, 5, 6 21, 22, 23, 24, 25 பக்கங்களைப்பார்க்க.

வழிப்பாட்டில் அடையும் அனுபூதிவிஷயங்களை எம்பெருமான் ஆலயங்களிலே திருவலகிடல், திருமெழுகிடல், திருச்சிலை கட்டுதல், திருவிளக்கிடல், முரசுமுதலிய வாத்தியங்கள் இசைத்தல், † சோடசோபசாரங்கள் ஸமர்ப்பித்தல் ‡ முதலிய வாயிலாக காட்டுவதோடும், குணத்திரய ஸம்மேளனத்தால் நடத்தப்படும் ஸ்ருஷ்டி ஸ்திதி, ஸம்ஹாரங்களான தமது தொழில்களையும் வருஷந்தோறும் உத்ஸவங்கள் வாயிலாகவும் காட்டியருளுகிறார். உத்ஸவங்களைத் தினந்தோறும் நடத்தாமல் ஒவ்வொருகால விசேஷத்தில் மாத்திரம் நடத்தவேண்டுமென்று ஆகமங்கள்கூறும். பெரும்பாலும் சில ஆலயங்களிலே அமாவாசையிலும், சில ஆலயங்களிலே பௌர்ணிமியிலும் சில ஆலயங்களிலே விசேஷநக்ஷத்திரங்களிலும் உத்ஸவங்களை ஆரம்பிப்பதும் ஸமாப்தி செய்வதும் வழக்கம். அப்படிச்செய்தபோதிலும் முதலில் கொடியேறுவதற்கும் அந்த உத்ஸவங்களை இத்தனை நாள்களில் நடத்தவேண்டுமென்று தினங்களை வரையறைச்செய்து நடத்துவதற்கும் ஆகமங்களில் பலவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் ஆராய்ந்து எடுத்து விளக்குவது அசாத்தியமாகையால் ஒருவாறு எடுத்துக்காட்டும்.

வைகானஸ ஆகமப் பிரவர்த்தகர்களில் ஒருவராகிய "ப்ருகு முனீந்திரர்" அருளிச்செய்த ஸம்ஹிதையில் உத்ஸவ தத்துவம் என்னும் அத்தியாயத்தில் கூறியபடி உத்ஸவங்கள் மூன்றுவகையாகும். அவை நித்யோத்ஸவம், காம்யோத்ஸவம், சிரத்தை அல்லது பக்தியுத்ஸவம் என்பனவாம். அவற்றுள் பக்தியுத்ஸவமே சிறந்தது. இதுவே ப்ரம்ஹோத்ஸவம். அந்தப்பிரமோத்ஸவம் ஒன்பது தினங்கள். அவ்வொன்பது தினங்களில் நிறைவேற்றப்படுவதாகிய பிரம்ஹோத்ஸவத்தில் எம்பெருமான் ஹம்ஸம், ஸிம்ஹம், யாளி, அநுமான், சூரியன், சந்திரன், நாகம், கெருடன், யானை, தேர், குதிரை முதலிய வாகனரூடராய் மானிடர்களுக்குத் தத்துவபோதம் செய்துகொண்டு எழுநிலாவுகின்றார். ஒன்பது தினங்கள் என்று ஏற்பட்டமை என்னை? எனின்,—ராஜஸம்,

† க்ஷேத்திரகாண்டம் 46 47 பக்கங்களைப்பார்க்க.
‡ க்ஷேத்திரகாண்டம் 48, 49, 50, 51 பக்கங்களைப்பார்க்க.

ஸாத்துவிகம், தாமஸம் என்னும் முக்குணங்களின் ஸம்மேளனத்தால் உண்டான ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்கிற முத்தொழில்களில் ஒவ்வொன்றுக்கு மூன்று மூன்று தினங்களாக மும்மூன்று ஒன்பது தினங்களாகி அவ்வொன்பதும் ஒன்பதுநாள் உத்ஸவங்களால் அறியப்படும் தத்துவமாம். அதாவது, ஸ்ருஷ்டிக்கு மூன்றுதினங்கள், ஸ்திதிக்கு மூன்றுதினங்கள், ஸம்ஹாரத்துக்கு மூன்று தினங்கள். ஆகமொத்தம் ஒன்பது தினங்கள்.

இவ்வுண்மை பிருகு முனீந்திரர் அருளிச்செய்த ஸம்ஹிதையாலும் *அஜிதாகமப் பிரமாணங்களாலும் விளக்கமுறும். இப்பொழுது சொல்லப்பட்ட ஒன்பதுநாள் உத்ஸவங்களில் ஸ்ருஷ்டி தினங்களைக்குறிக்கும் முதல்மூன்றுநாள் உத்ஸவங்களில் முறையே ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் மூன்றும் அந்தர்ப்பாவங்களாயிருக்கும். எப்படியெனின், முதல் நாள் உத்ஸவத்தால் † வ்ருத்திக்கிரம ஸ்ருஷ்டி கோலமும், இரண்டாவதுநாள் உத்ஸவத்தால் ‡ வ்ருத்திக்கிரம ஸ்திதிகோலமும், மூன்றாவது நாள் உத்

---

* அதாதஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி விசேஷாத்தத்வவைபவம் | உத்ஸவஸ்ய [illegible] || உத்ஸவாஹஸ்ய [illegible] ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகாரணம் || என்றும்" [illegible] | என்றும், [illegible] என்றும்" [illegible] என்றும், [illegible] என்றும், [illegible] என்றும், [illegible] என்றும், [illegible] | என்றும் பிருகு முனீந்திரர் ஆகமத்தில் கூறியவாற்றால் காண்க.

† வ்ருத்திக்கிரம ஸ்ருஷ்டிகோலம்=பரமாணுக்களாக ஸர்வேசுவரனிடத்தில் ஒடுங்கியிருந்த ஸகலசேதநாசேதனங்களையும் தன்னிடத்திலிருந்து வெளிப்படுத்துவதற்குச் செய்யும் முயற்சியாகிய ஸ்ருஷ்ட்டியைக் காட்டும் தரிசனம்.

‡ வ்ருத்திக்கிரமஸ்திதிகோலம்=ஸ்ருஷ்டிக்கப்பட்ட சேதநாசேதனங்கள் வ்ருத்தியாக்கும்பொருட்டுச்செய்யும் முயற்சியாகிய ஸ்திதிகோலத்தைக் காட்டும் தரிசனம்.

ஸவத்தால் § வ்ருத்திக்கிரம ஸம்ஹார கோலமும் பூண்டு எம்பெருமான் எழிலுலாவுவர். இப்படி வ்ருத்திக்கிரமத்தில் ஸ்ருஷ்டியையும், ஸ்திதியையும், ஸம்ஹாரத்தையும், காட்டுகின்ற திருக்கோலங்களே முதல் மூன்று தினங்களில் நடத்தப்படும் உத்ஸவங்களுக்குத் தத்துவமென்று ஆகமங்களின் கருத்து. அப்படியே இடையே புகும் உத்ஸவதினங்கள் மூன்றினுல், அதாவது நான்காவது ஐந்தாவது ஆறுவது தினங்களின் உத்ஸவங்களால் முறையே $ வ்ருத்திக்கிரம திரோபாவ கோலமும், ¶ வ்ருத்திக்கிரம ஞானபோதானுக்கிரக கோலமும், || லயக்கிரம ஸ்ருஷ்டிகோலமும் அறியப்படும். கடைத்தினங்களாகிய ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது தினங்களில் நடத்தப்படும் உத்ஸவங்களால் முறையே * லயக்கிரம ஸ்திதிகோலமும், † லயக்கிரம ஸம்ஹாரகோலமும், ‡ லயக்கிரம திரோபாவ கோலமும், உணர்த்தப்படும். இப்படி ஒன்பது தினங்களுமான பிறகு லயக்கிரமத்தில் செய்யும் அனுக்கிரகத்தை பத்தாவது நாள் உத்ஸவம் போதிக்கும். முக்குண ஸம்மேளனத்தால் குறிக்கப்படுகிற இந்த ஒன்பதுநாள் உத்ஸவங்களில் பகவான் திருவுளமுவந்து எழிலுலாவுகின்ற அந்தந்த தினங்களின் வாஹனங்களாலும் அந்தத் தத்துவங்களைப் பகவான் ஸகலமான பேர்களுக்கும் புறத்தில் இனிது விளங்குமாறு

---

§ வ்ருத்திக்கிரம ஸம்ஹாரகோலம் = வ்ருத்தியாகும் பரியந்தம்வ்ருத்தியாகி அதற்குமேல் வ்ருத்தியாகாமல் அல்லது வளரமாட்டாமல் அம்மட்டிலேயே நிற்கும் (மரம், மலை, மாடு, மனிதர், பறவைகள் முதலியனபோல் நிற்கும்) நிலையைக்காட்டுவது வ்ருத்திக்கிரம ஸம்ஹாரகோலம்.

$ வ்ருத்திக்கிரம திரோபாவகோலம் = வ்ருத்திக்கிரமத்தைச்செய்துமுடித்துப் பின்புஒருகாரியமும்செய்யாமல் எம்பெருமான்உபரதியையடைந்து ஸாகித்திருக்கும் காலத்தைக்காட்டும் திருக்கோலம்.

¶ வ்ருத்திக்கிரம ஞானபோதானுக்கிரஹகோலம் என்பது = ஸ்ருஷ்டமானசேதனகோடிகளுக்கு ஞானனுக்கிரகஞ்செய்யும் திருக்கோலம்.

|| லயக்கிரம ஸ்ருஷ்டி கோலம் = ஸ்ருஷ்டமான சேதனசேதனங்களை அழிப்பதற்கு முயலும் ஆரம்பதசையைக் காட்டும் திருக்கோலம்.

* லயக்கிரம ஸ்திதிகோலம் = லயப்படுத்துவதற்கு ஆரம்பித்தபிறகு லயம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தைக்காட்டும் திருக்கோலம்.

† லயக்கிரம ஸம்ஹாரகோலம் = முழுமையும் லயமாக்கிய ஸமயத்தைக் காட்டும் திருக்கோலம்.

‡ லயக்கிரம திரோபாவகோலம் = முழுமையும் லயமாக்கிவிட்ட பிறகு ஓய்ந்து இருக்கும் ஸமயத்தைக்காட்டும் திருக்கோலம்.

போதித் தருளுகிறார். "யதாதேஹேததாபேரே" என்கிறபடி உபாஸகர்கள் விஷயத்திலும் மேற்கூறிய தத்துவங்கள் இனிதுவி ளங்கும். எங்ஙனமெனின், அறிவிலா மாந்தர்கள் ஆசிரியரை யடுத்து அறிவைப்பெற்று அதனை அபிவிர்த்தி செய்து ஞானயோகி களாகித் தங்கள் பிராணோத் கிரமண பரியந்தம் இடையிடையே நிஷ்டானுபூதிகளையனுபவித்துப் பிரமானந்தத்தையடைதலே பிர மோத்ஸவத்திற்கு விஷயமாகக் கொள்ளத்தக்க உள்ளுறை பொ ருளாகும். ஆகையால் மேற்கூறிய தத்துவங்களின் விபரங்களை யும், அவை உபாஸகர்கள் விஷயமாய் கொள்ளப்படும் முறைமை களையும், இந்த நூலில் அந்தந்த உத்ஸவ விவரணத்தால் பிரகாச மாகுமாகையால் அவை ஆங்காங்கு கண்டு தெளியற்பாலனவாம்.



ஆலயங்களில் ஆசரிக்கும் சில காலவிசேஷங்கள்.



ஆலயங்களிலே அமாவாசை, பூரணை, பிரதமவிடுவகாலம், இரண்டாம்விடுவகாலம், சூரியக்கிரகணம், சந்திரக்கிரகணம், மாஸப் பிறப்பென்கிற சங்கிரமணம், உத்தராயணம், தக்ஷிணாயனம்முதலி ய சிலகால விசேஷங்களிலும் உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. அத்தியாத்தும தத்துவவேத்தர்களாகிய ஞானயோகிகள் இவை யாவையும் அந்தர் முகமாகக்கொண்டு களிப்பார்கள். எப்படி யெனில் ஸப்த தாதுமயமாகிய மானிடசரீரத்தில் நாடீசக்கரத்தி லிருந்து பிறந்த நாடிகள் எழுபத்திரண்டுகோடி எழுபத்திரண்டு லக்ஷத்துப் பதினாயிரத்து இருநூற்றொன்றில் ப்ரம்ஹதண்டியின் வலத்தும் இடத்தும் உள்ள இளாபிங்களா நாடிகள் மூலத்திலி ருந்து பிராணனுடன் கிளம்பி சூரியன் என்றும் சந்திரன் என் றும்பெயர்களை அடையும். சூரியனென்னும் இளாநாடி (இடகலை) வலதுமூக்கிற்சேர்ந்து, பன்னிரண்டு அங்குலம் வரையில் பிராண வாயுவை வெளியிலிழுத்து, நான்கங்குலம் லயமாக்கி எட்டங்கு லம் உள்ளிழுத்துக்கொள்ளும். சந்திரன் என்னும் பிங்களாநாடி (பிங்கலை) இடதுநாசியில் சேர்ந்து ப்ராணவாயுவைப் பதினாறு அ

ங்குலம்வெளிப்படுத்திப் பாதிலயப்படுத்தி மற்றப்பாதியை உள் வாங்கும். சூரியன் என்றும் சந்திரன் என்றும் சொல்லப்படுகிற இடகலைபிங்கலைகள் இரண்டும் ஒருநாளில் இருபத்தோராயிரத்து அறுநூறு உசுவாஸ நிசுவாஸத்தால் மாறிமாறி ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும். இந்த இடகலை பிங்கலை நாடிகள் இரண்டுக்கும் நடுவில் ஓர் நாடியுண்டு. அதுதான் ஸுஷும்னை (சுழிமுனை) என்பது. இதுவும் நாடீசக்கரத்தில் உதித்தது. இது ஸரஸ்வதி, விசுவோதரி, சுக்லா, அமிர்தா, மானதா, என்னும் உபநாடிகளுடன் சேர்ந்து ப்ரம்ஹ நாடி எனப்பெயர் அடைந்து, தன்னோடுவந்த நூறு நாடிகளை அங்கேவிடுத்து, நாக்குநுனியில் சேர்ந்து ஸரஸ்வதி நாடியெனப்பட்டு பரா, பஸ்யந்தி, மத்தியமை, வைகரி, என்னும் வாக்குகளை நாக்கு, உண்ணாக்கு, கன்னம், கழுத்து, தலை, பல், உதடு, நாசி, ஆகிய எட்டிடங்களில் ஐம்பத்தோரக்ஷரங்களையும்பேசுவித்து அவ்விடத்தில் அடங்கி பச்சிமமார்க்கத்தால் புருவமத்தியம் சேர்ந்து இளாபிங்களா நாடிகளுடன் கூடி ஸங்கமமாகும். இப்படி விவரித்துச்சொல்லிய முக்கியநாடிகளாகிய இளா பிங்களா ஸுஷும்னைகளில் ப்ராணநாடியான ஸுஷும்னைநாடி சிலாக்கியமும் ஸகலநாடிகளுக்கும் சிரோமணியுமாகும். இதுதான் ஞானோதயத்துக்கு ஸாதனமான நாடி.

இந்த நாடியானது * ஞானயோகசாதனத்தைப் பெற்றவர்க

* தர்சனோபநிஷத்து நான்காவது கண்டம்:— இடாயாம் வர்த்ததே நித்யம் சந்த்ரமா ஏவமேவ ஹி | பிங்களாயாம் ரவிஸ்தத்வன்முனே வேதவிதாம்வர || பிங்களாயா இடாயாந்து வாயோஸ் ஸங்க்ரமணம் து யத் | ததுத்தராயணம் ப்ரோக்தம் முனே வேதாந்தவேதிபி: || இடாயா: பிங்களாயாம் ப்ராணஸங்க்ரமணம் முனே || தக்ஷிணாயனமித்யுக்தம் பிங்களாயாமிதி ஸ்ருதி: || இடாபிங்களயோஸ் ஸந்திம் யதா ப்ராணஸ் ஸமாகத: || அமாவாஸ்யா ததா ப்ரோக்தா தேஹே தேஹப்ருதாம்வர || மூலாதாரம் யதா ப்ராணஸ் ஸமாகத: || ஸோமக்ரஹணமித்யுக்தம் ததா தத்வவிதாம்வர || யதா பிங்களயா ப்ராண: கா[illegible]ஸ்தாநமாகத: ததா ததா [illegible] ஹணம் [illegible] ||

ளுக்குப் பரிபாகத்துக்கு ஏற்றபடி சில காலவிசேஷங்களில் ஒவ்வொரு பரிபாகத்தைத்தரும். அந்தப்பரிபாக கால விசேஷங்களே உலகத்தில் கொண்டாடப்படுகிற அமாவாசை, பூரணை, சூரியக்கிரகணம், பிரதமவிடுவகாலம், சங்கராந்தி,உத்தராயணம்,தக்ஷிணாயனம் முதலியன. ஸுஷும்னாநாடி யியங்கும் காலங்களாகிய இவற்றைக் கைக்கொண்டொழுகி, பகவத்கடாக்ஷத்தைப்பெற்று ஞானிகள் முக்தியடைவார்கள். ஆகையால் அமாவாசை பௌர்ணமி முதலிய மேற்கூறிய காலங்களைப்புறவழிபாட்டில்விசேஷமென்று ஆசரித்து தத்வஞானம் உதிக்கப்பெற்று எம்பெருமானுடைய திருவருளைப் பெறும் பொருட்டாக ஆலயங்களிலே இந்தக் காலவிசேஷங்கள் குறிக்கப்படுகின்றனவாம். இவற்றுள் அமாவாசை, பிரதமவிடுவகாலம, இரண்டாம்விடுவகாலம் எனபன எவையெனில்,—இடகலை பிங்கலை என்னும் இரண்டு நாடிகளுக்கும் நடுவிலிருக்கிற சுழுமுனை நாடியிலே பிராணவாயு சேருங்காலம் அமாவாசையென்றும், ஞானப்பிரகாசத் தெளிவானது நினைவாதாரமயப்படுங்காலத்தைப் பூரணையென்றும், பிராணவாயு மூலாதாரத்ஸதச் சேருங்காலம் பிரதமவிடுவகாலம் என்றும், பிராணவாயு சிரசில் சேருங்காலம் இரண்டாம் விடுவகாலம் என்றும் சொல்லப்படும். இதற்குச் சம்மதி,—

சூதசங்கிதை.

"தழைதருமிடைபிங் கலையெனுமிரண்டின் சந்தியைப் பிராணன் சேர்காலம், விழைதருமமாவாசியை யெனவுரைப்பர் மேவுமப் பிராணன்மூலத்தைக், குழைவறச்சேரிற் பிரதமவிடுவகாலமென்றுங் குலாஞ்சென்னி, யுழையுறச் சேரிலிரண்டதாம் விடுவகாலமென்றுஞ் சொல்வாருணர்ந்தோர்."

மேலே கூறப்பட்ட மாதிரியாகவே சங்கிரமணகாலம், சந்திரக்கிரகணகாலம், சூரியக்கிரகணகாலம் என்பன எவையெனில் நிசுவாசத்தோடு சுவாச நாடியானது ஒன்றிலிருந்து மற்றொன்றில் பொருந்துமானால் அக்காலத்தைச் சங்கிரமணகாலம் என்றும், பிராணவாயுசந்திரநாடியாகிய இடாநாடியினின்றும் உந்திக்குஇரண்டங்குலம் கீழே சர்ப்பவுருவமாயிருக்கும் குண்டலினிச்சத்தியில்

பொருந்துமானால் அக்காலத்தைச் சந்திரக்கிரகணம் என்றும், அந்தப்பிராணவாயுவே சூரியநாடியாகிய பிங்களா நாடியில் நின்றும் மேற்கூறிய குண்டலினிச் சக்தியில் பொருந்துமானால் அக்காலத்தைச் சூரியக்கிரகணம் என்றும் முனீந்திரர்கள் கூறுவார்கள்.

இதற்குச்சம்மதி சூதசங்கிதை.

“நன்னிசுவாசத்தோடு சுவாசநாடி யொன்றிருந்து மற்றொன்றில், தன்னிடல் சங்கிரமணகாலமெனச் சொல்லப்படும் பிராணன் மற்றிடைநின், றுன்னுபிங்கலைநின்றேங்கு குண்டலியினுற்றிடுங் காலத்தைமுறையே, மன்னியவுலகமேத்து புண்ணியத்தமதிகதிர்க் கிரகணமென்பார்”.

உத்தராயணம் தக்ஷிணாயனம் என்பன எவையெனில், சரீரத்திலே பிராணவாயுவானது பிங்களாநாடியில் நின்றும் இடாநாடியில் மாறுவது உத்தராயணமென்றும், இடாநாடியில் நின்றும் பிங்களாநாடியில்போவது தக்ஷிணாயனமென்றும்சொல்லப்படும்.

இதற்குச்சம்மதி-சூதசங்கிதை.

இடையினெப்போதுமதியும் பிங்கலை யிலங்குமென்றாமுஞ் சஞ்சரிக்கு
நடைகொள் பிங்கலையினின்றுமொள்ளிடையினவிறரும்பிராணவாயுதான்
மிடைவதையுத்தராயணமென்றும் விளம்பிடை நின்றும் பிங்கலையிற்
கடையிலவ்வளிசங்கிரமமாவதைத் தக்ஷணாயனமென்று நன்குரைப்பார்.



அங்குரார்ப்பண மகோத்ஸவம்.



வீயாத விடபவா ரணியங் களோந்தபினி
வேசவேர் மாய்த்தழகிலா
வேறுபடு சங்கற்ப மொடுவிகற் பங்களொறு
மேடு பள்ளந்திருத்திச்
சாயாத வருளுழவு பூட்டிச் சிரத்தையாந்
தண்ணீ ரிலங்கநோக்கித்
தக்கநெஞ் சப்பூமி மிசைபத்தி யம்பயிர்
தழைக்க நீமுயலவிதுவென்

ஓயாத வினைதருவி னூனுயி ருணர்த்துநனி
யொப்பிலா வங்குரார்ப்ப
ணோற்சவ மகாகோல! நிசபக்தபரிபால!
வுரகாச லேந்த்ரலீலா!
தேயாத மணிசிகர தேசோவிமானகன
தினகர சசாங்கநயனா!
தீனஜன சந்தாப ஹரணவேங் கடரமண!
திகழ்வனஜ செஞ்சரணனே!!.

வி-ம் ஆலயங்களிலே மகோற்சவங்களை உபக்கிரமிக்கும் போது அங்குரார்ப்பணம என்கிற உத்ஸவம் செய்யவேண்டுமென்று ஆகமங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. * இதனை "திருமுளைஉத்ஸவம்" என்பார்கள். உத்ஸவம் துடங்கும் முன்னமே ம்ருத்ஸங்கிரகணம் செய்துவந்து அந்த மண்ணைப்பாலிகைகளில் நிரப்பி ஜலங்கொட்டி ஈரமாக்கி அவற்றில் நவதானியங்களைச் சேர்த்து முளைக்கும்படிச்செய்து, அவற்றைஉத்ஸவதினங்கள் முடிவு பரியந்தம் வைத்திருந்து, உத்ஸவங்கள் முடிந்தபிறகு அவற்றை உபயோகப்படுத்திக்கொள்ளுகிற பாவனையாக வேறுதானியங்களைப் பரிக்கிரகித்து முளைகளை கங்கையில் சேர்த்து விடுவார்கள். கருணைக்கடலாகிய பகவான் அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டுச்செய்யும்முயற்சியை அங்குரார்ப்பணகிரியாகலாபத்தினால் அவர்காட்டியருளுகிறாரென்பது இந்த உத்ஸவத்தின்கருத்து.

காடுமூடியிருளடைந்திருக்குமோர் நிலத்தை அதனுரியவன் சீர்திருத்தக்கருதிக் கோடரியால் காட்டை வெட்டித் தீக்கொளுத்தி யுருபாய்த்து, மேடுபள்ளங்களைத்திருத்தி எருவிட்டு,நீர்ப்பாய்ச்சிக் கலப்பைகொண்டுழுது நஞ்சைநிலமாக்கி ஈரநெல் விதைத்துப் பயிரெழும்பக்கண்டு, களைகளைப்போக்கிப் பயிரையழிக்கும் மாடுகளனுகாவண்ணங் காவல் கொண்டடைத்து, பக்குவமான பயிர் பாரத்தால் தலைவணங்குதல் கண்டு, அதனைக்கொஞ்சங்கொ

* ஸ்ரீபாஞ்சராத்ரே - விஷ்ணுதிலகே "உத்ஸவாரம்பதிவஸாத் பூர்வே ... [illegible] ... அங்குரார்ப்பணம்" இதி

ஞ்சமாக உண்டும் திருப்தியடையாமல், காலதாமதமுஞ்செய்யாமல், அவ்விளைச்சல் நிலத்திற்படிந்து மங்கிப்போவதன்முன் அறுத்துக்கொண்டுபோய்த் தண்டாலடித்து, பதரையும் நெல்லையும் பிரித்து, உமியைப்போக்கி, தண்டுலமாக்கி, தவிடறக்கழுவி, வேறோர் கலத்திலிட்டு, பைந்தொடி மடந்தையரைக்கொண்டு அறுசுவையடிசிலாக்கி, தானும் தனது உறவினருமுண்டு களிப்படையுமாறு செய்கின்ற ஒருவனது க்ருஷி கர்மம்போல், ஸர்வேசுவரனும் அடியார்களை ஆட்கொள்ளும்பொருட்டு ஒரு க்ரிஷிசெய்து கொண்டுவருகிறார் என்பது இவ்வுத்ஸவத்தால் விளங்கும். எப்படியென்றால்,—போகமோக்ஷங்களை விளைவித்துக் கொள்ளும்படியான நஞ்சை நிலம்போன்ற மானிடர்களின் மானஸபூமியானது அஞ்ஞானமாகிய அரணியஞ் சூழ்ந்திருத்தலாலும், எத்தனையேனும் பலவான்கள் திருத்தப்புகினும் திருத்தப்படாமையாலும், அதனாலடையும் பலங்களை அடைவதற்கு உதவாமல் பாழ்பட்டொழிதலாலும், அதற்குஉரியவனாகிய ஸர்வேசுவரன் தனது நிர்ஹேதுக கடாக்ஷத்தினால் அந்தநிலத்தைப்பக்திக்கு விளைநிலமாக்கும்படித் தனதருளால் சீர்திருத்தக்கருதி, அருளென்னும் கோடரியினால் அவ்வஞ்ஞானக் காட்டைத் தகர்ந்து, வாசனாருசிகளாகிற வேர்களை யுணர்வுகொண்டு தீக்கொளுத்தி உருமாய்த்து, அம்மனத்தின்கண் நிகழும் ஸங்கல்ப விகல்பங்களாகிற மேடுபள்ளங்களைத் திருத்தி, ஊரார் பழிமொழியை எருவிட்டு, சிரத்தை, தியானம் என்னும் நீர்ப்பாய்ச்சி, தானே தனதருளென்னும் கலப்பைகொண்டுழுது, நஞ்சைநிலமாகப் பக்குவமாக்கி, பக்தியாகிற விதையை விதைத்து, பக்திப்பயிரை விளைவித்து, தத்பிரத்தியாஸன்னமாயும், ததேகபோகமாயும், அதில் கிளம்புகிற அஹங்கார மமகார ரூபங்களான களைகளைப் பறித்தெறிந்து, விஷயங்களில் பிரவணமாய்த் திரிகிற இந்திரியங்களாகிற மாடுகளின் ஸஞ்சாரத்திற்குக் காரணமான கெர்வத்தைப் போக்கி, பலிதாம்சத்தைக் காமக்குரோதாதிகளாகிற கள்ளர்கைக்கொள்ளாமல் ஸாதுஸங்கமென்னும்காவல் கொண்டடைத்து, அபரிச்சேத்தியமாய்ப் பக்திப்பயிரை விளைவித்து, பலிதமான அதன் பரிபாக நிபந்தனமாகிய ஆர்த்தியால்வரும் பாரவசியம் பிறந்தபின், (அதாவது பக்திபரிணாமம்

சொன்ன இதனால் ததாஸ்ரயணமான பகவத்போக்யமாகத் தி
ருந்தினமையால் ஸர்வேச்வரன் அவ்வாத்மவஸ்துவைத் தினந்
தோறுமுண்டு ‡ பர்யாப்தனாகாமல்) அதனைக் காலக்கழிவாலே
விலம்பட்டுப்போகாமல் ப்ராப்திவிரோதியான கர்மங்களையறுத்
து, தனதருளாகிய திடதரமான ஸாதனத்தால் ஸாரமற்ற ஆத்
மானுபவருசியைநீக்கி, ஆத்மாவைச் சூழ்ந்துகிடக்கும் ஆதிவியா
திகளுக்கும் ஷட்பாவவிகாரங்களுக்கும் மூலமான ஸ்தூலதேகத்
தை விலக்கி, ஸ்தூலதேகங்கழிந்த பின்னரும் நீங்குவதற்கு அரி
தாயும் ஸம்ஸரண ஹேதுவாயுமிருக்கிற ஸூக்ஷ்ம சரீரத்தையும்
§ விரஜாதீர்த்தாவ காஹனத்தாலே வாஸனா ரேணுக்களோடு
போக்கி, ஸ்தூல ஸூக்ஷ்மப் ப்ரகிருதியினின்று பிறித்துக்கைக்
கொண்டு, அமானவகரத்தால் அப்ராகிருத சரீரத்தில் பிரவேசி
ப்பித்து, அலங்கரித்து ஸத்கரிக்கும் அப்ஸரஸ்ஸுக்களைக் கொ
ண்டு, தனது $ போகத்திற்கு யோக்கியமாகும்படி அலங்காரம்
செய்வித்து, முன்பு திரோஹிதமாய் மறைந்துகிடந்த ஆத்மகுணங்
களெல்லாம் பிரகாசிக்கப்பெற்றிருக்கிற இவ்வாத்ம வஸ்துவை
ஞானாதிஷட் குணங்களாகிற ஷட்ரஸயுக்தமான அந்நமாகும்படி
¶ அவர்கள் கரஸ்பரிசத்தால் பக்குவமாக்கி (சேஷவஸ்துகதமா
ன ஞானசக்தி முதலிய அறுகுணங்களும் சேஷிவிஷயமான விநி
யோகத்திற்கு உறுப்பாகையால் இந்த குணங்களுடன் கூடிய இவ்
வாத்மவஸ்து அவனுக்கு அறுசுவை யடிசிலாயிருத்தலினால் அந்
நமாக்கி) நித்தியவைகுந்தத்து நித்தியஸூரிகளுக்குப்பரமபோ
க்கியமாகும்படி, இவ்வாத்மவஸ்துவை முழுவதும் புஜிக்கும் ஸ்வ
பாவனாகையால், இவ்வங்குரார்ப்பண மஹோத்ஸவமானது சேத
நோஜ்ஜீவனார்த்தமாக ஸர்வேச்வரன் செய்யும் க்ருஷிகர்மத்திற்கு
அறிகுறியென்று, பக்தோஜ்ஜீவன கார்ஷகர்மத்திற்குப் பலனை
யும், க்ஷேத்திரத்தையும், க்ருஷியையும், உத்ஸவவ்யாஜத்தால் ப்ர
காசப்படுத்தத்திருவுளங்கொண்டு, அங்குரார்ப்பணமஹோத்சவத்
தைத் திருவுளம்பற்றி யருளுகிறானென்றுணரத்தக்கதாம்.

‡ நாலாயிரப்பிரபந்தம், "நாளுநாள் வந்தென்"—
§ "தத்தோய ஸ்பர்சமாத்ரேண" என்
$ "ஸ்வெநரூபேணாபிநிஷ்பத்யதே" என
¶ "அஹமந்நமஹமந்நம்" (சுருதி)

நவதானியங்களை விதைத்து நீர்ப்பாய்ச்சி முளைக்கச்செய்வித்து உத்ஸவதினங்கள் முடிவுவரையிலும் வைத்திருந்து, திருமுளைகளைப் புஜிப்பதற்கு யோக்கியமாகாமையால், உத்ஸவங்கள்முடிந்தவுடன் அவற்றுக்குப்பதிலாக வேறு சில தானியங்களைக் கொண்டுவந்து பகவதர்ப்பணம்செய்து எலலோரும் அதனைப் பிரஸாதமாகக் கிரகிக்கிறார்கள். இவ்வுண்மை ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் அழகிய மணவாளமென்னும் நபெருமாள் கிராமத்தில் விளைந்த நெல்லைஉத்ஸவாந்தத்தில் அவ்விறைவன் உவந்தருளித்தரும்காக்ஷியால் உணரப்படும்.*



யாகசாலை - கும்பாவாஹனம்.



தொக்கிந்தியந் துகிலு முனிலகு மண்மேதை
தோயமுதிரம் பூசுமண்,
தூயமணி சுக்கிலம் மச்சை சுற்றிடுதக்து,
தோமிலாவென்புகூர்ச்சம்,
அக்கிமயிர் நாசி நயனம் பெற்றவூர்த்வாங்க
மழகுபெறு நாரிகேளம்
அதிகுப்த மாகுமந் திரமரிய வுயிரிவை
யமர்ந்தநர தேககும்பம்
புக்கடியர் வேண்டுவன வருளுமொருவரதனே
பூமேவுமகணேயனே ?
புகலரிய சாதனம் பலபற்றியிதயமிசை
போந்தருளி விரசையாற்றிற்
கக்கரைச் சேர்க்குமரு ளாளனே தூயனே
அர்ச்சாவ தாரநிதியே
அமராதி விநுதபத வேங்கடகிரீந்த்ரவித
அதுலிததயா மூர்த்தியே.

வி - ம். ஆலயங்களில் உத்ஸவாரம்ப காலத்தில் யாகசாலைகளில் கும்பங்கள் நிறுத்தி அலங்காரம்செய்து பகவானை அவற்

---

* பகவான் செய்கிற ஞானக்கிரிஷி விஷயம் "ஆசாரிய ஹ்ருதயம்" என்னும் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

றில் ஆவாஹனம்செய்து உத்ஸவம்முடிந்தவுடன் அவவிருதஸ்நா
னம்செய்ய, ஆகமம் விதிக்கின்றது. யாகசாலை யென்பது யா
கம் செய்வதற்கு உரித்தான ஓர் இடம். யாகம் இரண்டுவகைப்
படும், அவை ஸ்தூலயாகம், ஸூக்ஷ்மயாகம் என்பனவாம்.ஸ்தூ
லயாகமென்பது கருமயாகம். ஸூக்ஷ்ம யாகமென்பது ஞான
யாகம். நித்தியகருமம, நைமித்திககருமம, காமியகருமம், செப
தபங்கள் முதலியன கருமயாகத்தில் சேர்ந்தன. ஞானமாத்திர
த்தாலே மானஸிகமாகச்செய்வது ஞானயாகம். மஹோத்ஸவங்
களில் வெளியில் செய்யப்படும் யாகம் ஞானயாகத்துக்கு உபல
க்ஷணமாகும். எப்படியெனில் *"தஸ்யைவம்விதுஷோயக்யஸ்
யாத்மாயஜமான:" என்னும் சுரிதியின்படி மார்பு வேதியாகவும்,
இருதயம் யூபத்தம்பமாகவும், சரீரம் இத்துமமாகவும், காமம்
நெய்யாகவும், தவம் அக்கினியாகவும், கோபம்பசுவாகவும், மயிர்
தர்ப்பையாகவும், இந்திரியங்கள் யாக பாத்திரங்களாகவும், சபை
யினர் புலன்களாகவும், எவற்றையும் விடுதலே தக்ஷிணையாகவும்,
கொல்லாமையே யாகமாகவும், ஜீவனே யாகம்செய்கிறவனாகவும்,
சிரத்தையே மனைவியாகவும், ஏனையவைகளையும் இவ்வாறு அமை
த்துக்கொள்ளப்படுவது பகிர்யாகத்துக்குக் குறிகளாம். இப்ப
டிக்குறிக்கப்படுகிற பகிர்யாகத்துக்கு உபகரணங்களாகிய சிருக்கு
சிரவம் என்னும் இரண்டையும் அத்யாத்மமாக அறியவேண்டிய
து. எப்படியெனில், அழகான தண்டத்தையும், வேதீ ரந்திரத்
தையும், கண்டம்மேல்பாகத்தையும் பெற்றுவிளங்கும் யாகபாத்
திரத்துக்கு ஸ்ருக்கு பாத்திரம் என்று பெயர். அதன் தண்டமே
சரீரமத்திய நாடியாகவும், வேதீரந்திரத்தையே இருதயகமலமாக
வும், கண்டம் மேல் பாகத்தையே தாலுரந்திர பாகமாகவும்,
தாரையாகவிழும் நெய்யையே விந்துஸ்தானத்திலிருந்து பெருகு
ம் அமிர்ததாரையாகவும், ஸ்ருக்குபாத்திரத்தை அத்யாத்மகமாக
அறியவேண்டியது. அதாவது சுழிமுனை என்னும்நாடியே ஸ்ருக்
கென்றுசொல்லப்படுகிற ஹோமசாதனபாத்திரமாக அறியவேண்
டியது. இது இந்தஹோமத்தில் முடிவில்உபயோகிக்கப்படவேண்

* க்ஷேத்திரகாண்டம் ௯௩வது பக்கம் "ஹஸ்திகிரி தத்வநிருபணம்"
என்னும் மகுடத்தின் கீழமர்ந்த வியாக்கியானத்தையும் காண்க.

டிய பாத்திரம். மற்ரூர் பாத்திரமாகிய ஸ்ருவம் என்பது ஹோமத்தில் ஆரம்பம் முதல் உபயோகப்படவேண்டியதாம்.

அந்தர்யாகம் செய்கிறவர்கள் மனேபாவனையினாலே ஸ்வயமாகவே சித்தமாயிருக்கிற நாபியாகிய குண்டத்தை ஹோமஸ்தானமாகப்பாவித்து, அதில் விதிப்படி ஞானக்கினியை ஆவாஹனஞ்செய்து அதில் பரமாத்மாவை இருதயத்தில் பூசித்தபடி பூசித்து, விந்துஸ்தானத்திலிருந்துபெருகுகிற அமிர்ததாரையை ஆச்சியதாரையாக்கி இடைகலையாகிய ஸ்ருவத்தினுல் விதிப்படி ஆஹுதிசெய்ததாகப்பாவித்து, முடிவில் சுழிமுனையாகிய ஸ்ருக்கினாலே பூர்ணாகுதிசெய்து, இப்படி இருதயத்தில் பூஜையும் நாடிகுண்டத்தில் ஹோமத்தையும் செய்து, பகவானை க்ஷமைகேட்டுக்கொண்டு பூஜாஸமர்ப்பணஞ்செய்து, முடிவில் பகவதாகாரத்தில் லயித்து, மூலாதாரம் முதல் துவாதசாந்தபரியந்தம் ஏகாகாரமான பகவத்தியானரூபமாகிய ஸமாதியைச் செய்யவேண்டும். இதுதான் அந்தர்யாகம் என்பது. உத்ஸவகாலங்களில் ஆலயங்களில் நடத்தப்படும் பகிர்யாகத்தால் அந்தர்யாகமே குறிக்கப்படுகின்றதென்று சாஸ்திரங்களின் துணிபு. †



கும்பம்.



மகோற்சவங்களிலே ஆலயங்களில் யாகசாலையில் கும்பங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. கும்பங்கள் பகவதாராதனத்துக்கு உபயோகமாய் பகவத்சரீரம்போல் பூஜிக்கத்தக்க பிரமவித்துக்களின் சரீரத்துக்கு உபலக்ஷணங்களாகும். ஆகையால் பகவத்பூஜாநிமித்தம் பகிர்முகத்தில் ஸ்தாபிக்கப்படுகிற கும்பத்திற்கு ஸ

† [illegible] சித்தாந்தசாராவளீ.

மர்ப்பிக்கிற வஸ்திரம் முதலானவைகளைத் தேஹத்தின் சருமம் முதலான தாதுக்களாக ஆகமங்கள் நிரூபிக்கின்றன. எப்படியெனில், கும்பங்களிலே போர்த்த வஸ்திரங்கள் தோலாகவும், கும்பத்தையுண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கிற மண் மாம்ஸமாகவும், கும்பத்தின்மேல் செகப்புநிறம் ஏறும்படிப் பூசிய செம்மண் இரத்தமாகவும், கும்பங்களில் நிறைக்கப்பட்ட ஜலம் மேதசாகவும், கூர்ச்சம் எலும்பாகவும், கும்பங்களுக்கு நாலுபக்கமும் சுற்றப்படுகிற நூல்கள் நரம்புகளாகவும், கும்பங்களுக்குள்ளே போடப்படுகிற நவரத்தினம் சுவர்ணபுஷ்பம் முதலியன வீரியமாகவும், நியசிக்கப்பட்ட யந்திரமே உயிராகவும், கும்பங்களுக்குக் கீழேஇடப்பட்ட நெல், அரிசி, எள்ளு, பயிறு, உளுந்து, துவரை, கோதுமை என்னும் தானியங்கள் ஆசனங்களாகவும், குறிக்கப்படும். ஆகையால் யாகத்தில் ஸ்தாபித்த கும்பங்கள் பகவத்தேஹமாதலால் கலசம் வஸ்திரம் முதலியவைகளையே பகவத்தேஹ அவயவங்களாகப் பாவித்து யாகஞ்செய்யில் செய்யும் கிரியையெல்லாம் பகவத்பூஜையாகவே முடியுமென்பது ஆகமத்தின் கருத்து.

துவஜாரோஹணம்.

கொடியேறு முற்சவக் குலவுவெளியாகவே
கூறுவேனிது கேண்மினோ
கோலநீளசமான வானந்த மெய்துவான்
கேடறுமோவனெவனேனுமுன்

மிடியேது மின்றியற நெறிவாயினின்றிலக
வேண்டுமென் றறநூலெனும்
மேதக்க வேதமே கோடிக்குமாதலான்
மேவுகொடி தண்டமறமாம்

படியேறு மாந்தரிக் கொடியேறு தத்துவப்
படியோதி யாரணவழிப்
பற்றிநில மாறுங் கடந்துசுழி மேவியே
பரமசமமடைதகவெனு

அடியேறி சென்றணுக வொண்ணாத வடவேங்க
டாத்திரிச் சிகரத்தோன்
அருளுமா ரூடகிலை யிதிலேது மய்யமிலை
யறிமி னவனடி தொழு மினே.

வி - ம். ப்ரம்மோத்ஸவாரம்பத்திலே கொடியேற்றல் வழக்கம். *கொடியென்பது த்வஜமெனப்படும். ஆலயத்தில் மூலஸ்தான தேவபிம்பத்துக்கு நேராக நிறுத்தப்பட்டுள்ள கொடிமரத்தில் கருடவுருவம் எழுதப்பட்டு நிகளமாயிருக்கும் ஒரு துணியைச் சுருட்டி அடியிலிருந்து மேலுக்கு ஏற்றி மேல்பாகத்தில் பந்தித்து உற்சவம் முடிவாகும்பரியந்தம் நிறுத்திவைப்பர். இந்தச்சடங்கை விசேஷ ஸம்பிரமத்துடன் நடத்துகிறபடியால் இதனை "த்வஜாரோஹணம்" என்பார்கள். செங்கோலரசனுடைய சக்திக்குறியாகிய கொடி யேறும்போது, அவ்விடத்தில் அரசசெய்து வந்த கொடுங்கோல் மன்னன் சக்தியற்றுச் செயலிழந்து நீங்கவே, குடிகள் க்ஷேமத்தை அடைதல் அனுபவவுண்மையேயாம். அதுபோல் ஸம்ஸார சக்கரத்தில் பந்தத்தால் பிறந்து இறந்து சுழன்றுவரும் ஆன்மாக்கள் உண்மையைநோக்கி அறிவுக்கறிவாயிருக்கிற பரமாத்துமாவைப் பிரியாமல் குறித்து, விஹிதமான ஸத்கர்மானுஷ்டானங்களை விதிப்படி நடத்தி, பிறகு மனம்போனவழியே போகாமல் தன்னிடத்திலே மறைந்து பொருந்தியிருக்கிற ஞானக்கொடியேறி பிரம்ஹத்தையடைகிறதினாலே, மாயாஜாலத்தின் அரசு சக்தியிழந்து செயலிழந்து ஒடுங்கவே, ஆன்மா பேரானந்தப் பெருவாழ்வை அடைவான். ஆகையால் மாயாஜாலம் ஒழியும்பொருட்டும், மோக்ஷம்ஸித்திக்கும்பொருட்டும், இந்தப்படி ஈசுவர ஸங்கல்பமாகிய ஞானக்கொடி ஏறவேண்டுமென்பதும், இல்லையாகில் அது கைகூடாதென்பதும் "துவஜாரோகணத்திருவிழாவினால்" அறியப்படுகின்றது.

---

* 𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌂𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 - 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑌿𑌲𑌕𑍇 - 𑌉𑌤𑍍𑌸𑌵𑌾𑌰𑌂𑌭 [illegible]
[illegible]
[illegible]
[illegible] 𑌇𑌤𑌿

இதனை வைகானஸ ஆகமப்பிரவர்த்தகர்களில் ஒருவராகிய ப்ருகுமுனீந்திரர் அருளிச்செய்த ஸம்ஹிதையில் உத்ஸவதத்வம் என்னும் அத்தியாயத்தில் அப்பரம முனீந்திரர் தெளிவாகக் கூறியிருக்கின்றனர். எப்படியெனில், § ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் ஸகலமான பேர்களேயும் சிக்ஷித்துக் கறையேற்றிச் செவ்வைப்படுத்துவதனுலேயும், வர்ணதர்மங்களையும் ஆச்சிரம தர்மங்களையும் போதித்து நான்குவர்ணத்தாரையும் கண்டிப்பதனுலேயும்,வேதசாஸ்திரார்த்தமார்க்கரூபமாய்விளங்குவதனுலேயும், "த்வஜம்" என்பது தர்மப்பிரதிபாத்தியமான வேதரூபதண்டமென்று சொல்லப்படுகிறது. இது புண்ணியரூபபலத்தை தருவது. பாவத்தைப்போக்கும் தண்டமென்றும்சொல்லப்படுவது.சுருதி ஸ்மிருதிரூபமான இந்தத்தண்டத்தைக்கொண்டு மாயாஜாலத்தை விசாரித்து ஒழிக்கவேண்டியது, என்பன முதலியபலவாக்கியங்களிஞல் த்வஜாரோஹணச் சிறப்பையும் தத்துவத்தையும் அம்முனீந்திரர் தெரிவிப்பதனுலே, மேலேகூறிய தத்துவார்த்தங்கள் இனிதுவிளங்கும். ஆகையால் எவனொருவன் ஒப்புயர்வில்லாத ப்ரம்ஹானந்தத்தை அடையவிரும்புகிருனே அவன் முதல் முதல் மேற்கூறிய வேதஸம்மதமான விதிவிலக்குகளை அறிந்து, ஸத்கருமங்களை அனுஷ்டித்து, அதனுல் சித்த சுத்தியை அடையவேண்டியது. ஏனெனின், ஆருருக்ஷுவின் யோகத்துக்கு, அதவது, யோகத்தை யேறுகிறதற்கு இச்சிக்கிறவனுக்கு, வேதவிஹிதமான ஸத்கருமானுஷ்டானம் காரணமாயிருக்கிறது. ¶அப்படி அனுஷ்டித்த ஸத்கருமானுஷ்டானத்தால் சித்தசுத்தியை அடைந்தபிறகு ஞானகாண்டத்தில் சொல்லப்படுகிறபடியே ஞானத்தை அடையவேணுமாகையால் மூலாதாரம்முதல் ப்ரம்ஹரந்திரமீருக வியாபித்திருக்கிற வீணுதண்டம்போன்ற ப்ரம்ஹநாடியைப்பற்றி நிற்கும் ஆதார சக்கரங்களைக் கடந்துபோய் மேல்நின்று பிரகாசிக்கக்கடவன், ஆகையால் யோகாருருக்ஷுவான

§ ஸம்ஸாரஸாகரத்தில்... (Grantha script verse) — இதி

¶ "ஆருருக்ஷோர்முனேர்யோகம் கர்மகாரணமுச்யதே! யோகாரூடஸ்ய்தஸ்யைவசம: காரணமுச்யதெ" பகவற்கீதை-6-வது அத்தியாயம்.

வன் வேதமார்க்கப் பிரதிஷ்டாபரனு யிருந்துகொண்டு கர்மயோகத்தை ஆசரித்து ஸதஸத்விவேகத்தையும் சித்தசுத்தியையும் பெற்றுக் கிரமக்கிரமமாக ப்ரம்ஹநாடியின்மீதேறி $ ப்ரம்ஹஸாக்ஷாத்காரத்தில் விளங்கவேண்டுமென்னுங் கருத்தை, கருமகாண்ட ஞானகாண்டரூபமாய் விளங்குகிற வேதார்த்தரூபமான த்வஜாரோஹணத்திருவிழாவினுல் பகவான் தனது அர்ச்சாஸமாதியால் ஸகலமானசேதனர்களுக்கும் உணர்த்துகின்றார் என்பதாம்.



ப்ரம்ஹாதி தேவதாஹ்வானம்.



ஒப்பிலாப்புருமய்ய மொண்மைசேர் நயனயுக
மோங்குமிருசெவி பார்சவம்,
ஒத்தபின் னகழுத் துயர்பிரம ரந்திர
மொருப்பட்ட வொன்பானிலும்,
செப்புமிந்திரியவதி தேவதைகளவ்வவத்
தேயத்து நின்று வெளியே
செல்லாது தன்வயப் பட்டுறச் செய்துபின்
சீர்மருவு பிரயயோகத்
துப்பினி லிலங்கிடு யோகிகா ளிதுகொண்டு
சோர்வுறு திசைசுகவெனுத்
தூயவடவேவைகட தூரியனுணர்த்துமத்
தூரியம்பேரி முரசம்
தப்பிலாத் தாளமிரு தங்கவாத் தியமெலாந்
தாம்தாம் தனம் தனவெனுஞ்
சதுரானனாதி தேவாக்குவா ஹனசவஞ்
சற்கெதி யளிக்குமாதோ.

வி - ம். அர்ச்சாவதாரத்தில் பகவான் ப்ரம்ஹோத்ஸவம் திருவுளம்பற்றும்பொருட்டுச்செய்யும் த்வஜாரோகணகாலத்தில், ப்ரம்ஹதேவன் இந்திரன்முதலிய அஷ்டதிக்குப்பாலர்களை அழைப்பித்து அந்தந்த ஸ்தானங்களில் அவர்களை ஆவாஹனம் செய்து

$ [illegible] | இதி விஷ்ணுதிலகே த்ருதீயோத்யாய:

உத்ஸவம் நடத்தப்படவேண்டுமென்று ஆகமங்கள் கூறும். *

த்வஜாரோஹணத்துக்கு முன்னாகிலும் பின்னாகிலும் அஷ்டதிக்குப்பாலர்களை அழைப்பித்து நிறுத்தலாமென்றும் ஆகமங் கூறும். அதன் தத்துவம் என்னையெனின் கூறுவாம்,—ஆருருக்ஷுவானவன் யோகாரம்பகாலத்தில் சகல இந்திரியங்களையும் விஷயங்களில் செல்லவொட்டாமல் தன்வசப்படுத்தி ஞானயோகத்திலிருக்கவேண்டுமாகையால் அவ்வுண்மையை பகவான் தனது அர்ச்சாஸமாதியில் பிரம்ஹோத்ஸவகாலத்தில் ப்ரம்ஹாதி தேவதாஹ்வானம் மென்னும் உத்ஸவவிசேஷ வியாஜத்தால் பிரகாசப்படுத்துகின்றார் என்பதாம்.

யோகாருருக்ஷுவானவன், சிரம், புருமய்யம், வலதுகண், வலக்காது, வலதுகர்ண பார்சவம், பிடரி, இடதுகர்ண பார்சவம், இடதுகாது, இடதுகண், இவ்வெட்டு ஸ்தலங்களிலுள்ள இந்திரிய அதிதேவதைகளை விஷயங்களில்செல்லவொட்டாமல்அடக்கித் தன் வசப்படுத்திக்கொண்டு செய்யும் யோகாரம்பதசையை இது பிரகாசப்படுத்தும்.

அமராவதி, தேஜோவதி, ஸம்யமனி, கிருஷ்ணாவதி, கந்தவதீ, புஷ்பவதீ, அளகாபுரி, ஈசாநம்என்பன அஷ்டதிக்குப்பாலகர்களுடைய லோகங்கள். இவை சரீரத்தில் புருமத்யம் முதலிய ஸ்தானங்களில் வரிசையாய் பிரதக்ஷிணக்கிரமமாக அமைக்கப்பட்டுள்ளனவாக உத்தரகீதாசாஸ்திரம்கூறுகின்றது. ஜகதாதாரமாகிய குண்டலினிசக்தி உபாதானகாரணமாகையால் அண்டத்துக்கு ஸமானமான பிண்டத்தில் இந்த அஷ்டதிக்குப் பாலகர்களுடைய பட்டணங்கள் சுழிமுனையின் ஸ்தானத்திலேயே கற்பிக்கப்பட்டிருக்கும். இதனால் ஸகலேந்திரியங்களையும் ஜெயித்து நிஷ்டையில் இருக்கவேண்டுமென்னும் தத்துவத்தை உணர்த்துவதற்கு "ப்ரம்ஹாதிதேவதாஹ்வானம்" என்னும் உத்ஸவம் அறிகுறியாக விளங்குமென்பதாம்.

---

* ஞுரொாவிெதய ஜெவிஷொடுவதாஹாநிரொவ ரொக।யஜ
ஐதி-

ஹம்ஸவாகனாரோகணம்.



மின்னென விளங்குசெந் நெற்றவள மயகவரி
வீச வளைமுறல மதுவுண்
மென்சிறைப் பமரவின மின்னிசை யிசைப்பவிலை
மேனின்று குடைகவிப்ப,
பன்னருங் கற்பணி மடந்தைதன் னடையைப்
பயின்று நீரைப்பிறித்துப்
பாலுண்டு ககனவழி யெழிலுலவி யள்ளல்வாய்ப்
பட்டிழிந் தலமுறுது
நன்னிலத் தடவனச பீடமிசை பெடையோடு
நாளுமுறை யன்னமேய்ப்ப
நாடுமித யாம்புருக மீதசீ வாகிருந்து
கண்ணி யொளிர்கின்ற வழகார்
அன்னமாப் புட்கதிட் டானனீயேயென்னு
மறிவருளு மெமதுகுருவே!
ஆனந்த மங்கள விமானத்துறையே யடிய
ராவியே சஞ்சீவியே.

இதுவுமது

நவவாயி லுற்றிலகு மானிடத் தேகமா
நகரினி லனேகவிதமாய்
கண்ணு மிந்திரியதெச வாயுமன தோடிருகி
நாடு கூடுறை புள்ளெனுப்
புறவெளி யேகுதற் கியலாது நின்றுசுக
போகமுற் றிருசிறகுதன்
பொலிவுபெறு வாசியாய்ப் பிரணவந் தலையுமாய்ப்
புனித நவவிழி முகமுமாய்
அவமற்ற நாதமெய ரக்கரத் துணையதுல
வடிவிணையு மாகியிருமூன்
றம்புசத் துலவியெழி லிதயவனசத் துறையு
மறிஞர் புகழ்கின்ற வழகார்
பவமற்ற சீவென் னப்பறவை யாரூட
பாவனை நமக்கருளுநம்
பரமபதி யன்னவா கத்திருவிழாகண்டு
பணிவ மவனடி தொழுவமே.

வி - ம். விஷ்ணு ஆலயங்கள்தோறும் உத்ஸவங்கள் வேறுபட்டு நடக்கின்றன. அவற்றுக்கு ஆகமபேதங்களே காரணம் விஷ்ணுவினுடைய ஆராதனத்துக்கு உரியதாகிய ஆகமம் வைகாநஸம் என்றும் பாஞ்சராத்திரமென்றும் இரண்டுவிதங்களாயிருக்கும், அவற்றுள் ஒவ்வொன்றும் அநேக பிறிவினைகளைப் பெற்றிருக்கும். ஆகையால் மகோத்ஸவங்களில் நடக்கும் ஹம்ஸவாகனம், ஸிம்ஹவாகனம், யாளிவாகனம், அநுமந்தவாகனம், சேஷவாகனம், கருடவாகனம், சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, வ்ருக்ஷத்தடிஸேவை, யானைவாகனம், ரதம், குதிரைவாகனம், முதலிய உத்ஸவங்கள் ஒரு ஆலயத்தில் நடக்கிற மாதிரியாக ஒரு ஆலயத்தில் நடத்தப்படாமல் வரிசைக்கிரமங்கள் மாறிமாறி வருகின்றன. ஸ்தோத்திர ரூபமான உத்ஸவதத்துவ சாஸ்திரமாகிய இந்நூலுக்கு ஸ்ரீவேங்கடாசலபதி முன்னிலைச்சுட்டாக அமைக்கப்பட்டிருப்பதால அத்திருப்பதியில் அவருக்கு நடக்கிற உத்ஸவதினங்களில் தெரிசிக்கப்படுகிற வாகனவரிசைக்கிரமத்தை யநுசரித்தும், பிருகுமுனீந்திரர் அருளிச்செய்த ஆகமசாஸ்திரத்தை யுடன்பட்டும், ஐதிக சம்பந்தத்தை யோசித்தும், வேறுசில உண்மைகளை ஒப்பியும், மகோத்ஸவத்தின் கிரமத்தையும் தத்துவத்தையும் எடுத்துக்காட்டுவோம். அவையாவன,—

ப்ரம்ஹோத்ஸவ தினங்கள் ஒன்பதில் முதல்நாளில் ஹம்ஸவாகனாரோகணம் கொண்டு பெருமாள் எழுந்துலாவுவர். * இது

* [illegible]

விர்த்திக்கிரம ஸ்ருஷ்டியைக் காட்டும் † திருக்கோலம். ஸ்ருஷ்டியென்பது என்னையெனில், யாதொன்று மறைந்து ஒடுங்கியிருக்குமோ, அதனை வெளியே தோன்றும்படிச்செய்யும் செய்லுக்கு ஸ்ருஷ்டியென்று பெயர். அந்த ஸ்ருஷ்டி இரண்டுவகைப்படும். அவை பகிர்முகஸ்ருஷ்டி, அந்தர்முகஸ்ருஷ்டி என்பனவாம். மேமூக்கில் மினிதமான சுவர்ணரேணுககளைப்போல் பூர்வம் நாமரூபவிகாரங்கள் இல்லாமல் ஸர்வேசுவரனிடத்தில் ஒடுங்கிமறைந்து கிடந்த ஸூக்ஷ்ம சித்து அசித்துக்களை நாமரூபவிகாரங்களுடன் அனேக சித்திர விசித்திரங்களாய்த் தேகாதி பிரபஞ்சாகாரமாய், ஸ்தூல சித்து அசித்துக்களாய், வெளியே தோன்றும்படிச் செய்வது பகிர்முகஸ்ருஷ்டி. இப்படிக்கு ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்துமாக்களுக்கு உபாதியாலும் அஞ்ஞானத்தாலும் வந்த அசித ஸம்மந்தம் நீங்குவதற்கும் மறைந்து ஒடுங்கியிருக்கிற ஆத்மஞானம் வெளிப்படுவதற்கும் செய்கிற செயலே அந்தர்முகஸ்ருஷ்டி. இவ்விரண்டிலும் முதலில் சொன்னது மாயை அல்லது அவித்தையைக்கொண்டு செய்யும் செய்கையாயும், இரண்டாவது சொன்னது ஞானத்தைக்கொண்டு செய்யும் செய்கையாயும் இருக்கும். முதலில் சொன்னது பந்தத்தையும் இரண்டாவது சொன்னது மோக்ஷத்தையும் கொடுக்கும். ஸர்வேசுவரன் வேத சாஸ்திரங்களை அருளியதும், கரசரணாதி அவயவங்களை உதவியதும், ஞானத்தைக்கொடுத்ததும், கர்மத்தால் பந்திக்கப்பட்டிருக்கிறஜீவர்களை மோக்ஷார்த்திகளாக்கும்படிக்கேயென்று அறியற்பாலனவாம். இக்கருத்தை நோக்கியே அவர் செய்கிற ஆத்மோஜ்ஜீவனமான ஞானக் கிருஷியை அங்குரார்ப்பண உத்ஸவத்தால் போதித்தருளுகிறாரென்றும் ‡ உணரப்பெற்றும். கொஞ்சம் அறிவையுடையவனும் கொஞ்சம் சக்தியையுடையவனுமான ஜீவன் செய்யும்காரியம் பெரும்பாலும் யாதாகிலும் ஒன்றைமாத்திரமே அறிவிக்கும்குறிபாயிருக்கும். ஸர்வேசுவரன்செய்யும்காரியம் மேற்கூறிய இரண்டையும் குறிக்கும். முன்னொரு காலத்தில் பிரமதேவனுக்கு அறநூல் உணர்த்தும்பொருட்டு ஸ்ரீவாஸுதேவர்

† 8, 9, பக்கங்களைப்பார்க்க.
‡ 14, 15, 16, பக்கங்களைப்பார்க்க.

எடுத்த ஹம்ஸாவதாரத்தால் பிரமதேவன் பிரபஞ்சஸ்ருஷ்டிசக்தி ஆத்ம ஞானப்பிவிர்த்திக்கிரமம் என்னும் புறவழி அகவழிகள் இரண்டும் குறிக்கப்படுகின்றன. அதுபோலவே அர்ச்சாவதாரத்தில் அவ்வாஸுதேவன் உவந்தருளும் ஹம்ஸவாஹனரோகணத்தால் பிரபஞ்ச ஸ்ருஷ்டியையும் ஆத்மஞானபிவிர்த்தியின் பொருட்டுச்செய்யும் உபதேசமும் பெறப்படும். ஆகையால் ஆத்மஞானத்திற்கு விஷயமாகிற இதன் பொருளை இங்கே விரித்துரைப்பாம்.

ஆத்மஞானம் அஜபாமந்திர மகாயோகோபதேசத்தால் பிறக்கும். ஆகையால் பகவான் அஜபாரூபவானென்று §சொல்லப்படுகிறார். அந்த ஞானம் ஜீவர்களுக்கு பகவானலேயே உண்டாக்கப்படவேண்டியதாயிருத்தலால், அப்படி அவர் உண்டாக்குவதையே இவ்விடத்தில் ஸ்ருஷ்டியென்று கொள்ளத்தக்கது. அஜபாமந்திரமென்பது ஹம்ஸமந்திரமாகையாலும், சாஸ்திரங்களில் ஜீவனை ஹம்ஸமாகச்சொல்லப்பட்டிருப்பதாலும், இதன் பெருமையை அறிந்த மேலோர் இதனை மஹாமோக்ஷப்ரியமாகக் கொண்டாடுவர். †

---

§ ப்ருஹத்ப்ரஹ்மஸம்ஹிதை ப்ரஹ்மணே ஹம்ஸரூபாய [illegible] ஸர்வவேதாந்தஸார: ப்ரஹ்மணே [illegible] ஸ்ருஷ்டிஸாதநம்-

தஸ்மாத் ஹம்ஸஸ்வரூபோ [illegible] ப்ரஹ்ம [illegible]-

† ஹம்ஸஹம்ஸேத்யமும் மந்த்ரம் ஜீவோ ஜபதி ஸர்வதா — த்யானபிந்து உபநிஷத் — அஜபா நாம காயத்ரீ யோகிநாம் மோக்ஷதாயிநீ | அஸ்யா: ஸங்கல்பமாத்ரேண நர: பாபை: ப்ரமுச்யதே | அநயா ஸத்ருசீ வித்யா அநயா ஸத்ருசோ ஜப: | அநயா ஸத்ருசம் ஜ்ஞாநம் ந பூதம் ந பவிஷ்யதி | [illegible] — த்யானபிந்து உபநிஷத் — ஹம்ஸவித்யா [illegible] — ப்ரஹ்மவித்யா உபநிஷத் — ஸோऽஹம் ஹம்ஸேதி ஸதா த்யாயந் — ஹம்ஸ உபநிஷத்

ஹம்ஸம் என்பது ஓர் தெய்வப்பறவை. இது அழகிய கொண்டையும், கெம்பீரமான தலையும், குளிர்ச்சிபொருந்தியகண்களும், தங்கவர்ணமான சிறகுகளும் மனோக்கியமான பாதங்களும் வெண்மையான சரீரமும் உடைத்தாயிருக்கும். இது எல்லாப் பறவைகளினும் சிறந்தது. இதனை ராஜ ஹம்ஸமென்பார்கள். இது தெய்வலோகத்தில் மானஸதடாகத்தில் வாஸம் செய்யும். சிங்காதனத்தின்மேல் கொலுவிலிருந்துகொண்டு ராஜ்ஜியபரிபாலனம் செய்யும் ஒரு அரசனைப்போல இதுவும் தாமரைமலர்ச் சிங்காதனத்தின்மேலிருந்துகொண்டு சந்தோஷத்தை அடைகின்றதென்று ஆசார்யஹ்ருதயம் என்கிற சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது. அது எப்படியெனில், தடாகத்திலிருக்கிற தாமரைப் புஷ்ப சிங்காதனத்தில் அது வீற்றிருக்கும்போது அங்கே வளர்கின்றனவும் காற்றினால் அசைகின்றனவுமான செந்நெற்கதிர்கள் வீசுகின்றசாமரங்கள்போலவும், ஜலத்திலிருக்கும் சங்கங்கள் காலபரிபாகத்தால்தரும்நாதம் ஜெயகோஷம்போலவும், வண்டுகளின் ரீங்காரம் பாடுவோர்களின் இனிமையான கீதம்போலவும், ஜலத்தின்மேல் அளவுக்கு மேலேஉயர்ந்து விரிந்து நிற்கும் குடைத்தாமரையிலே தனக்கு நிழல் தருகின்ற ஒற்றைக்குடைபோலவும், மற்றுமுள்ள சிங்காரங்களுடன் ராஜஹம்ஸமானது கொலுவிலிருக்கும். அது தனது மூக்கின் மகிமைவிசேஷத்தால் பாலிலிருந்து நீரைப்பிரித்துப் பாலை மாத்திரம் அருந்தும். அது ஜலத்தின்மேல் வாஸம்செய்தபோதிலும் சேற்றுநீரில் ஒருபோதும்படியாது, கற்பினுயர்ந்த அணங்கினுடைய நன்னடையைப்பயின்று நடக்கும், தனது பெட்டையுடன் எப்போதும் தாமரைமலரின் மீது இணைபிரியாமலிருந்துகொண்டு ஆனந்தமடையும், தனது அழகிய சிறகுகளினாலே ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும். இப்படிப்பட்ட ஹம்ஸமானது ஜீவர்களில் சிறந்த ஞானிக்கு ஸமானமென்று மேலோர் கூறுவர்.

ஹம்ஸமானது க்ஷீரநீரவிபாகம் செய்வதுபோல ஞானியானவன் ஸாராஸாரவிவேகம் உடையவனுதலாலும், அது ஜலத்தின்மேல் வாஸம் செய்தபோதிலும் சேற்று நீரில் படியாமலிருப்பதுபோல் இவனும் ஸம்ஸாரத்திலிருந்துகொண்டு அஞ்ஞானச்

சேற்றில் அழுந்தாமையாலும், அது கற்பிற்சிறந்த அணங்கினது நடையைப் பழகிக்கொள்ளுவதுபோல இவனும் பெரியபிராட்டியாருடைய § நடையை அனுசரிப்பதனாலும், அது தாமரை யிலையைக் குடையாகத்தரிப்பதுபோல, இவனும்பதும்பத்திரம்போன்றசாமளவர்ணமான பெருமாளுடைய திருமேனியை ஸம்ஸாரதுக்கமாகிற ஸூரியனுடைய தாபம்படாதபடி ஒதுங்க நிழலாகவுடையவனாதலாலும், அதனிடத்தில் சங்கங்களும் வண்டுகளும்ஜயகோஷமும்ரீங்காரமும் செய்வனபோல இவனிடத்தில்சுத்தஸ்வபாவரான பொரக்கிராகிகள் ஸ்துதிசெய்வதாலும், அதற்குச்செங்நெற்கதிர்கள் சாமரங்கள் வீசுவனபோல இவனுக்குப் பரிபக்குவரான ஞானவான்கள் அநுகூலவிர்த்திகளைச் செய்வதாலும், அது தாமரை மலரைச் சிங்காதனமாகப் பெற்றமைபோல இவனும் ஹ்ருதயகமலத்தை வாஸஸ்தானமாகப் பெற்றமையாலும், அது இரண்டு சிறகுகளினால் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பதுபோல, இவனும் ஞானம் கருமம் * என்னும் இரண்டு சிறகுகளினால் ஹ்ருதயாகாசத்தில் ஸஞ்சரிப்பதனாலும், மற்றுமுண்டான ஒப்புமையினாலும், ஜீவனை ஹம்ஸமென்று மேலோர் கூறுவர்

ஹம்ஸமென்னும் சப்தத்தில் அடங்கிய ஹ கார ஸ காரங்களாகிய இரண்டக்ஷரங்களில், ஹகாரம் ப்ரம்ஹத்தையும் ஸகாரம் ஜீவனையும் † குறிக்கும். அல்லது ஹகாரம் ப்ரம்மம் என்றும் ஸகாரம் பிரகிருதியென்றும், நடுவிலிருக்கிற பிந்து (0) அவ்விரண்டினது ஸம்பந்தத்தைக்குறிப்பதென்றும் சொல்லப்படும். ஆகையால் புருஷப்பிரகிருதிகளின் ஸம்பந்தத்தால் ஜீவனுக்கு ஹம்ஸம் என்கிற பெயர் வழங்குகிறது. அந்த ஹம்ஸரூபியாகிய ஜீவனே இந்தச்சரீரத்தில் பந்திக்கப்பட்டிருக்கிறவனென்று யோகசாஸ்திரங்கள் கூறும். அது எப்படியெனில், ஜீவஹம்ஸமானது ஒன்பது வாயில்களோடு கூடிய சரீரமாகிய பட்டணத்தில் பிரவேசி

§ அனன்னியார்ஹ சேஷத்துவம், புருஷகாரவைபவம்" முதலியன

* உபாப்யாமேவ பக்ஷாப்யாம் யதா கே பக்ஷிணாம் கதி: ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் - இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே -

† ஹகாரோ ப்ரஹ்ம இத்யாஹு: ஸகாரோ ஜீவ உச்யதே - ப்ருகுஸம்ஹிதை

த்துத் தசேந்திரியங்களோடும் தசவாயுக்களோடும் மனதோடுங் கூடி, கூட்டுக்குள் அகப்பட்ட பக்ஷியைப்போல அகப்பட்டுக் கொண்டு, வெளியில்ஸஞ்சரிப்பதற்குஉபாயமறியாமல், அனேகவி தங்களாகிய ஸுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஜீவஹம்ஸம் சூரியசந்திரமண்டலங்களை (உசுவாஸ நிசுவாஸங்களை) இறகுகளாகவும், ப்ரணவத்தைச் சிரசாகவும், ஞானக்கண்ணை முகமாகவும், ஹ-ஸ-என்னும் இரண்டக்ஷரங்களையும் பாதங்களாகவும் உடையதாய், கட்டையில் அக்கினிபோலவும், எள்ளில் எண்ணெய்போலவும், பாலில்நெய்போலவும், ஹ்ருதயகமலமாகிய *ஸஹஸ்ராரகமலத்தை ஆஸ்ரயித்துக்கொண்டிருக்கும். ஸஹஸ்ராரம் என்பது ஆயிரம் சின்னதளங்களையுடைய ஓர் கமலம். இந்த ஆயிரம் தளங்களை எட்டினால் பாகித்தால் பாகமொன்றுக்கு நூற்றிருபத்தைந்து சின்னரேக்குகளையுடையஒரு பெரிய தளம் ஏற்படும். இப்படிப்பட்ட தளங்கள் இந்தக் கமலத்தைச்சுற்றி எட்டுத்திக்குகளிலும் எட்டு §தளங்களிருக்கும் அவற்றுள் கிழக்குத்தளம் வெண்மைவர்ணமுடையது, ஆக்கினேயதளஞ்செகப்புநிறமுடையது, தெற்குத்தளம் கருமைநிறமுடையது, நைருதிதளம் நீலவருணமுடையது, பச்சிமதளம் பளிங்குநிறமுடையது, வாயவியதளம் மாணிக்கவருணமுடையது, உத்தரதளம் பீதவருணமுடையது, ஈசானியதளம் வைடூரிய வருணமுடையது. இந்த தளங்களின்மீது ஜீவஹம்ஸமானது ஸஞ்சரித்துக்கொண்டு ஸுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும். அது கிழக்கு தளத்தில் ஸஞ்சரிக்கும்போது பக்திபூர்வமான தருமபுத்தியையும், ஆக்கினேயதளத்தில் ஸஞ்சரிக்கும்போது நித்திரை ஆலஸ்யங்களையும், தெற்குத்தளத்தில்வரும்போது குரூரமும், நைருதிதளத்தில் சேரும்போது பாபகரும சிந்தையும், மேற்கு தளத்தில் வரும்போது கிரீடாவிநோத புத்தியும் வாயவியதளத்தில் வரும்போது கமனசஞ்சல வைராக்கியமும், வடக்குத்தளத்


* ஹம்ஸோபநிஷத் ப்ரஹ்மோபநிஷத் த்யானபிந்தூபநிஷத்து. மேற்கூறிய யாவும் இவ்வுபநிடதத்தில் காண்க.

§ ஹ்ருதயகமலத்தின் தளங்களும் நிறங்களும் ஜீவஹம்ஸம் அவற்றில் ஸஞ்சரிக்கும் கிரமமும் தியானபிந்து உபநிஷத்தில் விவரிக்கப்படுகின்றன.

தில் வரும்போது சிங்கார சுகசிந்தனையும், ஈசானதளத்தில் வரும்போது திரவியதானக் கிருபாபுத்தியும், மத்தியத்தில் வரும்போது வைராக்கியோபசாந்த விர்த்தியும் அடைந்து, கேசரங்களில் நிற்கும்போது விழிப்பையும் அனுபவித்துக்கொண்டிருக்கும். இந்தப்படி ப்ரணவாங்கமான ஜீவஹம்ஸமானது பஞ்சவாயுக்களுடன் சேர்ந்து ஆறு ஆதாரங்களாகிய கமலங்கள்மேல் அல்லும்பகலும் இருபத்தோராயிரத்து அறுநூறு தடவைகள் *நிர்ணயப்பிரகாரம் ஸஞ்சரித்துக்கொண்டும், கூட்டில் அடைக்கப்பட்ட பக்ஷியைப்போல சரீரத்தில் அகப்பட்டுக்கொண்டு வெளியேபோக வழியறியாமல் சுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும். இந்த உடம்பில் இதற்கு எதுவரைக்கும் அபிமானமிருந்துகொண்டிருக்குமோ அதுவரைக்கும் அதற்கு அஞ்ஞானம் நீங்காது, பந்தம் ஒழியாது, துயரம்போகாது, ஜனனமரணங்கழியாது, ஆத்மானந்தாபிவிர்த்தி யுண்டாகாது. ஆத்மானந்தாபிவிர்த்தியெதுவோ அது தான் இதற்கு உஜ்ஜீவனம். அந்த அபிவிர்த்தியோ பரமகுருவாகிய ஸர்வேசுவரனால் உண்டாக்கப்படவேண்டியது. ஜீவனுக்கு அப்படிப்பட்ட ஞானாபிவிர்த்தியின்பொருட்டு பகவான் செய்யும் முயற்சி யெதுவோ அதுதான் அந்தர்முகமாக அறியப்படுகிற ஸ்ருஷ்டி. அந்த ஞானாபிவிர்த்திக்கிரம ஸ்ருஷ்டிக்கோலத்தை சேதனொஜ்ஜீவனார்த்தமாக ஹம்ஸவாகன உத்ஸவத்தால் ஸர்வேசுவரன் அறிவிக்கிறாரென்பதாம்,—விரிக்கிற்பெருகும்.

* [illegible]

[illegible]



சூரியப்பிரபாகாரத்திருக்கோலம்.

இரண்டாநாள்காலை
ஸூரியப்பிரபாகாரதிருக்கோலம்.*

உதயநெடு வரையினி லுதித்து விண்ணேறிமற்
றுவமை யில்லாது தோன்றி
ஒளிவீசி வனசமல ருளமகிழ நற்கரும
மோங்கவுயிர் சா சியாகிச்
சதியிரு ளகற்றியே பொறிபுல னடங்கிடத்
தானிலகு மாதவன்போல்
தருபுருவ நல்விலாதாரவரை யெழுந்து
தகர வானேறியாங்கே
சகலேந்திரியகமல மலர்வாய் மலர்ந்திடத்
தானழிவுறு துமின்னிச்
சாற்றுமவ்விந்திய விருத்திகட் கொப்பிலாச்
சாட்சியா யாணவாதி
மிதியிரு ளகன்றருட் டெரிசனம் விளங்கவரு
மெய்ஞ்ஞான பாற்கரனே
வேங்கடத் தெந்தையே மேவலறி வித்தாயென்
வேங்கடங் கோயில்கொளவே.

வி - ம்-:—இது வ்ருத்திக்கிரம ஸ்ருஷ்டியில் ஸ்திதி காரியத்தைக்காட்டுகிற திருக்கோலமென்பார் மேலோர். ஸ்ரீமந்நாராயணன் ஸூரியமண்டல மத்தியவர்த்தியாயிருந்துகொண்டு செய்யும் ஜெகத்ரக்ஷண வியாபாரத்தையும், அதனால் அறியப்படுகிற அத்தியாத்துமதத்துவத்தையும் ஸூர்யப்பிரபா உத்ஸவவியாஜத்தால்காட்டுகிறார். ஸூரியமண்டலமென்பது வேதமயமாயிருக்கிற தேஜோவிசிஷ்டமான ஓர்மண்டலவிசேஷம், எங்ஙனமெனின், வேதங்களில் சொல்லப்படுகிற காயத்திரி முதலான ஏழுசந்தஸ்ஸுக்களைக் குதிரைகளாகவும், காலசக்கரமயமான வேதசக்கரத்தையே ஒற்றைச்சக்கரமாகவுங்கொண்ட ரதத்தையுடையதாய், நக்ஷத்திரங்கள் முதலிய ஜோதிர்க்கணங்களின் ஒளியைச்சுருக்கி அக்கினியின் தேஜஸ்ஸுக்கும் சந்திரனுடைய அமிர்தத்துக்கும் உற்பத்திஸ்தானமாய், மந்தேகர் என்கிற ராக்ஷதர்களுக்கு ஜொலிக்கின்ற செந்தீயாய், அர்ச்சிராதியாகிற முக்திமார்க்கத்துக்குத் தலைவாசலுமாய், ஸர்வதிஷ்டி பூதனான ஸர்வேசுவரனுடைய கண்ணில் பிறந்து ஸகல லோகங்களுக்கும் ஒரு கண்ணாய், ஸர்வவிதமான அந்தகாரத்தை—ஒழிக்க வல்லதான

* இது ஸ்ரீரங்கத்தில் தை உத்ஸவத்தில் இரண்டாவது நாள் காலையில் நடத்தப்படுகிறது.

மகாதேஜோரூபமாய், வேதமயமுமானது ஸூரியமண்டலம். இதன்மத்தியிலே ஸ்ரீமந்நாராயணன் கிரீட ஹார கேயூர மகரகுண்டல சங்கசக்கரங்கள் முதலிய ஆபரணங்களேயும் ஆயுதங்களேயும் தரித்து, ஹிரண்மயமான (பொன்மயமான) திவ்ய திருமேனியும் சிவந்த ஒளியையுடைய தாமரைப்புஷ்பம்போன்ற திருக்கண்களுமுடையவராய், ஸரஸிஜாஸனத்தின்மேல் (தாமரைமலர் ஆஸனத்தின்மேல்) வீற்றிருந்துகொண்டு பகிர்முகத்தில் ஸமஷ்டி சூரிய சந்திர காந்திகளாலே அண்டங்களில் யாவற்றையும் தெரிசிக்கவெளிச்சம் தந்தும், சிருஷ்டியின் ஸம்ரக்ஷண வியாபாரமாய் விளங்கியும், ஜீவகோடிகளில் சூரிய சந்திரகலாவாசியாய்ப் பிரகாசித்து, அந்த ஜீவர்களுக்கு காலவரையளவும் அததற்கு உரிய சுகானந்த போகங்களேயும், தண்டனே அவஸ்தாதுக்கங்களேயும் அளித்து, ரக்ஷணஸ்வரூபியாயிருந்து ரக்ஷித்தருளுவர்.

அன்றியும், எப்படியானால் ஸ்ரீமந்நாராயணன் இந்த ஸூரியமண்டலத்திலிருந்துகொண்டு பகிர்முகத்தில்உதயகிரியில்உதித்து, ஆகாசத்தின் மேலேறி ஒளிவீசி, கமலங்களே மலர்த்தி, ஜீவகோடிகளின் ஸத்கருமங்களே நடத்தி, அவற்றுக்குஸாக்ஷியாகி, இருளே விலக்கி ஸமஸ்தவஸ்துக்களேயும் விசதமாக்கிப் பிரகாசப்படுத்துகிறாரோ, அப்படியே ஸகலமான ஜீவர்களிலும் ஞானசூரியனுக அந்தர்முகமாயிருந்துகொண்டு ஆதாரபர்வதசிகரத்தில் உதித்து, தகராகாசத்தின் மேலேறி, இந்திரியங்களாகிற கமலங்களே மலர்த்தி, அவிநாசியாய், அஞ்ஞானமாகிய அந்தகாரத்தைப்போக்கி, எங்கும் தேதீப்பியமானமாய்ப் பரவுகின்ற கிரணகலாபத்தையுடையவராயும் விளங்குவர். இப்படி அந்தர்முகமாக உபாஸகர்களிடத்தில் விளங்கும்போது பரிபாகதார தம்மியங்களாலே அவர்களுக்கு அஞ்ஞானமென்னும் இருளானது தனது இருப்பிடமாகிய அவித்யாகுகையில் படியும்; இந்திரிய வியாபாரங்களாகிற அல்லி, ஆம்பல் முதலிய புஷ்பங்கள் முகங்கள் குவிக்கும். ஜீவரூபமாகிய ஹம்ஸமானது மூலாதாரம் முதலிய கமலங்களின் மேலேறி திரிகூடம் என்றும் சிருங்காடகம் என்றும் சொல்லப்படுகிற இடைகலே பிங்கலே சுழிமுனே என்கிற நாடிகளுடைய ஸங்கமஸ்தானமாகிய திரிவேணி ஸங்கமத்தில் வீற்றிருந்து விளங்கும்; மனது என்னும் சந்திரன் பிரமானந்தக்கடலில் மூழ்கும். இப்படி அந்தர்முகத்தில் ஞானபாஸ்கர மத்தியவர்த்தியாய், ஆத்மோஜ்ஜீவனமார்க்க ரக்ஷணர்த்தமாக விளங்கும் ஸமயத்தையும் இந்த ஸூரியமண்டலாகார உத்ஸவம் உணர்த்துமென்று பெறப்படும். *

* இவ்வுண்மை "சீதாராமாஞ்சநேயம் முதலாம் ஆச்சுவாஸம் தாரக யோக விசாரத்தில்" விவரிக்கப்படுகிறது.

பகிர்முகத்தில் சூரியனுக்குச் சொல்லப்பட்ட காலபேதங்களாகிய மாலை, கங்குல், காலை, பகல் என்பனயாவும் அந்தர்முகத்தில் விளங்குகின்ற ஞானசூரியனுக்கும் கூறப்படும். எங்ஙனமெனின் ஞானத்தில் அன்யதாஞானம், விபரீதஞானம், யதாஞானம், தத்பலமான ஸாக்ஷாத்காரஞானம் என நான்கு பிறிவுகள் பெறப்படுகின்றன. அந்த நான்குபிறிவுகளையும் மாலை, கங்குல், காலை, பகல் என்னும்காலபேதங்கள் முறையே ராஜஸம், தாமஸம், சத்துவம், சுத்தஸத்துவம் என்பனவாற்றால் உணர்த்தும். அவற்றுள் மாலைக்காலமென்பது ஸாயோத்தரமாய் பதார்த்தங்கள் விசதமாகப்பிரகாசியாமல் யதாப்ரதிபத்திக்கு உறுப்பானஸந்தியாகாலம்; பதார்த்தங்களில் அந்யதாப்ரதிபத்திக்கு உறுப்பான ராஜஸஞானம் இதுவேயாம். கங்குலென்பது,—பதார்த்தங்கள் ஒன்றும் புலப்படாவண்ணமாய் ஏதேனுமொருகால் புலப்படினும் விபரீதமாகத் தோற்றும்படியாகிய திமிரோபஹதமான இராக்காலம்; இதுவே ஞாதவ்ய அர்த்தப்பிரகாசமுமில்லாமல் விபரீதப்பிரதிபத்திக்கு ஹேதுவான தாமஸஞானம். காலை(ப்ராம்ஹமுஹூர்த்தம)என்பது,—ஸத்வோத்தரமாய் இருள் நீங்கி வெளிச்செறித்து வருகிற ப்ராதக்காலம்; இதுதான் பதார்த்த யதாப் பிரதிபத்திக்கு அங்கமாக நிகழும் சாத்துவிக ஞானம். பகற்காலமென்பது,—பதார்த்தங்களைச் சமுசய விபர்யயங்கள் அற விசதமாகப் பிரகாசிக்குங்காலம். ஸமஸ்தகல்யாணகுண விக்ரஹ விபூதி விசிஷ்டனை ஸர்வேசுவரனை நன்றாக ஸாக்ஷாத்கரிக்கிற சுத்தஸத்துவஞானம் இதுவேயாம். இதனால் ஆத்மாநாத்மவிசாரத்தால் ஸ்தூல ஸூக்ஷ்மகாரணசரீரங்களை அநாத்மாவென்று நீக்கி அபரோக்ஷஞானம்பெற்று ஆசார்யசிசுரூஷைசெய்து அவர் அநுக்கிரஹித்த திருமந்திரார்த்தத்தைக்கேட்டு மனனநிதித்யாஸனத்வாரா அபரோக்ஷஞானமடைந்துவிளங்கும்காலத்தில் ஞானஞ்ஞானமிளித ஜீவனுக்கு அஞ்ஞானவிருள் சிறிதுசிறிதாக நீங்கலும், ஞான ஸூர்யோதயமாகும்போது தடாகத்தில்பக்குவமான பத்மம் இராக்காலத்தில் அதோமுகமாக இருந்து ஸூர்யோதயமமாத்ர விகஸித்து ஊர்த்துவமுகமாதல்போல அதிகாரியானஜீவனுக்குஇரவையொத்தஅஞ்ஞானகாலத்தில்விவேகமென்னும்அஷ்டதளபத்மம அதோமுகமாகவிருந்துபகிர்முகப்பட்டிருக்க,சுத்தஸ்வரூப ப்ரம்ஹஞான சூரியோதயமாகவே, அஞ்ஞானாந்தகாரம்நாசமாகி அதோமுகபகிர்விர்த்தியுடன் கூடியவிவேகபத்மம் ஊர்த்துவமுகமாகவிகஸித்து ஆத்மாபிமுகமாக நின்றவிவேக பத்மத்துடன் கூடி அநுபவிக்கிற ப்ரம்மானந்தாநுபவ ஸ்திதியாகிய தெசையைப்போதிக்குமென்பர் வேதாந்தியர். விசிட்டாத்துவைதியரோ, இதனைசுத்தஸத்துவமானசொரூபயாதாத்மியக்ஞான

தசையென்பார். இந்த ஞானபேதங்கள் யாவும் ஆசார்யஹ்ருதயத்தில் முதல் பிரகரணம் 23-வது சூர்ணையில் "முளைத்தெழுந்த ஸௌர்யதுல்யயாதாத்ம்ய சரமம்" என்னும் வாக்கியத்திற்குக்கூறிய வியாக்கியானங்களிலும், இரண்டாவது பிரகரணம் 56-வது சூர்ணையின் வியாக்கியானங்களிலும், கூறியவாற்றால் கண்டுதெளியப்படும்.

இரண்டாநாள் இராத்திரி

ஸிம்ஹவாஹநாரோஹணம்.‡

பொய்யென விலக்குமித் தனுகரண புவனாதி
போகமே தான்தனதெனப்
புகலவரு மாணவ மதங்கொண்ட வாங்கார
போர்க்கரி யடக்குதலினால்,
வெய்ய விந்த்ரியவிலங் காளலா விமையாத
மேனோக்க மமருகையினால்,
விபரீத நுண்ணிடை யோடிக்க முறலாற்சுழி
வியன்மலைக் குகையதாயிலலால்,
தொய்யலேய் சத்வவுணர் விலகலால் வெண்ணிறத்
தூய்மையோ டவியலலால்,
தோமிலாப் பெருமைபெறு கண்டீரவம்போன்ற
சுத்த சீவன்றனக்கோர்
மெய்யமர திட்டான மூர்த்தி நீயேயென
மிருகேந்த்ர வாகனவிழா
மேவி ரு முன்கோல மிடபாத்தி ரீசவென
திருவமிசை யருள்புரிகவே.

வி - ம்:—பிருகுமுனீந்திரர் முதலான பரமரிஷிகள் ஆகமங்களில் * அருளிச்செய்திருக்கிறபடி ஸிம்ஹவாஹநாரோகணம், இரண்டாவதுநாள் உத்ஸவமாகின்றது. இதுவும் ஸத்வத்திகிரம ஸ்திதிகோலத்தையே காட்டுமென்பது ஆகம முனீந்திரர் ஆகிய பிருகுமகாமுனீந்திரரின் துணிபு. ஸிம்ஹமென்பது மிருகங்களுக்கு அரசனாயிருக்கிற ஓர் போர் விலங்கு. இதுமிருகங்களுடைய பலாபலங்களை

‡ இத்திருக்கோலத்தைத் திருப்பதியில் கண்டுகொள்க. ஸ்ரீரங்கத்தில் இது மூன்றாநாள் காலை யுத்ஸவமாகின்றமை காண்க.

* [illegible]
[illegible]
[illegible]

அறிந்து அவற்றை அடக்கும் சக்தியையுடையது. மும்மதங்கொண்டு திரிகின்ற யானையினது மஸ்தகத்தைப்பிளக்க வல்லது. மேல் நோக்கங்கொண்டு களிப்பது. இடைசிறுத்தொளிர்வது. பருவத குகைகளிலே வாஸஞ்செய்வது. வெண்ணிறங்கொண்ட சரீரத்தை யுடையது, மற்றுமிவைபோன்ற பல லக்ஷணங்களைப்பெற்றுப் பெருமையும் கெம்பீரமும் ஆண்மையுங்கொண்டு விளங்குவது. இதனைத்தவத்தால் சிறந்த ஞானிக்கு ஒப்பாக மேலோர் கூறுவர். எங்ஙனமெனின், சிங்கமானது எப்படி மிருகங்களிற்சிறந்ததோ, அப்படியே அறிவில்லாமல் மிருகங்களைப்போல் திரிகின்ற மானிடர்களில் ஞானியானவன் அறிவினால் சிறந்தவன். ஏனையோருடைய ஞானஞ்ஞான பலாபலங்களை அறிந்து அவர்கள் தன்வயப்படும்படியான மகிமையையுடையவன். ஆணவமதம் காமியமதம் மாயாமதம் என்கின்ற மும்மதங்களையும் மேலிட்டுக்கொண்டு தானல்லாத தநுகரணங்களைத்தானென்றும், தன்னையல்லாதபுவனபோகங்களைத் தன்னையென்றும் மதிமயங்கிக்கெருவித்துத்திரிகின்ற அஹங்காரமாகிய யானையை அடக்கியாளவல்லவன். இமையாத மேல்நோக்கமாகிய நிஷ்டானுபூதியில் விளங்குபவன். வேதாந்தவிசாரணையினால் சமுசயமாகிய இடையைஒடுக்கமாக்கிக்கொண்டவன். சுத்தஸத்துவஞானத்தையே ஸ்வரூபமாகவுடையவன். ஆதாரபருவதகுகையில் அமைந்திருப்பவன். மற்றுமிவைபோன்ற லக்ஷணங்களையும் பெறுகின்றமையால் ஞானியைத் தவராஜசிங்க மென்று மேலோர் பெருமையால் கூறுவர்.

ஸிம்ஹம் (ஸிம்ஹ) என்னும்சப்தத்தில், ஸ காரத்துக்குப்பந்தனம் என்றும், ஹகாரத்துக்குக் கெடுத்தல்என்றும், பொருள்படுத்தி, ஸர்வேசுவரன் தனது அடியார்களுடைய பந்தத்தைப்போக்கி அவர்களை ஆட்கொண்டு அவர்களுக்கு அதிஷ்டாதாவாகத் தான் விளங்குகின்றமையால் அவ்விறையோன் சிங்கவாஹநாரோஹணன் எனப்படுகின்றனென்று பிருகுமுனீந்திரர் அருளிச்செய்வர். *

இதன் ஸாராம்சம்:—எப்படி சிங்கமானது ஸமஸ்தமிருகங்களையும் தன்னுடைய வசத்தில் வைத்துக்கொண்டு அவற்றுக்கெல்

---

* ஸ்காந்தே - உத்தரகாண்டே - "ஸிம்ஹ ஶீக்ஷிதவேஸ ஹரேர்-ரோஹந ஶப்த: | ஸகாரோ பந்தநம் ப்ரோக்தம் ஹகாரோ ஹநநம் ததா | ஸிம்ஹ இத்யபிதீயதே | ஶிஷ்யைஸ்ஸ ஸ்ரோஹணஸ்ஸதா து ஸிம்ஹாரோஹ இதி ||" இதி-

லாம்தான் அரசனாய்த் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்ய வல்லதாயும்,மகாவலிமையையுடையயானையையும்சொப்பனதரிசனத்திலேயேதலையெடுக்கவொட்டாமல் அடக்கவல்லதாயும்,பர்வதகுகைகளிலே வாஸம்செய்துகொண்டு சுத்தமான வெண்ணிறத் தூய்மையடைந்த சரீரத்தையுடையதாய், மூரிநிமிர்ந்துமேல்நோக்கமுற்றுக்களிப்படைந்திருக்கவல்லதாயுமிருக்குமோ, அப்படியே ஆசிரியனால் உபதேசிக்கப்பட்ட அஜபாமந்திரயோகத்தை அறிந்த ஒருவன் அதனை முறைதப்பாமல் அநுஷ்டித்து நிலைநிறுத்திக் கொண்டு, ஸமஸ்த இந்திரியங்களையும் தன்னுடைய ஸ்வாதீனத்தில் நிறுத்தி, அவற்றுக்கு எல்லாம் தானே அரசனாகி, தீயகுணங்களைவிலக்கி, நல்ல குணங்களைத்தழுவி, பேராணவ மதத்தைப்பேரில்லாமல் அடக்கி, சுழிமுனையில் அமர்ந்து சுத்தசொபாவனாய், இடைவிடாதமேனோக்கம் எப்போதும் உடையவனாய் இருப்பானாகில், இவன்பெற்றநிஷ்டானுபூதிமேன்மேலும் அபிவிர்த்தியைத்தருமென்கிறஉண்மையை“விர்த்தக்கிரம ஸ்திதிகோலமாகிய” ஸிம்ஹவாகனாரோகணத்தால் காட்டியருளுகிறாரென்பதாம்.




மூன்றாநாள் காலை

யாளிவாஹனாரோஹணம்.*



தனதுசெங் கோண்மைகண் டஞ்சியடி பணிகின்ற
தருவன விலங் கரசனாய்த்
தக்கன வுகந்தலா தனவொழித் தவையெலாந்
தனியம னத்திருக்கித்
தனகுமொப் புயர்வின்றி யிலகு முறைமையினின் று
தவறாது யாளியானே;
தருகரத் தாலதோ முகவாசி யூர்த்துவந்
தனிலூன்றி மகிழு மதனால்
புனிதவை ராக்கியப் போதகரு வீதுவெனாப்
போதரு மிதன் பொலிவுகாண்!
பூதலத் தோருமவ் வண்ணமுண் ணின்றுதம்
பொறிபுல னடக்கி நெறியால்
புனைதலரி வாசிதா ரணையநிச மொழியாது
பூர்த்துளம் பொங்குகவெனாப்

* இத்திருக்கோலத்தை ஸ்ரீரங்கத்தில் மூன்றாநாள் ராத்திரி உத்ஸவமாகக்கொள்வர்.



அநுமந்தவாகனுரோகணத்திருக்கோலம்.

போராளி மீதேறி வருமிறைவ னடிநிதம்
போற்றி யின்பம் பெறுவமே.

வி-ம். இது வ்ருத்திக்கிரம சங்காரகோலமாம். யாளியெ ன்பது ஓர் மிருகம். இதற்கு யாளி யானையென்றும் பெயர். இது மிருகேந்திரனாகிய சிங்கத்துக்கும் மேலதாய், ஆண்மையும், கெம்பீரமும், உபசாந்தியும், வைராக்கியமும் அடைந்திருக்கிற ஓர் சிறந்த மிருகம். இதன் பெருமையை அறிந்த மேலோர் இதனை வைராக்கியோபசாந்தி சாட்சி குருவென்பார். இது மிருகங்களில் புஜிக்கத்தக்கது எது, புஜிக்கத்தகாதது எது என்னும் பகுத்தறிவினையுடையதாய் விளங்கும். அதுபோலவே ஞானியும் ஸாராஸார விவேகஞானத்துடன் விளங்குவன். அது எல்லா மிருகங்களையும் தனது செங்கோன்மையில் அடக்கியாளும் தகைமையையுடையதாம். அப்படியே ஞானியும் ஜெகத்தைத் தன் வயப்படுத்திக்கொள்வன். அதற்கு ஜெகத்தில் யாதொன்றும் இணையில்லாமலிருப்பதால் மனங்களித்துத் திரியும். அவ்வண்ணமே ஞானியும் ஜெகத்தில் இணையில்லாமையைக்கண்டு பிர்மானந்தத்தில் சுகித்திருப்பன். அது எப்போதும் முறைபிறழாது நடப்பதுபோல ஞானியும் முறைதவறாது நடப்பன். அதுதன் தும்பிக்கையால் சுவாஸத்தைத் மேல்முகமாகக் கொண்டுபோய்ச் சிரசில் கும்பித்து வைத்துக்கொண்டு விளங்குவதுபோல ஞானியும் தும்பிக்கைபோன்ற சுழிமுனை நாடியில் அமைந்து ஊர்த்துவகும்பகத்தில் நிற்பன். இவ்வண்ணம் விலக்ஷணமான யாளியானை வைராக்கியோபசாந்தி போதகுருவென்னப்பட்டமையால் யாளியானையையொத்த ஆன்மஞானத்திற்கு மேலாக விளங்குகிற பரஞானம் ஞானாதீதசொரூபமாய் அகண்டாகாரமாய் விளங்குகின்ற உண்மை இதனால் குறிக்கப்படுகின்றதென்பதாம்.



மூன்றாநாள் இரவு

அநுமந்தவாஹநாரோஹணம்.

இத்தலந் தன்னிலநு மன்பெருமை புகலரிய
தெவருலகி லறியவலரோ!
ஏரார் மருத்தஞ்ச ஞதேவி யுறவாடி
யீன்றவ னதன்கருத்தோ
சுத்தகக ஞகிலோ பயபூத வுறவினிற்
றோன்றிடும் மனதென்பரால்

தோமிலா வம்மனச் செய்கையே பத்தியாய்த்
தோன்றுபய னிறைவனுங்காண்!
எதத்திறத் தாலுமா லோசிக்கு முழிபத்தி
யின்மிக்க தொன்றுமில்லை,
எண்ணைவழி வருதாரை போவிடை பெறுதுமன
மீசனடி பற்றலென்பார்,
தத்துவந் தெரிகிலா தழலுமுயிர் காலுவான
தானுமன் வாகனவிழாச்
சம்பிரம மருளுமலர் மேன்மங்கை நாதனடி
சந்ததந் துதி செய்வமே. *

வி-ம். அநுமந்தன் என்பதற்கு ஆகார பல தேஜஸ்ஸாக்கவென்றும், அந்த மூன்றும் யாதொன்றில் விளங்குமோ அதற்குப் பகவான் அதிஷ்டாதாவென்றும் ¶ பிருகு முனீந்திரர் தத்வங்கூறுவர். ஹகாரம் வியோமபீஜமென்றும், நகாரம் பலத்தைக் குறிப்பதென்றும், மகாரம் தைஜஸத்தைக்காட்டுவதென்றும், தகாரம் ப்ரம்ஹத்தை உணர்த்துவதென்றும், இந்நான்கு எழுத்துக்களுங்கூடி ஹநுமந்தனெனப்படுகின்றதென்றும், அவர் கூறிய நிர்வசு

* ஸ்ரீரங்கம் முதலிய சிலஸ்தலங்களில் இந்த உத்ஸவத்தை ஐந்தாவது நாள் ராத்திரி உத்ஸவமாக நடத்துவார்கள். பஞ்சராத்திராகமாசாரத்தை யவலம்பித்த காஞ்சீபுரத்திலும் வைகானஸ ஆகமத்தைக் கடைப்பிடித்த திருப்பதி முதலான வடநாட்டு ஸ்தலங்களிலும் மூன்றுநாள் ராத்திரி உத்ஸவமாக நடத்துகிறார்கள். பிருகுமுனீந்திரர் இதனை மூன்று நாள் ராத்திரி உத்ஸவமாகவே கூறுகின்றார். இது விர்த்தக்கிரம ஸம்ஹார திருக்கோலத்தைக் காட்டுவது.

* வைகாநஸே - [illegible] - [illegible]
[illegible]
[illegible]

[illegible] ||

¶ ஸ்ரீ [illegible]
[ஷி:?]| ஹகாரம் வ்யோமபீஜம் ஸ்யாத்| நகாரம் [பலமுச்யதே?]| மகா-
ரம் தேஜஸம் [ப்ரோக்தம்?]| தகாரம் [ப்ரஹ்மவாசகம்?]| [illegible]
[illegible]
[illegible]
[illegible] - இதி ஸ்ரீவைகாநஸ [illegible] ஸம்ஹிதா-
[illegible]

னத்தால் இவ்வுண்மையை விவேகிகள் அறிந்துய்வார்கள். இதனை அந்தர்முகமாக ஆலோசிக்குமிடத்து, ஆகார பல தேஜஸ்ஸுக்களுடன் கூடி விளங்குவது மனது என்று உணரப்படும். அத்தகைய மனது அஞ்ஞானத்தால் சஞ்சலத்தை அடைந்து குரங்கினது சுபாவத்திற்குச் சமமாக விளங்குகின்றது, எப்படி குரங்கானது இடைவிடாத சேஷ்டைகளையுடையதும், இருந்தவிடத்திலிருக்காமல் ஓடித்திரிவதும், ஒரு கிளையிலிருந்து வேறோர் கிளையில் தாவுவதும், பிடித்த பிடியை விடாததுமாயிருக்குமோ, அப்படியே மனதும் என்றுந எண்ணங்களை எண்ணிக்கொண்டு ஸதாசேஷ்டைகளை உடையதாயும், ஒரு விஷயத்தைப்பற்றி நிற்கும்போது அதனை விட்டு வேறொரு விஷயத்தில் வேகமாய்ப் பாய்வதாயும், பலவகையான எண்ணங்களால் பலவிஷயங்களில் திரிவதாயும், தனக்கு இஷ்டமான விஷயம் ஏதாகிலும் நேரிட்டால் அதனைப் பிடித்தபிடி விடாததாயுமிருக்கும். ஆகையால் மனதானது குரங்குக்கு உவமையானமை ஸர்வஸம்பிரதிபன்னமேயாம். "மனஏவமனுஷ்யாணாம்காரணம்பந்தமோக்ஷயோ:" என்று பகவற்கீதையில் கூறியபடி, பந்தம் மோக்ஷம் என்னுமிரண்டிற்கும் மனமே காரணமாகின்றது. இதுவே நமக்குச்சத்துருவாயும் மித்துருவாயு மிருக்கின்றது. எப்போது மோக்ஷமார்க்கத்துக்கு உதவியாகின்றதோ, அப்போது மித்துருவென்றும், எப்போது பந்தமார்க்கத்திலிழுக்கின்றதோ, அப்போது சத்துருவென்றும் அறியப்படுகின்றது. ஆதலால் இதன் சுபாவத்தை அறிந்தவர்கள் இதனைக் குரங்குக்குச்சமமென்று கூறுவார்கள். ஆஞ்சனேயரானவர், சுபாவத்தில் குரங்கானபோதிலும் மற்றைக்குரங்குகள் போலாகாமல் பிருகுமுனீந்திரர் கூறுகிறபடி பக்தியிற்சிறந்த ஆகார பல தேஜஸ்ஸுக்களையுடையவராய் விளங்குவதுபோல, குரங்கினது சுபாவத்தையடைந்திருக்கிற மனதானது பக்திமார்க்கத்துக்கு உதவியாய், பக்திசம்பந்தமான ஆகார பல தேஜஸ்ஸுக்களுடன் கூடி விளங்குவதை நோக்கி அநுமாருக்குச் சமமாகச் சொல்லப்படுகிறதென்பார்.

ஆஞ்சனேயரானவர் அஞ்சனாதேவியாருக்கும் வாயுபகவானுக்கும் பிறந்து ஓர் வடிவினையுடைவராதல் போல, மனதானது ஆகாசவாயுக்களின் ஸம்மேளனத்தால் பிறந்து, சுத்தஸத்துவ ஆகார பல தேஜஸ்ஸுக்களைப்பெற்று, பக்திமார்க்கத்துக்குப் பெரிய ஸாதனமாய், மோக்ஷோபாயத்துக்குத் தக்கதுணையாய் விளங்குகின்றமையால் மனதின் காரியமாகிற பக்தியையே ஆஞ்சனேயரென்றும், அந்தப்பக்திக்குப் பலரூபமாய் விளங்குகிறவர் ஸர்

வேசுவரனே யென்றும், இந்த உத்ஸவவியாஜத்தால் காட்டியருளுகிறதாக பிருகுமுனீந்திரரின் திருவுள்ளம். அஞ்ஞானக் குரங்குகளின்காரியம் சேஷ்டையாகவும் ஆஞ்சனேயரின்காரியம் பக்தியாயுமிருத்தல் எப்படியோ, அப்படியே ஞானஸம்பந்தமான மனதின்காரியம் சுகத்தைத்தருகின்ற பக்தியாய்இருக்கும். ஆகையால் இந்தமனது துயரத்தைத்தரும்போது கேவலகுரங்குக்கும், சுகரூபமான பக்தியைத்தரும்போது ஆஞ்சனேயருக்கும் சமம். தொடர்புடையார் மாட்டுச்செல்வதாகிய மனநிகழ்ச்சியே பக்தியென்கிற அன்பு. அது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். அரக்கானது வெய்யிலின் முன்னிருந்து வெதும்புதல் போல்வது மந்ததரபக்தி. மெழுகானது வெய்யலுக்கு எதிர்ப்பட்டபோது உருகுதல் போல்வது மந்தபக்தி. நெய்யானது சூட்டுக்கு இளகுதல் போல்வது தீவிரபக்தி. தைலமானது சிறுதும் இடையறாமல் ஒழுகுதல்போல்வது தீவிரதரபக்தி. தான் என்பதும் தனது என்பதும் நீங்கி வசமழிந்து பரவசப்பட்டிருப்பதே பக்தியென்கிற அன்புக்கு லக்ஷணம். சூரபத்மன் இறந்தானென்று கேட்டமாத்திரத்திலேயே அவன் மனைவி பத்மகோமளை வசமழிந்து உயிர்துறந்ததனால் * உத்தம அன்பு தெளியப்படும். இதற்கு ஆணும் பெண்ணும் இணைபிரியாத அன்றில் பறவையுஞ் சான்றாம். நாயகனோடு இறந்தார் சொர்க்கஞ் சேருவரென்று நாயகன் தேகவியோகமாகும்போது நாயகி சககமனஞ்செய்வது மத்திமம். இவ்விரண்டுமல்லாதது அதமம். இப்படி நாயகியானவள் நாயகனுடைய பெயரைக் கேட்டவுடன் வசமழிதல் உத்தமமும், அவனைக்கண்டவுடன் வசமழிதல் மத்திமமும், அவனைக்கூடினபிறகு வசமழிதல் அதமமுமாம். அவ்வாறே பக்குவமான ஜீவாத்மா ஆத்மநாயகராகிய பகவானுடைய பெயரைக்கேட்டவுடன் வசமழிதல் உத்தமபக்தியும் அவரைக் கண்டவுடன் வசமழிதல் மத்திமபக்தியும், அவரைக்கூடினவுடன்வசமழிதல் அதமபக்தியுமாம். நாயகனது பெயரைக்கேட்டவுடன் வசமழிதலாகிய தலையன்புடைய நாயகிக்கு அது கேட்பதும் காண்பதும் நிகழ்ந்தவழி, முறுகிவளருகின்ற அன்பின் பெருக்கம் இப்படிப்பட்டதென்று கூறுதல் கூடாததுபோல, ஆன்மநாயகராகிய ஸர்வேசுவரனுடைய திருநாமத்தைக் கேட்டபோது வசமழிகின்றவர்களுக்கு அவரைக் காணுதலும் கூடுதலும் நிகழ்ந்தவழி, முறுகிவளர்கின்ற தீவிரதரமான பக்தியின் பெருக்கத்தை இத்துணைத்தென்று கூறுதல் கூடாதன்றோ! தீவிர

* இது ஸ்காந்த புராணவரலாறு.



சந்திரமண்டலாந்தர்க்கத திருக்கோலம்

தரமான உத்தமபக்தியே அத்துவித நிலையை விளக்கும். அத்தகைய பக்திக்குச் சித்தவிருத்தி நிரோதமும், தைலதாரையைப் போல இடையறாததியானமும் வேண்டுமாகையால் ஆன்மஞானாபிவிர்த்தியின் பொருட்டுச்சகலேந்திரிய ஜெயத்துடன் இடையறாத பக்திப்பெருக்கை அடைந்தவர்களுக்குப் பகவான் பலரூபமாய் விளங்குகின்றார் என்னும் உண்மையை அனுமந்தவாகனாரோகணத்தால் பரமபதியானவர் காட்டியருளுகிறாரென்பதாம்.

நாலாநாள் காலை உத்ஸவம்

சந்திரப்பிரபாகாரசேர்வை. *

காமமுத லாயவறு பறவையார்ப் பழியவுங்
கருது தேகாபிமானக்
கதிரவன் மறைபவிர் தியகமல முகிளிதங்
காட்டி நித்திரைகொண்டிட,
நேயமிர் மலமான தச்சகோ ரங்கண்டு
நிகழாவல் வெம்மைதணிய,
சிகரிலான் மாகார வ்ருத்தி கைரவநிசய
நேசித்து வாய்மலர்ப்ப,
வமமேய் விஞ்ஞான விண்மீன் விளங்கலோ
டியலு மருடெருணைத்
திணையகல வும்ப்ரபஞ் சாதீக நினைவாய
விரவுவர விதயவான்சிற்
சோமவட் டத்ததிட் டானசீர் மூர்த்தியாய்த்
தோன்று மெம்மானருளிவண்
தோமிலாச் சிகரமணி வடவேங் கடத்துளே
தூய வெழிலுலவுமாதோ.

வி-ம். முதல் மூன்றுநாள் உத்ஸவங்களால் வ்ருத்திக்கிரம ஸ்ருஷ்டியின் உள்விவரம் காட்டப்பட்டது. லக்ஷ்மீ தந்தி

---

* ஸ்ரீரங்கம் தைஉத்ஸவத்தில் இது நாளாநாள்காலை உத்ஸவமாகவும், காஞ்சிபுரத்தில் நாலாநாள் இராத்திரி உத்ஸவமாகவும் நடத்தப்படுகின்றது.

ரம் † என்கிற ஸ்ரீபாஞ்சராத்திர நூலில் கூறியபடி பகவான் தமது சக்திவிசேஷத்தால் ஸ்ருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோதானம் அனுக்கிரகம் என்னும் பஞ்சகிர்த்தியங்களை எப்படி நடத்துகின்றாரோ, அப்படியே ஜீவனும் பஞ்சகிருத்தியங்களை நடத்துகின்றான் என்றும், அவற்றுள் விஷயங்களைப் பற்றுகின்ற சித்தவிர்த்தியைச்சிருஷ்டியென்றும் விஷயங்களில் பற்றுண்டாகித் தடிப்பேறிய சித்தவிர்த்தி ஸ்திதியென்றும், விஷயங்களில் செல்லாமல் மறுத்து ஒடுங்கியிருக்கும் சித்தவிர்த்தியைச் சங்காரமென்றும் தத்துவ வித்தமர்கள் கூறுவார்கள். ஆகையால் ஆத்துமஞானவிர்த்தியின்பொருட்டுப் பற்றுகின்ற சித்தவிர்த்தியே ஸ்ருஷ்டியாகும். அந்த ஞானம் தடிப்பேறும்படி அதில் நிலைபெற்று நிற்கின்ற சித்தவிர்த்தியே ஸ்திதியாகும். அதனைத் தடுக்கின்ற விரோதவிர்த்திகளை மறுத்து அந்த ஞானம் தனக்குள்ளேயே ஒடுங்கிநிற்கச்செய்வது சங்காரம். இப்படி ஆத்மஞானவிர்த்தியின் பொருட்டுச்செய்யும் சிருஷ்டியில் உள்ள க்கமாகிய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை முதல் மூன்று உத்ஸவங்களால் காட்டி, நடு மூன்று தினங்களின் கிருத்தியமாகிய ஸ்திதி காரியத்தைப்பிரகாசிப்பிக்கத்தொடங்கி, அதில்முதலாவது கிருத்தியமாகிறஸ்திதியின் ஸ்ருஷ்டியைச் சந்திரப்பிரபா திருக்கோலத்தால் காட்டியருளுகிறார்.

வ்ருத்திக்கிரம ஸ்ருஷ்டியில் ஸ்திதி காரியத்துக்கு எப்படிச் சூரியமண்டலம் சாதனமாகின்றதோ, அதுபோலவே விர்த்திக்கிரம ஸ்திதியில் செய்யவேண்டிய ஸ்ருஷ்டி காரியத்துக்குச் சந்திரமண்டலம் சாதனமாய்விளங்குகின்றது. உலகத்தில் ஸகலமும் சந்திரனுடைய அமுதகிரணத்தால்தழைக்கும். இவ்வுண்மை "ஸோம ராஜந்பாரயாமஸி" என்னும் சுருதியில் ஓஷதிகள் யாவும் சந்திரனை நோக்கி "ஓ ராஜனே உன்னுடைய அமுதகிரணத்தால் நாங்கள் உயிர்பெற்று வாழ்கின்றோம்" என்றுகூறியதாற்றானும், இக்காலத்து யுக்திவாதிகள் (Scientists) கூறும் ஹேதுக்களாலும் ஸர்வஸம்பிரதிபன்னமேயாம். இப்படி ரக்ஷணரூபியாகிய சந்தி

† [illegible]

ரனுக்கும் சூரியனே காரணமென்று சூரியப்பிரபா உத்ஸவத்தில் முன்னமே விவரித்தோம். இங்கு ஸ்திதிகாரியத்தில் முதல் கிருத்தியமாகிய § ஸ்ருஷ்டியைச் சூரியன் மறைந்துநின்று (திரோபாவத்தையடைந்து) சந்திரன் மூலமாய்த் தானேசெய்கின்றமையால், சந்திரனை நான்காவது உத்ஸவத்தில் எடுத்துக் கூறியவாறென்று இதனால் அறியற்பாலதாம். இப்படி ஸௌரியசந்திர மத்தியகதநிலையாலே ஞானக்கினிப்பிரகாசமாய் விளங்கி அண்டமண்டலமெங்கும் பிரகாசிப்பதற்கு முறையே பகலிலும் இரவிலும் உஷ்ணசீதளப்பிரகாசங்களை வீசியும், அதனால் யாவற்றையும் தெரிசிக்க வெளிச்சம்தந்தும், ஸ்திதியாகாரமாய் விளங்குவதுமல்லாமல், சரீரத்திலே அந்தர்முகமாயிருந்துகொண்டு கலாஞானஸூக்ஷ்ம உஷ்ணசீதளங்களாகிய சூரியசந்திரப்பிரகாசமாய் விளங்கியும், இடைகலை பிங்கலை சுழுமுனை யென்கிற சூரியசந்திர கலாவாசியாய் நின்றும், காலாந்தம் வரையில் அவ்வான்மாக்களுக்கு உரியசுகபோகங்களை அளித்தும் நிற்பர் என்னும் உண்மைபெறப்படும்.

அந்தர்முகத்தில் சரீரத்தில் சந்திரன் விளங்குகிற தன்மையையும் சிறிது கூறுவாம்,—சூரியன் அஸ்தமித்தபிறகு உண்டாகும் சந்திரோதய காலத்தில் பறவைகளுடைய ஆரவாரம் அடங்குவதும், தாமரைமலர் முகம் குவிப்பதும், கைரவமலர் முகம் மலர்வதும், சக்கரவாகப்பறவை ஆணும் பெண்ணும் இணைபிரிவதும், நட்சத்திரங்கள் துலங்குவதும், சகோரப்பக்ஷி ஆனந்தம் அடைவதும், சந்திரிகை எங்கும் பரவுவதும், உஷ்ணம் தணிவதும், குளிர்ச்சியுண்டாவதும், ஆனந்தம் ஜெனிப்பதும் எப்படியோ, அப்படியே ஸ்வரூப ஸாக்ஷாத்கார ஞானமாகிய சூரியப்பிரகாசத்தின் சரமதெசையான புருஷார்த்த ஞானமாகிற * சந்திரமண்டலம் சேதனர்களுக்கு அயதனஸித்தமாயும் † பகவத் பிரஸாதமாயும், ஆஹ்லாதகரமாயுமிருக்கும். இது ஞானத்தின் பிரகாசாதிசயம் மாத்திரமே சொல்லப்பட்ட சூரியனைப்போலாகாமல் ஞானத்தினுடைய யதார்த்தமான அவஸ்தையில் பரவசப்படுகின்ற

§ ஸ்ரீ [illegible] ஸம்ஹிதாயாம் “[illegible]”

* ஆசார்யஹ்ருதயம். † சரமாவதியான புருஷார்த்த ஞானத்தைச் சந்திரமண்டலமென்பார்கள். ஆசார்ய ஹ்ருதயம் முதல் பிரகரணம் 23வது சூர்ணையிலும் இரண்டாம் பிரகரணம் 57-வது சூர்ணையிலுங்கண்டுகொள்க. “சந்திரனை திருஷ்டாந்தமாக ஆழ்வார் அருளிச்செய்தது தமக்குப் பகவத்ப்ரஸாதமாகையாலும், அந்த ஞானந்தான் ஆஹ்லாதகரமாயிருக்கையாலுமிறே” என்னும் அவற்றின் வியாக்கியானத்தாலும் கண்டுதெளிக.

போக்கியதைகளாகிற முடிந்த அவஸ்தைகளைப் ‡ பிரகாசப்படுத்தும். எனவே, பிரணவத்தில் பிறந்த ஸ்வரூப யாதாத்மியத்துவத்தாலே மத்திம சரமபதங்களிலே உதிக்கும் பாரதந்திரியமும் போக்கியதையுமாகிற சரமங்கள் பிரகாசமாகும். ஞானதெசையில் அதுவே மேலாக விளங்கும் ஆகையால், அந்தஸ்வரூப ஸாக்ஷாத்கார ஞானம் சந்திரனுக்கு உவமையாகக்கூறப்பட்டமைகாணக. அத்தகைய சந்திரமண்டலம் உதயமாகும்போது ஸ்வாதந்திரிய ஞானமாகிய சூரியன் மறைவதும், அரிஷட்வர்க்கங்களாகிய காமக்குரோதங்கள் முதலானபறவைகளின் ஆரவாரம் அடங்குவதும், ஸலயவிக்ஷேப கஷாய ரஸாஸ்வாதாதிகளாகிற கமலங்கள் முகங்கூம்புவதும், வித்தை அவித்தையென்கிற சக்கரவாகபட்சிகள் புணர்ச்சி நீங்குவதும், விஞ்ஞானமாகிற நட்சத்திரம் துலங்குவதும், பரபக்தி பரமபகதிகளாகிறசகோரப்பட்சிகள் களிப்படைவதும், விவேகமாகிறநிலவு எங்கும்பரவுவதும், ஆசையாகிறசெம்மானம் மறைவதும், தத்துவ வேத்தர்களுக்கு அனுபவவேத்தியங்களேயாகும். இப்படிப்பட்ட அந்தர்முக சந்திரமண்டலதெரிசனத்தையும், அதனால் அடையும் ஆனந்தத்தையும் எப்போது பெறுவமோ! என்று மேலோர் வேண்டாநிற்பர் எங்ஙனமெனின்;—

"நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள்
காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள்" *

"விண்ணவன் தானென்னும் விரிநிலாமண்டபத்தில்
தண்ணீரருந்தித் தளாவொழியநெந்நாளோ"


விண்ணோர்நிலவுதவழ் மேடையிலெல்லாருமுற
மண்ணானவீட்டிலென்னைவைத்ததென்னே பைங்கிளியே!" §

[illegible] ‡

என்று சான்றோர்கள் ஏககண்டமாகக் கூறுமாற்றால் கண்டுதெளிக. இப்படி யாதொரு ஞானம் புருஷார்த்தப் பிரகாசமாய் விளங்குமோ அதுமேன்மேலும் அபிவிர்த்தியாகும்படியான விஷயத்தைச் சந்திரமண்டலஉத்ஸவத்தால் பகவான் காட்டியருளுகின்றாரென்பது உத்ஸவத்திற்கு அந்தரார்த்தமாகக் கொள்ளத்தக்கதாம்.

---

‡ பாரதந்திரியமும் போக்கியதையுமாகிற சரமங்கள் என ஆசார்யஹ்ருதயம்.
* திருமங்கையாழ்வார். § தாயுமானவர் ‡ விஷ்ணுபுராணம்



ஸ்ரீசேஷவாகனாரோகணத்திருக்கோலம்.

நாலாநாள் இரவு

சேஷவாஹனாரோஹணம்.

நினைவாதி நித்திரையி னீறாக யிடையறு
நின்றிலங் கிடுவதெது மேல்
நிலநீ ரனன்மருத் தாகாய மிந்திரிய
நிகர மழிவுற்ற தறுவாய்
நனவுட னொளிர்வதெது நாடுஞ்சுழுத்தியிலு
நாசமெய்தாததுமெது,
நவிலுமத் தொகையொழிந் தப்பாலு மழியாது
நலமிக்க மின்னுவதெது,
கனிவுற ப்ரத்யபிஞ் ஞைப்பெயர் புனைந்தது,
கால த்ரயத்துமுளதாம்;
கனைகொண்டு சேடித்த நிலைமையா லதனையே
கருதுமுழி சேடனென்பார்,
வனைமிகு மதற்கதிட் டானனிறை யோனிந்த
வகைநாக வகவிழவினால்
மாண்புபெறு மதுவறிந் திடபகிரி நாதனடி
வாழ்த்தி நற்கெதிபெறுவமே.

வி-ம். முதல் மூன்று உத்ஸவங்களால் ஸ்ரீஹரியினால் செய்யப்படுகிற விருத்திக்கிரம ஸ்ருஷ்டி ஸ்திதிசங்ஹாரங்கள் விவரிக்கப்பட்டன. இப்போது இந்த விர்த்திக்கிரமத்தில் அவர் செய்யவேண்டியவைகள் எல்லாவற்றையும்செய்து முடித்துவிட்டமையால் இனி அவருடைய நிர்ணயப்படியே எல்லாம் நிலைபெற்று நடந்துவருமென்று திண்ணங்கொண்டு அவற்றிலிருந்து தான் நிரோபவித்து போகசக்தியுடன் கூடி ஸுகித்திருக்கும் காலத்தை நான்காவது நாள் உத்ஸவமாகிய சேஷவாகனாரோகணத்தால் காட்டியருளுகிறார். அதாவது,—

சேஷன் என்பதற்குச் **சேடித்துநின்றது** என்று பொருள். வைகலமும் அழிந்துபோய்விட்ட காலத்தில் அழியாமல் மிச்சமாய் இருப்பது எதுவோ, அதுவே சேஷன் என்று சொல்லப்படுகின்றது. அதனையே ப்ரத்யபிக்ஞை † என்பார். இதுவே நன

* இந்தவாகனம் காஞ்சீபுரத்தில் நாலாநாள் காலைஉத்ஸவமாகநடத்தப்படுகின்றது. இதனைத் திருவரங்கத்தில் ஐந்தாநாள்காலையில் நடத்துவார்கள்.

† ப்ரத்யபிக்ஞை = ஸ்வஸம்ஜ்ஞா Humanself Consciousness.

வு கனவு சுழுத்தி முதலான அவஸ்தைகளிலும் நீங்காமல் இருப்பது. நித்திரையிலிருந்து எழுந்ததுமுதல் மறுபடியும் நித்திரை கொள்ளும் பரியந்தம் ஸகல ஜீவர்களிடத்திலும் விடாமல் அநுசரித்துக்கொண்டிருப்பதும், நிலம் நீர் தீ கால் வானாகிய பஞ்சமஹா பூதங்களும், சப்தஸ்பரிசரூப ரஸகெந்தங்களாகிய பஞ்சஸூக்ஷ்ம பூதங்களும், சுரோத்திரம், தொக்கு, சக்ஷு, ஜிஹ்வை, கிராணம், மனது முதலிய இந்திரியங்களும் அழிந்துபோய்விட்டகாலத்திலும் அழியாமல் நனவுமாத்திரமாய் விளங்குவதும், ஜாக்கிரச்சொப்பனங்கள் இரண்டும் நீங்கிச்சுழுத்திவந்து அடைந்தபோது எல்லாம் ஒழிந்துபோயினும் தனக்குமாத்திரம் எப்போதும் நாசமில்லாததும், சுழுத்திதசையும் ஒழிந்து துரியம்வந்து அடைந்தகாலத்திலும் கெடுதியை அடையாததும், எக்காலத்திலும் நலம் மிக்கதாய் விளங்குவதும், இதுவேயாம். இதுதான் ப்ரத்யபிக்ஞை என்னும் பெயரையுடையது. இப்படி எல்லாம் ஒழிந்தவிடத்தும் தான் மாத்திரம் அழிவையடையாமல் நிற்கும் நிலைமையால், சேடனென்று சொல்லப்படுகின்ற இதற்கு அனந்தனென்று மற்றோர் நாமமுமுண்டு. அகாரத்தினால் விஷ்ணுவையும், நகாரத்தினால் ருத்திரமூர்த்தியையும், தகாரத்தினால்ப்ரம்ஹதேவனையும், குறிக்குமாகையால் இவ்வெழுத்துகள்கூடி அனந்தன் எனப்படுகின்றதென்றும், எல்லாம் ஒழிந்தபின்னர் தான் மாத்திரம் சேஷித்திருப்பதால் சேஷனெனப்படுகின்றதென்றும், அப்படிச்சேஷித்து விளங்குமொருவனை யாதொரு ப்ரம்ஹம் அதிட்டித்துக்கொண்டு விளங்குமோ அதுவே சேஷசயனத்தின்மீது ஆரோஹித்துநிற்கும் பரம்பொருள் என்றும், அப்பரமாத்மாவே அந்தச்சேஷனைத் தூலவத் தனக்குப் பேசகசக்தியாகவுடையவராய் நிரோபாவ கிருத்தியமடைந்து விளங்குகிறாரென்றும், பிருகுமுனிகளாதியர் கூறுவர். * இதுவுமல்லாமல் யோக சாஸ்திரங்களில் கூறப்படுகிற சில அநுபவங்களைக்கொண்டு விசாரிப்போமாகில் இதன் உண்மை வேறொரு வகையாலும் அறியப்படும். எப்படியெனின்:—

* [illegible]

சரீர மத்தியஸ்தானமாகிற குதஸ்தானத்திற்குக்கீழே முக்கோணவடிவாகிய சக்கரம் ஒன்றுண்டு. அதற்கு மூலாதாரம் என்று பெயர். அந்த மூலாதாரம் முதல் ஸஹஸ்ரார சக்கரம் வரையில் ப்ரம்ஹதண்டி என்கிற பெயரையுடைய முதுகெலும்பு ஒன்றுண்டு. அது அஸ்திகளுக்கெல்லாம் ஆதாரமுடையது. மூலாதார சக்கரத்துக்குமேல் அந்த அஸ்தியில் குக்குடாண்டம்போல நாடிசக்கரமிருக்கும். அதற்குமேல் இலிங்கஸ்தானத்தில் ஸ்வாதிஷ்டான சக்கரம். அதற்குமேல் நாபிஸ்தானத்தில் மணிபூரக சக்கரம். அதற்குமேல் ஹ்ருதயத்தில் அனாகத சக்கரம். அதற்குமேல் கண்டஸ்தானத்தில் விசுத்திசக்கரம். அதற்குமேல் புருவமத்தியில் ஆக்ஞாசக்கரம். அதற்குமேல் சக்திசக்கரம். அதற்குமேல் வியாபினீ சக்கரம். அதற்குமேல் ஸமனீசக்கரம். அதற்குமேல் உன்மனீசக்கரம், அதற்குமேல் ப்ரம்ஹரந்திரம். இதுவே துவாதசாந்தம். இதனிடத்து ஸஹஸ்ரார சக்கரமிருக்கிறது. மூலாதாரம் முதல் ப்ரம்ஹரந்திரம் வரையில் வியாபித்திருக்கிற ப்ரம்ஹதண்டியானது கீழும் மேலும் வெட்டப்பட்ட மூங்கிலைப்போலவும் *தந்திகளுக்கு மூலமாயிருக்கிற வீணைத்தண்டம்போலவும் எல்லா நாடிகளுக்கும் மூலமாயிருக்கும். இந்தப் பிரமதண்டியின் கீழ்நுனியில் மூலாதார சக்கரத்திலிருக்கிற முக்கிய கோணமாகிய மத்தியத் திரிகோணத்தில் குண்டலினியெனனும் பெயரையுடைய ஓர் சக்தியுண்டு. இந்தக் குண்டலினி ஊர்த்துவ குண்டலினி, அதக்குண்டலினி அல்லது மூலகுண்டலினி யென இருவகையாய்விளங்கும். அது மூலாதாரத்தில் இருக்கும்போது மூல குண்டலினியென்றும், மேலாதாரத்தில் விளங்கும்போது ஊர்த்துவ குண்டலினியென்றும் பெயர்பெறும். இது ஜீவனை

---

* குண்டலினியைக் குறித்து உபநிடதங்கள் விசதமாகக் கோஷியாநிற்கும். அவைவருமாறு:—

[illegible] ॥ என்று யோகசிகோபநிடதம் 5-ம் அத்யாயத்திலும், [illegible] ॥ என்று ஷை உபநிடதம் 4-வது அத்தியாயத்திலும் கண்டுகொள்க

ன்றும் லக்ஷணத்தையுடையதும், தாமரை நாளத்தினது நூல் போல மிகவும் ஸூக்ஷ்மமான ரூபத்தையடைந்ததும், பஞ்சப்ராண வ்ருத்திகளையே ஐந்து முகங்களாகக்கொண்டதும், பாம்பினுடைய வடிவத்தை யடைந்ததுமாய் விளங்கும். இந்தக் குண்டலினிச் சக்திக்கு வியஷ்டியில் நாககன்னிகையென்றும், ஸமஷ்டியில் ஆதிசேஷனென்றும் பெயர். இது அஞ்ஞான தசையில் மூலாதாரத்தில் தலையையும், மேலாதாரத்தில் வாலையும் வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். விஞ்ஞான தசையில் மேலாதாரத்தில் தலையையும், மூலாதாரத்தில் வாலையும் வைத்துக்கொள்ளும். இது ஜீவசைதன்னியத்துடன் கூடி அதோமுகமாய்ச் சேர்ந்து மூலாதாரத்திலிருக்கிற நாடிசக்கரத்திலுள்ள இதர நாடித்துவாரத்தை விடுத்து, சக்கரத்தைப் பாதியுடலால் எட்டுச் சுற்றாகச் சுற்றி, ஸுஷும்னு மோக்ஷத்துவார மார்க்கத்தைப் படத்தால் கெட்டியாக மூடி, மேல்நின்ற பாதியுடலால் ஜீவாதிஷ்டானம் விளங்குகிற ஹிரண்மய கோசம் என்கிற கமலத்தை அதோமுகமாக இழுத்துக்கொண்டு உத்தரமார்க்கமாக வாலைக்கீழேவிடுத்துப் படத்தாலேமேலே சுற்றி அணைத்துக்கொண்டிருக்கும் * இந்தக் கு

* [illegible] என்று திரிசிகிப்ராஹ்மணோபநிஷத்திலும் [illegible], என்று சாண்டில்யஉபநிஷத்திலும்.

[illegible] என்று யோககுண்டல்யோபநிஷத்திலும் [illegible] என்று சாண்டில்யோபநிஷத்திலும்கண்டுகொள்க.

ண்டலிச் சக்தியினுடைய விரிவு ஒடுக்கங்களே பிரபஞ்சத்தின் தோற்ற ஒடுக்கங்களாம். இதுவே ஞானோதய ஸாதனமாகிய ஸுஷும்னா நாடியை மறைத்து நிற்பது. பகவான் இதனைப் போகசக்தியாக வுடையவராய், திரோபவ கிருத்தியராகின்றார் என்பதாம்,

ஸாராம்சம்:—இந்த நான்காவது தினத்தில் நடக்கும் சேஷ வாகன உத்ஸவத்தால் ஸ்ரீஹரியினுடைய வ்ருத்திக்கிரம திரோபாவகோலம உணரப்படுகின்றதென்று இதுவரைக்கும் விரித்துரைத்தோம். ஆசாரியனையடைந்து அஜபாமந்திரயோக தீக்ஷையையடைந்தவன் அந்த முறைமையை நழுவவிடாமலகெட்டியாகப்பிடித்து விர்த்திசெய்து ஸம்பூரணமாக்கி போரானந்தத்தில் சுகித்திருக்கும தருணத்தை, அந்தர்முகத்தில்அறியப்படுத்துகிற வ்ருத்திக்கிரம திரோபாவமாம.



ஐந்தாநாள் காலை

பல்லக்கில் மோகினிவேஷம் என்கிற

நாச்சியார் திருக்கோலம்.



யாதொன்று சித்திர விசித்திரப் பிரபஞ்ச
மாயவடி வாகியுளதாம்,
யாதொன் றெழிற்சரா சரவிகக நரவிலங்
காதியுட லாகிவெளிறும்,
யாதொன் றுயிர்க்கெலா மறியாமை யாகியே
யறிவினை மயக்கவலிதாம,
யாதொன் றுதனமோக வலைவயப பட்டுழலு
மறிவிலார்க் கோ ரிழுக்காம்,
யாதொன்று பகவனரு ளாலன்றி யெஞ்ஞான்று
மவரவ ரெதிர்கக்கரிதாம்,
யாதொன்று மற்றுமுள விபரீத வேதுவாம்,
அது சடப்பிரகிருதிகாண்!
யாதொன் றிலங்கவெழி லிதயபரி பாகத்தி
லமலசிற் பிரகிருதியாய்
யாதொன் றுயிர்க்கருளு மதுநாச்சி யார்கோல
மாமது வறிந்துய்வமே!

வி - ம். ஸ்ரீரங்கநாதன் கலியில் பகவான் நாச்சியார் வேதைத்தைப்பூண்டு பலகையின்மீது சேர்வைதந்தருளுவர். இந்தத்திருக்கோலத்தைப் பாண்டியநாட்டு ஸ்தலங்களும் சோழநாட்டுஸ்தலங்களும்தவிர, தொண்டமண்டலத்தில் காஞ்சீபுரத்திலும், திருப்பதியிலும் வேறு சில வடநாட்டு ஸ்தலங்களிலும் காணலாம். இதனைவிர்த்திக்கிரம அனுக்கிரககோலமென்பார். பகவானுக்குப் போகோபகரணமாகிய பிரகிருதி சித்பிரகிருதி எனவும், அசித்பிரகிருதியெனவும் இரண்டுவகைப்படும். லக்ஷ்மீதந்திரம் * என்கிற பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் சொல்லுகிறபடி, பகவான் இந்தப் பிரகிருதியைக்கொண்டு ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, திரோதான, அனுக்கிரகங்கள் என்கிற பஞ்ச கிர்த்தியங்களையும் நடத்துகிறார்என்பார். யாதொன்று சித்திர விசித்திர ரூபமான பிரபஞ்சவடிவாயிருக்கின்றதோ, யாதொன்று தேவர், மனுஷ்யர், பசு, பக்ஷி, மிருகங்கள் முதலாகிய சரீரரூபமாய் விளங்குகின்றதோ, யாதொன்று ஜீவகோடிகளிடத்தில் அஞ்ஞானரூபமாய் ஞானத்தை மறைத்துக்கொண்டிருக்கிறதோ, யாதொன்று தனதுமோகவலையில் சிக்கிமயங்குகின்றவர்களுக்குக் கெடுதலையானதாயிருக்கிறதோ, யாதொன்று ஸர்வேசுவரனுடைய அநுஞையடையாவிடில் தன் முயற்சியால் ஒருவராலும் எதிர்க்கப்படுவதற்கு ஸாத்தியப்படாததாயிருக்கிறதோ, யாதொன்று மற்றுமுள்ள விபரீதங்களுக்கு ஏதுவாகின்றதோ, அதுவே ஜடப்பிரகிருதியென்று சொல்லப்படுகிறது. இந்த ஜடப்பிரகிருதியே ஜனங்களுக்கு ஞானத்தையுண்டாக்கும்போது அவரவர்சித்த பரிபாகஸமயத்தில்* சித்பிரகிருதிரூபமாயும் அனுக்கிரக சக்திரூபமாயும் அனுக்கி

* [illegible]

* "The laws which, so long as we are ignarant of them, may toss us from place to place, may break our plans may frustrate our endeavours, may bring our hopes to ruin, may lay us level with the dust — those very laws which treat us thus while we are ignorant become our servants, our helpers, and our uplifters when knowledge has replaced ignorance; subsequently the law which is a danger when not learnt, becomes a saviour, when known and understood" Laws of the Higher Life-by Anni Besant.



கருடவாகனரோகணத்திருக்கோலம்.

கஞ்செய்துகொண்டிருக்கும். இந்த அநுக்கிரககிருத்தியம் ஐந்தாவது கிருத்தியமாகையால் பகவான் சித்பிரகிருதி ரூபத்தை எடுத்து அநுக்கிரக கோலத்தை காட்டியருளுகிறாரென்பதாம். இத்திருக்கோலத்தைப் பல்லக்கின்மீது காட்டுவதென்னையெனின், ஜீவகோடிகள் அறுதியாக அகப்பட்டு உழலுகின்ற மாயா ஆவரணத்துக்குப் பல்லக்கு உவமையாகும். ஸர்வேசுவரன் அந்த மாயா ஆவரணத்துக்கு மேலே விளங்குகின்றவர் என்னும் உண்மைக்குப் பல்லக்கினுடைய மேன்முகடு அறிகுறியாகும். மாயையினுடைய ஆவரணவிக்ஷேபாதிகள் அவரை நமக்குத்தெரியவொட்டாமல் மறைக்குமென்னும் உண்மைக்கு, பல்லக்கில் கட்டிய குஞ்சங்கள் அறிகுறியாகும். அவித்தையானது அவரைத் தெரியவொட்டாமல் மறைக்குமென்பதற்குஆவரணமாகிய திரை அறிகுறியாகும். இருபக்கங்களிலுமுள்ள குஞ்சங்களால், அவர் ஜீவர்களுக்கு அகோசரமானவராயிருக்கிறார் என்பது உணரப்படும். பல்லக்கின் கணையில் தொங்குகின்ற குஞ்சங்களால் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்னும் † ஐந்தும் அறியப்படும். இப்படி அஞ்ஞமாயையில் கட்டுண்டு அவரை அறிவதற்குச் சக்தியற்ற ஜீவர்களுக்கு அவ்வுண்மையைத்தானே காட்டி அநுக்கிரகிக்கும் திருக்கோலத்தைப் பல்லக்குச்சேர்வை புணர்த்துமென்பதாம்.



ஐந்தா நாள் இரவு

கருடவாகனாரோகணம்



திரிவிருத் துச்சிரங், காயத்ரி நேத்திரங்,
தேகமுயர் சாம, மான்மா
திகழ்ஸ்தோம, மெக்கியா யக்ஞியம் வால். வாம
தேவியம் ப்ரகத் ரதந்த்ரம்
இருசிறகு, திட்டிணி மலர்ப்பத, மிலங்குபேர்
எஜுர்வேத, மொப்பிலுருவோ
ஏற்றுநான் மறைக. ளிவ்வுருவாகி நின்றுநனி
யின்பவி டினிதருளுமோர்

† பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளின் விவரணத்தை "க்ஷேத்திரகாண்டம்" 13, 14, 15ம்பக்கங்களில் கண்டுகொள்க.

கருடன்மீ தேறிவரு முன்கோல மெய்யடியர்
காணவவ ரறிவிலொளிருங்
கருதரிய சுழிமுனைப் பதமேவ விதுவெனுக்
கந்தமார் பூம்பொழில்கள் சூழ்
திருவேங் கடத்துறை யெந்தையே புள்ளூர்ந்து
சிற்றுயிர்க் கருள்புரிகுவோய்!
தினகர ஸகஸ்ரநிப சக்ரகர தலவெனது
சித்தநீ கோயில்கொளவே. *

வி - ம். கருடவாகனாரோகணத்தைத் திருவரங்கம்முதலிய தென்னாட்டு ஸ்தலங்களில் நாலாநாள் இரவிலும், காஞ்சீபுரத்தில் மூன்றாநாள் காலையிலும், திருப்பதி பொன்னேரி முதலிய சில வடநாட்டு ஸ்தலங்களில் ஐந்தாநாள் இரவிலும் நடத்திவருகிறார்கள். வைகானஸ ஆகமங்களில் சிலவிடங்களில் நாலாநாளிரவில் நடத்தவேண்டுமென்றும், சிலவிடங்களில் ஐந்தாநாளிரவில் நடத்தவேண்டுமென்றும் வேறுபட்டுக் கூறுகின்றன. ஆயினும் இங்

---

* சில ஆலயங்களில் ஐந்தாவது நாளிரவில் ஹனுமந்தவாகனத்தை நடத்துகிறார்கள். ஹநுமான் என்பது மனது என்றும், அந்தமனது அத்தியாத்தும தத்துவத்திற்கு உரிய பக்தியையுண்டாக்குவதென்றும், அநுமந்தவாகனத்திற்குப்பொருளுரைத்தோம். விகரிக்குமிடத்து ஹனு என்பது தாடை, அது மேல்தவடை கீழ்தவடையென இரண்டுவிதமாகும். இந்த இரண்டு தவடைகளும் சேர்ந்து வாக்கு ஸந்தியாகவும், ஜிஹ்வை ஸந்தானமாகவும் கூடி அத்தியாத்ம தத்துவம் பெறப்படும் என்று தைத்திரீய உபனிடதம் கோஷிக்கும். அத்தியாத்ம தத்வத்தை யுணருவதற்குக் கை,கால், தலை,மார்பு,வயிறு,துடை முதலிய உறுப்புகளுக்கு யோக்கியதை யில்லாமையாலும் அது மனதினாலேயே பெறப்படுகின்றமையாலும், அந்தமனதுக்கு ஸ்தானம் மேற்கூறிய தவடைகளும் ஸந்தியும் ஸந்தானமும் கூடிய இடமேயாகையாலும், அத்தியாத்ம தத்வத்தை யுணருவது மனதுஎன்றும், அந்தமனதே ஹநுமான் என்றும அறியப்படுகின்றமையை உணர்ந்து தெளிக.

அஞ்சனாதேவியாருக்கும் வாயுபகவானுக்கும் ஆஞ்சனேயர்பிறந்ததுபோல பஞ்சீகரண சாஸ்திரப்படி ஆகாசமும் வாயுவுங்கூடி மனது பிறந்ததென்பார் மேலோர். அதற்குப்பிரமாணம்:—

ஸம்ஸாரஸ்ய ... வாயு ... ஜாதே ... |
... ... ||
... ... || என்று விஷ்ணுபுராணத்தில் கூறியவாறு, ஆகாசவாயுக்களின் ஸம்மேளத்தினால் மனது உண்டானமை காண்க.

தாநாளிரவில் நடத்தவேண்டுமென்கிற பிரமாணத்தை § அநுசரித்தும், திருப்பதியில் ஐந்தாநாளிரவில் நடத்துகிற ஸம்பிரதாயத்தை ஆலோசித்தும், விஷ்ணுவுக்கு கருடன் எப்படியோ அப்படியே சிவபெருமானுக்கு இடபமாகையால் அவ்வுத்ஸவத்தைச் சிவாலயங்களில் ஐந்தாநாளிரவில் நடத்திவருகிற விதத்தைக் கருதியும், அனுக்கிரக கிருத்தியம ஐந்தாவது ‡ கிருத்தியமாகின்றதென்னும் லக்ஷ்மீதந்திர சாஸ்திர தத்துவத்தை யொப்பியும், இவ்வுத்ஸவத்தை ஐந்தாநாள் ராத்திரியுத்ஸவமாகக் காட்டியகாரணம் ஸம்ப்ரதிபன்னமேயாம்.

கருடவாகனாரோகணத்தை விர்த்திக்கிரம அனுக்கிரககோலமென்பார் மேலோர். அநாதிமாயையினால் கட்டுண்டு தன்னையுள்ளபடி அறியமாட்டாமல் மயங்கிநிற்கும ஜீவர்களுக்கு மாயையின் சொரூபத்தையும், தன்னுடைய சொரூபத்தையும் பலலக்குச்சேர்கையால் அனுக்கிரகித்து, தன்னையுள்ளபடி அறிவதற்கு சாஸ்திரம் ஸாதனமென்றும், சாஸ்திரரூபமாகிய வேதத்தால்தன்னை அறியவேண்டுமென்றும், தான் வேதப்பிரதிபாத்யனாயிருந்து கொண்டிருக்கிறவரென்றும், ஆதலால் ஸாங்கியயோக சாஸ்திரங்களைக்கொண்டு அறிந்து தன்னை உய்யவேண்டுமென்றும், கருடாரூடத்தால் அனுக்கிரகித்தருளுகிறாரென்றறிக. கருடனென்பது

---

§ "[illegible]" என்று காரிகையில் வைசம்பாயனரும் "[illegible]" என்று தொடங்கி உத்ஸவ தத்துவத்தில் பிருகு முனீந்திரரும், கூறியவாற்றால் கண்டு தெளிந்திடுக

‡ ஸ்ரீ பாஞ்சராத்ரம் லக்ஷ்மீ தந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிற பஞ்சகிருத்தியங்களின் விவரம்:—"[illegible]" என்றும் [illegible] என்றும் இந்திரனுக்கு லக்ஷ்மீதேவியார் உபதேசித்தருளுமதால் காண்க.

வேதஸ்வரூபம். இப்பறவையை வேதமென்கிற உண்மை யஜுர்வேதம் * நான்காவது காண்டத்தால் பெறப்படும். வேதத்தில் கேழ்க்கப்படுகிற திரிவிருத் என்கிற சந்தஸ்ஸு இப்பறவைக்குத் தலையாகவும், காயத்திரி நேத்திரமாகவும், ஸாமம் சரீரமாகவும், வாமதேவியம் பிருகத்ரதந்தரம் என்பன இறகுகளாகவும், யக்ஞாயக்ஞியம் புச்சமாகவும், யஜுஸ்ஸென்பது திருநாமமாகவும், சுருதி கோஷியாநிற்கும். வேதம் என்பதற்கு அறிவு என்று பொருள். அறிவென்றாலும் ஞானமென்றாலும் ஒக்கும். ஞானம் வேதமும், ஞேயம் பகவானும், ஞாதாஜீவனுமாமென்று சாஸ்திரங்கள் கூறும். ஆகையால் வேதத்தின் சிரசாய் விளங்குகின்ற உபநிஷத்துக்களால் அறியப்படுகின்றவரும், வேதபாஹ்ய நூல்களால் அறியப்படாதவருமான பரப்பிரம்மமும் இதுதான் அறியுங்களென்று வேதரூபியாகிய கருடபகவான் தனது கைகளினால் காட்டிக்கொண்டு எழுந்தருளாவுகின்றார் இத்திருக்கோலத்தை ஞானாதிகாரிகள் தங்கள் ஞானநாடியாகிய சுழுமுனையில் தெரிசிக்கும் அனுக்கிரக கோலமென்று அறிந்து அகம் மகிழ்வார்கள்.



ஆறுநாள் காலை

புன்னைவிருக்ஷத்தடிஸேவை.

சென்னிவான் கீண்டுவளர் கின்றவுயர் வொப்பிலாச்
செல்வமலி சேடவரையோய்!
சேதநா சேதன விசிட்ட வுலகுருவமாய்த்
திகழ்கின்ற தூயவடிவோய்;

---

* சுருதி "ஸுபர்ணோஸி கருத்மாந் த்ரிவ்ருத்தே சிரோ காயத்ரம்" என்னும் சுருதியைக் கேட்டுத்தெளிக

மன்னுமோ ரயனமிரு கனிமூன்று வேர்நான்கு
மருவிரத மைஞ்சடையுமாய்,
வண்ணமிகு மாறியல் யேழுபொறை யெண்கிளைகள்
வாய்ந்தகண் ணொன்பானுடன்
உன்னுமிலை யிரைந்து மிருபறவையுங் கூடி
யொளிர் பிரகிருதி தருவினை
உன்னடிய ரிதுவென் றறிந்து மின்வீடடைய
வுகவுமோ ரறிகுறியெனப்
புன்னைமர மேறிவரு முனது திரு விழவினால்*
புகலவரு முண்மையலவோ!
பூதலந் தனிலர்ச்சை வடிவத் தமர்ந்தருள்
புரியுமரியே யபயமே.!!

விம். முதல் ஐந்துநாள் உத்ஸவங்களால் விர்த்திக்கிரமத்தில்செய்யவேண்டிய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோதான அனுக்கிரகங்கள் என்கிற பஞ்சகிருத்திய திருக்கோலங்களை முறையே காட்டியருளி, ஆறாவது நாள் உத்ஸவத்தால் ஸ்தூலகாரியமாகிய தேகாதிபிரபஞ்சத்தின் ஸ்வரூபத்தையும், அதனால் அடையும்பயனையும் அறிவிக்கத் திருவுளங்கொண்டு, இந்தசரீரமானது முடிவிலாத வ்ருத்திக்கிரம காரணமாயிருக்கிறதென்று விருக்ஷஸாம்யத்தாலே காட்டியருளுகிறார். ஸர்வேச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதும், அனேக ஜெந்துஸங்காத ஸங்கீர்ணமானதுமான இந்த உலகமானது ஸ்தானம், வேர், கிளைகள், இலைகள், ரஸங்கள், பழங்கள், விழுதுகள், பட்டைகள், தொளைகள் முதலானவைகளுடன் கூடி பக்ஷிகளுக்கு வாஸஸ்தானமாயிருக்கிற ஒரு பெரிய விருக்ஷம்போல் விளங்காநிற்கும். இந்த உலகத்தில் நால்வகை யோனி, எழுவகைப்பிறப்பு, எண்பத்துநான்குலக்ஷம் யோனிபேதங்களாயுள்ள ஜீவகோடிகளாக ஸர்வேசுவரன் வியாபித்திருப்பர். மரத்துக்கு வேர் ஆதாரமாயிருப்பதுபோல சேதனாசேதன பிரபஞ்சங்களுக்கெல்லாம் அவரே ஆதாரமாயிருப்பவர். அப்படியே எல்லாப்பிறப்புகளிலும் மானிடராய் பிறப்பது யாதிலும அரிதும் சிறந்ததுமாகையால், இந்த மானிடப்பிறவியானது விருட்சத்துக்கு பெமான மென்பார். இது மூலப் பிரகிருதியினிடத்தில் தோன்றி விளங்குவது. நல்வினை தீவினையென்கிற இருவகையான பழங்களைத்தருவது. சாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என்கிற குண

* புன்னைவிருக்ஷத்தடிஸேவையை ஸ்ரீரங்கத்தில் தைமாஸ உத்ஸவத்தில் ஆறாவதுநாள் காலையில் நடத்துகிறார்கள், சிலஇடங்களில் வேறுதினங்களிலும் நடத்துகிறார்கள்.


ங்கள் மூன்றையும் வேர்களாக உடையது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் ரசங்களாக அடைந்தது. சப்தம், பரிசம், ரூபம், ரசம், கெந்தம் என்னும் ஐந்தையும் விழுதிகளாகவுடையது. அஸ்தி, ஜாயதே, வர்த்ததே முதலியனவாய ஆறு ஸ்வபாவங்களை ஊர்மிகளாகக் கொண்டது. ஸப்த தாதுக்களை மேற்பொறைகளாகப் பெற்றது. அஷ்டப்பிரகிருதிகளைக் கிளைகளாகவுடையது. நவத்துவாரங்களையும் அக்ஷங்களாகக்கொண்டது. ப்ராணன் அபானன் முதலான தேசவாயுக்களை இலைகளாகவுடையது. ஜீவாத்துமா பரமாத்துமா என்னும் இருவரையும் வாஸம் செய்வதற்கு உரியனவாகிய பக்ஷிகளாகப் பொருந்தி விளங்குவது * இந்த லக்ஷணங்களுடன் கூடிய பிரகிருதி விருக்ஷமானது ஞானத்துக்குச் சாதனமாய் உபகரிக்கத்தக்கது என்று அறிவிக்கும்பொருட்டு, பகவான் வ்ருக்ஷத்தடி ஸேவையால் காட்டுகிறாரென்று உணரற்பாலதாம். விரிக்கிற்பெருகும்.

ஆறுநாள் இரவு

யாவனவாகனுரோகணம்.

தன்னிகரிலாததானவனெனுந் தத்துவத்
தன்மையணிகோடுடைமையால்,
தகைமைசேர் ஞான மும்மதமுந் துலங்கலால்
தான்மறைக் காட்டினுறலால்,
உன்னியமனக்கூடமடைதலாலருளென்னு
முரியதரிகொண்டிலகலால்,
உசிதகுருசிங்கபயமோங்கலானுலகிய
லுணர்ந்துமுணர்கில்லாமையால்,
நன்னியசிதங்குசம்பெற்றுநன்னிபரபோத
நற்கவளமுண்ணுகையினால்,

* மானிடசரீரம் விருக்ஷத்துக்குச் சமானமென்பதற்குப் பிரமாணம்:—"கடோபநிஷத்து,— த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே" எனவும், பாகவதம், "ஏகாயநோஸௌ த்விபலஸ் த்ரிமூலஶ் சதூரஸ: பஞ்சவித: ஷடாத்மா ஸப்தத்வகஷ்டவிடபோ நவாக்ஷோ தஶச்சதீ த்விகோ ஹ்யாதிவ்ருக்ஷ:" எனவும் கூறுமாறு காண்க.



ஆனைவாகனரோகணத்திருக்கோலம்.

நற்கரம் பரிசமொடு கெந்தமு மதிர்ந்தகனி
நாடு மிருசெய்கையுறலால்,
மின்னிய வுடற்போக மத்துவித மாதலால்
யேதக்க ஞானமதமேய்
வீவிலாப் பிரமவித் துக்கதிப னிறைவனென
மிளிருமத கஜ விழவரோ!

வி - ம். இது விர்த்திக்கிரம ஸ்திதியில் ஸம்ஹாரத்தைக் காட்டுகின்ற திருக்கோலமென்பார். அதாவது முதலேந்து தினங்களில் விர்த்திக்கிரமத்தில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோதான அநுக்கிரங்களாகிற பஞ்சகிருத்திய திருக்கோலங்களை முறையே காட்டி, பின்னைந்து தினங்களால் ஸ்தூலமாகிய தேகாதி பிரபஞ்சத்தை ஒடுக்கும்பொருட்டு லயக்கிரமத்திலும் பஞ்சகிருத்தியங்களைக் காட்டத் திருவுளங்கொண்டு, அவற்றுள் முதலாவதாகிய லயக்கிரம ஸ்ருஷ்டி திருக்கோலத்தை இதனால் காட்டுகின்றார் என்பதாம். இவ்வுத்ஸவத்தில் யானையென்பது அஹங்காரம். ஆத்மஸ்வரூபமாகிய "அஹம்" என்பது ஸங்கல்பவசத்தால் ஜீவனாகி, பஞ்சேந்திரியங்கள் வசத்தால் மனதாகி, மனோவசத்தால் தேகமுமாகி அந்தத் தேகாதிகரணங்களில் நான் என்னும் அஹங்காரத்தையும், அதற்குப்போக்கிய ஸ்தானங்களான புவனபோக பதார்த்தங்களில் "என்னவை" என்னு மமகாரத்தையும் அடைந்து மிகவும் கொடுமையாகிய துன்பத்தை யநுபவித்துக்கொண்டிருக்கும். சிதாபாஸ ஸ்வரூபமாயிருக்கிற அஹங்காரமானது தனக்குச் சமானமில்லையென்று கெருவித்து நிற்பதாலே மதத்தினால் தன்னைத்தானே மறந்திருக்கிற மதகஜமும் போல்வதாகும். மதகஜத்துக்கு கன்னமதம், கபோலமதம், கோசமதம் என்னும் மூன்றும உரிய மதங்கள். அஹங்காரமாகிய மதகஜத்துக்கு ஆணவமதம், காமியமதம், மாயாமதம் என்னும் மூன்றும் ஸ்வபாவங்களாம். அது அரணியத்தில் ஸஞ்சரிப்பதுபோல இதுவும் விஷயாரணியத்தில் ஸஞ்சரிக்கும். அது இரண்டு கொம்புகளையுடையதாய் அஹங்கரிப்பதுபோல, இது தானல்லாத தநுகரணங்களைத் தானென்றகங்கரிப்பதை ஒரு கொம்பாகவும், தன்னவையல்லாத புவனபோகங்களைத் தன்னவையென்று அகங்கரிப்பதை மற்றோர் கொம்பாகவும், இரண்டு கொம்புகளைப்பெற்று அஹங்கரிக்கும். தன்னைவசப்படுத்த வருகின்றவனுடைய அங்குசத்தைத் தூள் தூசாகும்படிச்செய்வதுபோல, இது ஞானதேசிகனது உபதேசாங்குசத்தை அசட்டைசெய்யும். அது சிங்கத்துக்குப் பயப்படுவதுபோல இது அவித்தை நிவிர்த்திக்குப் பயப்படும், அதா

வது அவித்தைக்கும் தனக்கும் உண்டாயிருக்கிற அநாதிஸம்பந்தம் ஒழிவதற்கும் மரணத்துக்கும் பயப்படும். அது கட்டுத்தறியில் அகப்பட்டுத் துயரமடைவதுபோல இது மாயையில் அகப்பட்டுத் துயரமடையும். அதனை ஜலத்தில் ஸ்நானஞ்செய்வித்த போதிலும் தலைமேல் மண்ணை வாரிப்போட்டுக்கொள்வதுபோல இது ஞானவார்த்தைகளைக் கேட்டபோதிலும் அஞ்ஞானத்திலேயே களிப்படையும். அது வஸ்துக்களை அறிந்தும் அறியாத வண்ணமாகப்போய் உதாஸீனமாய்த்திரிவதுபோல, இதுவும் எல்லாரிடத்திலும் உதாஸீனமாக இருக்கும். அதன் இரண்டு கண்களும் முன்பக்கம் பார்ப்பனவாக காணப்படினும் பின்பக்கம் பார்ப்பனவாக விளங்குதல் போல இதுவும் மதமயக்கத்தால் எதிரே வருகிறவர்களை அறியாதவண்ணமாக இருக்கும். அது ஸ்தூலமான தேகத்தைக்கொண்டிருப்பதுபோல, இது ஸ்தூலமான தேகாதி பிரபஞ்சாகாரத்தைப் பெற்று வியப்படையும். இப்படி ஆறுவது நாள் உத்ஸவத்தால் பகவான் தமது மாயாகாரியமாயும் ஸ்தூலரூபமாயுமிருக்கிற இந்தத்தேகாதி பிரபஞ்சத்துக்கு யானையை அறிகுறியாக்கி அந்த ஸ்தூலதேகத்தைப் போகமோக்ஷங்களை ஸாதித்துக்கொள்ளும்படியான தர்மரூபமாகக்காட்டியருளுகிறார் என்பது இதனால் விளங்கினமைகாண்க. இவ்வுண்மையை பிருகுமுனீந்திரர் அருளிச்செயல் † உணர்த்துவதும் கண்டுகொள்க. இவ்வண்ணம் அஹங்காரவிசிஷ்டமான தேகத்தில் அபிமானியாகிய ஜீவனுக்கு அவ்வஹங்காரம் பந்தத்திற்குக் காரணமாகின்றமையால் உண்மையறிந்தவர்கள் அதனைவிட்டு அது விலகவேண்டுமென்று சிந்தை செய்யாநிற்பர். இவ்வுண்மை, "ஆங்காரமென்னுமத யானைவாயிற் கரும்பாபோலங்காயமெலந்தை யருளெய்துநாளெந்நாளோ" எனவும், "ஆனைவெம்போரிற் குறுந்தூறெனப் புலனாலலைப்புண்டேனை, யெந்தாய் விட்டிடுதி கண்டாய்" எனவும், "இருகையானையை யொத்திருந் தென்னுளக் கருவையான் கண்டிலேன் கண்டதெவ்வமே" எனவும் *போன்ற பல சுரங்களாலும், பூர்வா

---

† பிருகுஸம்ஹிதை - உத்ஸவகல்பம் "[illegible] || இத்யாதி

* இது நீத்தல்விண்ணப்பத்தில் கூறப்பட்டுளது. முதலில் கூறியது தாயுமானவர் பாடல்.

சாரியர்களின் அருளிச் செயல்களினாலும் ‡ புராண சங்கிரகங்களாலும், $ விவேகிகள் அறிந்துய்வார்கள்.

இதுவரைக்கும் யானையை அஹங்காரவிசிஷ்டமான ஸ்தூல தேஹாதி பிரபஞ்சத்திற்கு அறிகுறியென்று எடுத்துக்காட்டினேம். இனி அந்த யானையே ஞானதெசையில் ஆத்மசைதன்னியத்திற்கும் அறிகுறியாமென்று மேலோர் ¶ கூறுவாராகையால் அதனைச் சிறிதுபரியாலோசிப்பாம். ஞானபரிபாகம் பெற்ற மேலோர்கள் ஞானஸம்ஸ்காரங்கள் மேன்மேலும் விர்த்தியாகி ஞானமத யானையைப்போல் விளங்குவர். ஞானமாகிய மதயானையானது "ஸோஹம்" என்னும் இரண்டையும் கொம்புகளாகவும், ஸம்ஞானம்விஞ்ஞானம் ப்ரஞ்ஞானம் என்னும்மூன்றையும் மதங்களாகவும், வேதாந்தவிசாரமே ஸஞ்சரிக்கத்தக்க அரணியமாகவும், ஹ்ருதயகமலம் கட்டுத்தரியாகவும், உலகவைராக்கியம் உதாஸீனமாகவும், பரபோதத்தையே ஆஹாரமாகவும் உடையதாய், குருவாகிய ஸிம்ஹத்துக்குப்பயந்து, ஜீவேசுவரவிசிஷ்டமான சேர்க்கையையே கெந்தஸ்பரிசங்களை அறியவல்லதான அபின்னமாகியகையையுடைத்தாய், கருமம், ஞானம் பக்தி, பிரபத்தி (அல்லது நித்தியாநித்தியவஸ்து விவேகாதிசாதன சதுஷ்டயம்) என்பதை கால்களாகப்பெற்று, "நேதிநேதி" யென்கிற வாக்கியத்தை அங்குசமாக உவந்து, ஓங்காரத்தைச் சிரசாகக்கொண்டு, ஆந்தரலக்ஷியத்தைப் பார்வையாக அடைந்து, தும்பிக்கைபோன்றதும் ஞானோதயத்துக்கு ஸாதனமானதுமான ஸுஷும்நாநாடியில் அமைந்து

---

‡ நிகமாந்த மகாதேசிகர் அருளிச்செய்த தயாசதகம்:— [illegible]

$ [illegible]

¶ "தானவனுந்தன்மையெய்திதண்டமென வண்டமெங்கும் ஞானமதயானை நடத்துநாளெந்நாளோ"—தாயுமானவர்.

நிற்கும். இப்படிப்பட்ட ஆத்மசைன்னியத்திற்கு ஈசுவரனும் ஈசுவரவிபூதியும் எவருக்கு மது ஸ்வாமியானமாகத் தோன்றுவது மேன்மேலும் நன்மையும், தேகமும் ஆத்மாவும் ஸ்வதந்திரமாகத் தோன்றுவது மேன்மேலும் தீமையுமாம். அத்தீமையானது நம்மைத் தலையெடுக்கவொட்டாமல் மும்மதங்கொண்ட யானையைப் போல அடக்கும். ஆகையால் தத்துவங்களையெல்லாம் ஒவ்வொன்றாக லயப்படுத்தி அஹங்காரத்தை ஜீவனது வசமாக்கி, ஞானமதயானையாகி "ஞானமதயானை நடத்துநாளெந்நாளோ" என்று சான்றோர் கூறியபடி, தானும் ஞானத்தில் நின்று, ஈசுவரஞானத்தை நோக்கித் தன்னையும் அதில் லயப்படுத்திப் பேரின்பமடைய வேண்டுமென்னும் உண்மையை, இதனால் பகவான் பிரகாசப்படுத்துகிறார் என்பதாம்.




ஏழாநாள் உத்ஸவம்

இரதாரோகண திருக்காட்சி.



கலகமுறு காமாதியறுபகைஞர் தமைவென்று
காட்சியுறு பிரமநிலையில்
காலமோர் மூன்றுமறி யாவரசை யாணவிரு
கன்மசேடச் சக்கரம்
விலகவேய் ப்ராணாதி வாயுவெனு மிருசில்புக
விட்டு ஞானேந்திரியமாம்
விரைவுமிக் குள்ளபாய் யாக்களைப் பூட்டிமன
விருளேசேர் கலினவீக்கிச்
சலனமறு புத்திசாரதியார்ப்பு சித்தமிவை
சாருடற் றேரேறனுக்
தத்தறி யாதுழலு முயிர்காண வர்ச்சையிற்
தந்தையே! குருவடிவமாய்
இலகிசிறு தேரேறி வீதிவல மாகவந்
தேழையேற் கினிதருளினாய்!
இடபாத்ரி சிகரவுயர் வரதவருள் புரிகவென
திதயநீ கோயில்கொளவே!



இரதாரோகண திருக்காட்சி.

ஏ-ம். சில ஆலயங்களிலே ரதோத்ஸவம் ஏழாவது நாளிலும் * சில ஆலயங்களிலே ஒன்பதாவதுநாளிலும் நடத்தப்படும். சிற்பசாஸ்திரங்களிலே ரதலக்ஷணம் ஸம்பூரணமாகச் சொல்லப்படுகிறது. அதன் விவரணம்:—அழகான ஓர் உச்சிக்குடையும், மனோகரமான கலசமும், சிங்காரமான ஏழு அடுக்குகளும், ஒருபெரிய அடிப்பட்டரையும், அதன் கீழ் ஒரு சிறிய பட்டரையும், அதன் கீழிலும் ஒரு கீழ்ப்பட்டரையும், சடையும் அச்சும் இருசுப் பட்டையும், சக்கரமும் கால்களும், குத்துக்கால்களும், முன்மூன்று துறைகளும், பின்மூன்று துறைகளும், பக்கத்துறைகளும் பீடமுதற்பட்டையும், அதனிடது பக்கத்தில் இரண்டு அசுவ வடிவங்களும், வலதுபக்கத்திலும் இரண்டு குதிரைவடிவங்களும், ஒரு சாரதியும், நான்கு சிங்கங்களும், எட்டு யாளிகளும், இருநான்கு யானைகளும், கூவிரமும் விதானமும் குலவு தூபாரச்சீலையும், கொடிகளும் மணிகளும் குஞ்சங்களுமுடையதாய், சோபாயமானமாகிய சுந்தரத்தேர்மேல், ஏழாவதுநாளில் எம்பெருமான் எழிலுலாவி, சகலமான பேர்களுக்கும் சற்கதியருளுவர். இந்த ரதமானது அத்தியாத்ம தத்வரூபமாய்ச் சரீரத்துக்கு † உபலக்ஷணமாக விளங்குகின்றதென்று பிருகுமுனீந்திரர் உத்ஸவ தத்துவாத்தியாயத்தில் கூறுகின்றார். மேற்கூறிய லக்ஷணங்களிலு கசக்கரக்குடை பிரமரந்திரஸ்தானமாகவும், உச்சிக்கலசம் சோடசாந்தஸ்தானமாகவும், மேலேயிருக்கிற முதலாம் அடுக்கு துவாதசாந்தஸ்தானமாகவும், இரண்டாம் அடுக்கு மஸ்தகஆதிஸ்தானமாகவும், மூன்றாம் அடுக்கு மஸ்தகமத்தியஸ்தானமாகவும், நாலா

* ஏழாவது நாளில் நடத்துவதற்குப் பிரமாணம்:—
"[illegible] | [illegible]" என்று வைசம்பாயனர் காரிகையிலும் "[illegible] | [illegible]" என்று பிருகு முனீந்திரர் உத்ஸவ தத்துவத்திலும் கூறுமாற்றால் காண்க.

† ரதமானது அத்தியாத்தும தத்துவ ரூபமாயிருக்கிறதென்பதற்கு பிரமாணம்:—
[illegible] | [illegible] | [illegible] | [illegible] || என்று பிருகு முனீந்திரர் உத்ஸவதத்துவத்தில் அருளிச் செய்வர்.

ம்அடுக்கு மஸ்தக அந்தஸ்தானமாகவும், ஐந்தாம்அடுக்கு லலாடமத்தியஸ்தானமாகவும், ஆறும் அடுக்கு புருவமத்தியஸ்தானமாகவும், நடுவிலிருக்கிற ஏழாம்அடுக்கைத் தாங்குகிறமுப்பத்திரண்டு குத்துக்கால்கள் மேலுங்கீழும் அகண்டமுங் கண்டமுங்கலக்கும் மூப்பத்திரண்டு தத்துவக்கால்களாகவும், முன்மூன்று துறைகள் கண்களாகவும், பின்மூன்று துறைகள் செவிகளாகவும், இடது பக்கத்திலிருக்கிற இரண்டு குதிரைவடிவங்கள் இடதுபக்கத்திலுள்ள சூரிய சந்திர கலாவாசிகளாகவும், வலது பக்கத்திலிருக்கிற இரண்டு குதிரை வடிவங்கள் வலதுபக்கத்திலுள்ள சூரிய சந்திர கலாவாசிகளாகவும், எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற கேடயபீடத்துமுதல்படை வாயாகவும்; அக்கினிகலையானசாரதி வடிவம் மும்மலரூபம் அல்லது நாசியாகவும்; கீழ்பாகம் எட்டாமடுக்காகிய பெரிய அடிப்பட்டை அந்தக்கரணசொரூபம் அல்லது கண்டஸ்தானமாகவும், கீழ்ப்படை ஐந்து அவஸ்தை, ஐந்துகோசம், ஐந்துகிலேசங்களாகவும், இருதயஸ்தானமுமாகவும்; அதன் கீழ்ப்பட்டை தசேந்திரியமாகவும், நயனஸ்தானமுமாகவும்; அதன் கீழிருக்கிற பூதப்பட்டை உந்திக்குண்டலி ஸ்தானமாகவும், இருசு பிராணாதிதசவாயுக்களாகவும்; சக்கரங்கள் புண்ணியபாபகருமரூபங்களாகவும், குதிரைகள் ஞானேந்திரியங்களாகவும், சாரதி புத்தியாகவும்; ஆர்ப்பு சித்தமாகவும், கடிவாளம் மனதாகவும், கொடிகள் முக்குணங்களாகவும், மணிகள் பீஜமந்திரப் பிரணவாதி சப்தமாகவும், நான்கு சிங்கங்களும் காமக்ரோதமோஹமதங்களாகவும், எட்டு யாளிகள் அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயவாசனை, நானுவிதகன்மம், உபாதி அவஸ்தை என்னும் எட்டுவித அவஸ்தைகளாகவும், இரதத்தின் சுற்றுப்பக்கங்களிலிருக்கிற குஞ்சங்கள் ஜீவாத்மகோடிகள் காலவரை கடந்து மாறிமாறி அனேக ஜீவராசிகளாய் அசைந்தசைந்து அலைந்தலைந்து ஆடியாடி ஓடியோடி அசைவற்றிருக்கும் மரணாவஸ்தையாகவும் தேரில் விளங்காநிற்கும். இப்படிப்பட்ட லக்ஷணங்கள் பொருந்தியதேர் அகண்டமாகிய அண்டதத்துவ சொரூபமாயும், கண்டமாகிய பிண்டதத்துவ சொரூபமாயுமிருக்கின்றதென்று அறியற்பாலதாம், இது ஆத்மமோக்ஷஜீவனார்த்தமாக எம்பெருமானால் ஜீவனுக்குக் கொடுக்கப்பட்டதென்று அறியாமல் ஜீவனானவன் பாவங்களையியற்றிப் பல ஜென்மங்களை யெடுத்து விஷயங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு தன்னையும் ஈசுவரனையும் உணராமலும், மோக்ஷமடையும் வழியறியாமலும், துயரமடைந்துகொண்டிருப்பன். இப்படி தத்வரூபமாகிய இரதத்தை

ஸார்த்தகமாக்கிக் கொள்ளவேண்டுமானால் * சிங்கங்களையொத்த கர்ம விருத்திகளும், யாளிகளைப் போன்ற அனுபவங்களும், கொடிகளைப்போன்ற தத்துவக்குழாங்களும், மணிகளைப்போன்ற வாக்கொலிகளும், குஞ்சங்களைப்போன்ற சித்த சஞ்சலங்களும், ஆகிய இவ்வைந்தும் இல்லையென்னும்படி ஒழித்து ஞானநெறியில் நின்று ஸ்வாயினை சரீரத்தின் அசைவை நிறுத்தவேண்டும். முதலில் தசவாயு சக்கரங்களை நிறுத்தினால் அசையும் விசையும் ஒழியும்; பின்பு அவ்வசைவற்ற ஜீவஸ்வரூபத்தைத் பூதப்பட்டை உந்திக்குண்டலியிலிருந்து கீழ் அடிப்பட்டை நாபிக்கு ஏற்றி லயப்படுத்தவேண்டும், அங்கிருந்து மேல்நோக்கி, கீழ்ப்பட்டை ஹ்ருதயஸ்தானத்திற்கு ஏற்றி லயப்படுத்தவேண்டும், அங்கிருந்து மேல்நோக்கி அடிப்பட்டை கண்டஸ்தானத்தில் ஏற்றி லயப்படுத்தவேண்டும். அங்கிருந்து மேல்நோக்கி கேடயப்பட்டைவாய் நாசியென்பவைகளுக்கு ஏற்றிலயப்படுத்தவேண்டும், அங்கிருந்து மேல்நோக்கி இரண்டு கண்கள் வழியாயும், நடுவழியாயும் மேல் நோக்கி ஆறும் அடுக்காகிய புருவமத்தியத்திற்கேற்றி லயப்படுத்தவேண்டும். அங்கிருந்து மேல்நோக்கி ஐந்தாம் அடுக்காகிய லலாடமத்தியத்திற்கேற்றி லயப்படுத்தி, அங்கிருந்து நாலாமடுக்காகிய மஸ்தக அந்தஸ்தானத்திற்கேற்றி லயப்படுத்தி, அங்கிருந்து மூன்றாமடுக்காகிய மஸ்தகமத்தியஸ்தானத்திற்கு ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து மேல்நோக்கி இரண்டாம் அடுக்காகிய மஸ்தக ஆதிஸ்தானத்திற்கு ஏற்றிலயப்படுத்தி, அங்கிருந்து மேல்நோக்கி முதலாம் அடுக்காகிய துவாதசாந்தத்திற்கு ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து மேல் உச்சிக்குடையாகிய பிரம்மரந்திரத்திற்கு ஏற்றி லயப்படுத்தி, அன்னணம் சும்மாவிருந்தபடி இருந்தும் நித்திய சுகானந்த ஸ்வரூபியாய் இருந்திடல்வேண்டும். இதுதான் லயக்

* பிருகு முனீந்திரர் ரதத்துக்குக் கூறும் தத்வலக்ஷணம்

[illegible] முதலியனவாம்

கிரம ஸ்திதியென்று சொல்லப்படுவது. இந்த உண்மையை ரதாரோகணத் திருக்கோலத்தால் காட்டியருளுகின்ற எம்பெருமானுடைய சரணாரவிந்தத்தை இடைவிடாமல் தியானித்துச் சற்கதி பெறுவோமாக!

இந்த ரதாரோகணத்திருக்காட்சியைப்பற்றி வாமனபுராணத்தில் † விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, டோலாயமானமாகி கோவிந்தனையும, மஞ்சத்தின் மேலிருந்து கொண்டு மதுசூதனனையும ரதத்தில் விளங்குகிற கேசவனைத் தெரிசித்தவர்களுக்குப் புனர்ஜென்மமில்லையென்பதாம். இங்கே சொல்லப்பட்ட மூன்று நாமங்களுக்கும் பொருந்திய கருத்து சூக்குமபுத்தியை யுடையவர்களுக்கே புலப்படும். அஃது என்னையெனின்,—மனம் புத்தி சித்தம் அஹங்காரம் என்னும் நான்கு கரணங்களைக் கால்களாகவுடைய அந்தக் கரணமென்கிற மஞ்சத்தின்மேல் வீற்றிருந்துகொண்டு காமக்குரோதாதி சத்துருக்களைச்சங்கரிப்பதனால் மதுசூதனென்றும், உசுவாஸ நிசுவாஸங்களால் அக்கட்டிலின்மீது அசைந்தாடிக்கொண்டு ஆன்மாக்களாகிய பசுக்களைக் காத்தலினால் டோலாயமானமாகிய கோவிந்தனென்றும், பிரம ருத்திரர்களுக்கு அதீதமாய் விளங்குகின்ற உபாஸ்யவஸ்துவாகையால் கேசவனென்றும், கோவிந்த மதுசூதன கேசவநாமங்கள் பொருள்படுகின்றமையால், அம்மூன்றுக்கும்லக்ஷியார்த்தங்களை அறிந்து சரீரமாகிய ரதத்தில் அகவழிபாட்டில் ஸாக்ஷாத்கரித்தவர்களுக்குப் பிறப்பில்லை என்பதாம்.

எட்டாநாள் உத்ஸவம்

குதிரைவாகனாரோகணம்.

கலகமுறு காமாதி யசுரர்வய முற்றதாய்க்
கவினுமோர் கடிகைதன்னில்
கருதரிய வீராறு கால்களா லாயிரங்
காத வழியினு மிக்கதாய்க்

† வாமனபுராணம் "[illegible]"

தொலைவிலுறு கடுவேக முடையவா சிப்புரவி
சுழுமுனைக் கோட்டை மேவத்
தோமிலரு ளென்னுமொரு கயிறுகொடு கட்டிமதி
தூய்கலின விக்கிவிசையாய்
விலகுவெகு ளிச்சேணை மீதேறி வைராக்ய
மிளர்வளா ரேந்திமேன்மேல்
மேவுமறி வங்கவடி யூன்றியக மகிழ்மூல
வீதியிலு மூச்சந்திசேர்ந்
திலகுமொரு வீதியிலு மேல்வீதியிலுமோட்டி
யேழுவாரத்திலேற்றி §
இடையறு மோனத்தி லிசைசுகவெளுப்புரவி
யெழிலுல வுணர்வருளுமே.

வி-ம். இது லயக்கிரம சங்காரகோல மெனப்படும். எம்பெருமான், பிரகிருதி தத்துவங்களனைத்தையுஞ் சங்கரித்து ஒடுங்கியிருக்கும் யோகியானவன் வாசி வசீகாரத்தால் அடையும் சிறப்பையும் பயனையும் இந்த உத்ஸவத்தால் அறிவிக்கத் திருவுளம்பற்றுகிறார் என்பது உத்ஸவத்தின் கருத்து. எல்லாம் ஒடுங்கித் தாரணையில் நின்று உத்கிரமணத்துக்கு ஸித்தமாகின்ற தருணத்தில் பிராணவாசியை நிறுத்தி, விடயங்களிலே மனதைச்செல்லவொட்டாமல் திருப்பி, ஒரு குறிப்பிலே நிலைக்கச்செய்யவேண்டும். அதாவது, பிராணவாசியை மூலாதாரத்திலிருந்து எழுப்பி உந்திக்குண்டலிக்கேற்றி லயிப்பித்து, அங்கிருந்து இருதயஸ்தானத்திலேற்றி நிறுத்தி, அங்கிருந்து கண்டஸ்தானத்திலேற்றி லயிப்பித்து, அங்கிருந்து தாலுமூலத்திலேற்றி நிறுத்தி, அதன்மேல் புருவமய்யத்திற்கேற்றி லயப்படுத்தி, அங்கிருந்து ஸப்தா (ஏழு) என்னும் பெயரையுடையதும் சீர்ஷண்ய ரந்திரமென்பதுமாகிய பிரமரந்திரத்துக்கேற்றி லயப்படுத்தி * ஆரூடநிலையில்

---

§ இது ஏழுவாரங்களுக்குமூலமாதலால் வடமொழியில் "ஸப்தா" என்பார்.

* [illegible] என்று [illegible] பாராணத்தில் கூறியவாறு கண்டுகொள்க.

ஞானுபூர்த பரனுஞ்செய்து நிற்கின்ற ஞானயோகீந்திரர்களின் ஒப்பற்ற ஞானவஸ்தையில் எம்பெருமான் சுயோதயமயமாகிய வாசியின்மேலே விளங்கா நிற்பர் என்னும் உண்மையைப்போதிக்குமென்பார் மேலோர்.

இவ்வுத்ஸவத்தில் பரிவேட்டைத் திருக்காட்சியை விசேஷமாகக்கொண்டாடுவது யாவரும் அறிந்த விஷயமே. பரிவேட்டையென்பது குதிரைவேட்டை. இதனைப் பாரிவேட்டையென்று சாதாரண ஜனங்கள் கூறுவார்கள். இதனுண்மை என்னையெனின்,—சுயோதயமயமாகிய வாசியின்மீதேறி பிரமரந்திர உச்சிக்கோபுரவாயில் வழியாய் உட்புகுந்து கலாஸ்வரூபமாய் ஆயிரமிதழ்க்கமலத்தில் சவாரிசெய்து, பிரணவாகார அசைவுகோலமாய் ஞானநாடியாகிய சுழிமுனைநாடியின் வழியாய்க் குண்டலிபரியந்தம் சவாரிசெய்து முட்டி, அங்கிருந்து மீண்டும் திரும்பி விசைகோலமாய் மேலெழும்பி நாதஸ்வரூப கோலமாய்ப் பிரமரந்திரம் வரையில் போய்முட்டி, மீண்டும் அங்கிருந்து திரும்பி பிராணரூபகோலமாய் நாசிகோபுரவாயிலுட்புகுந்து, மீண்டும் அங்கிருந்து வாசிநாடியில் வாசிரூபமாய் இருதயமத்தியத்திலும் இரண்டு கரங்களின் நடுவிரல்களின் அந்தத்திலும், இரண்டு பாதங்களின் பெருவிரல்களின் அந்தத்திலும் சவாரிசெய்து ஓடிமுட்டி, அங்கிருந்து மீண்டும் ஸ்வாஸரூபமாய் மேல்சென்று உள்நாக்கு வழியாய் அன்னநாடியில் குதம்வரையில் ஓடிமுட்டி, நாசித்துவாரங்கள் வழியாய் வெளியில் பிரவேசித்து விளங்குகின்றவை யென்றும், இவ்விதமாக ஸப்தவித சைதன்னியங்களாகிய ஜீவான்மாக்கள் சுவாஸரூபமான அசுவத்தைத் திருப்பி வாசிரூப சவாரியில் சுயப்படுத்தி வாசிரூபமாக்கி, வாசியைப் பிராணத்திலொடுக்கிப் பிராணரூபமாக்கி, பிராணத்தைப்பிரணவத்தில் ஏயப்படுத்திப் பிரணவரூப சவாரியாக்கி, பிரணவத்தைக் கலையிலொடுக்கிக் கலாரூப சவாரியாக்கி, அதனை ஞானரூப சவாரியாக்கி, ஞானகாரசவாரிரூபமாய், குறித்தவிடத்திற்குப்போகவித்தமாயிருக்கவேண்டுமென்றும், வயக்கிரம சங்காரகோலத்தைக் காட்டுகின்றார் என்று தத்துவதரிசிகள் கூறுவார்கள் என்பதாம்.

* சுவாசம் என்பது மூச்சு. அது மனோலயபோதமாய் மேலுங்கீழுஞ் செல்வது பிராணன். அது மனோலய போதானந்தமயமாய் மேலுங்கீழுஞ் செல்லுதல் பிரணவம். அது ஞானகாரலயபோதானந்தமாய் பிரமமந்திரத்தில் நிலைத்திருப்பது கலை. அது உள்ளும்புறமும் எங்கும் போதானந்தமாக விளங்குவது ஞானம்.



ஒன்பதா நாள் காலை

வெண்ணெத்தாழிகண்ணன்

திருக்கோலம்—ஊடலுற்சவம்.



துசையிலா நிருவிகற்பகசமா தியிலெகு
மவனொருவனெவனே னுமற்
றுங்கவன்சவிகற்பகத் துறையிழிந்துமே
லவனிசுக மீங்குறுகர்வான்
பசைகொண்டிலாவியப் பாலர்த முன்தசைப்
படிய முயல்கின்ற தருவாய்
பான்மையி லமர்ந்தமுன் ஞானமப்புருடனைப்
பாதிக்கு மனுகவொன்று
இசைவுறற் காரியன தருளிலகி லெய்தலா
மிவ்வுண்மை யினிது கேண்மோ!
ஈடிலாவேத்திரங் கைகொண்டசேனைச
னிசைவித்த வொருமையதனால்
வசையிலாத் தன்தேவி தனதுவச மாகமகிழ்
வரதவிட பாசலத்தோன்
வண்ணமிகு மூடலுறு சவிதி புணர்த்துமவ்
வகையறிந்தினிதுய்வமே.

௯-ம். ஒன்பதாநாள்காலையில் வெண்ணைத்தாழி கண்ணன் திருக்கோலமும் * ஊடலுற்சவக் காட்சியும் உண்டாம். வெண்ணைத்தாழி கண்ணன் கோலத்தால் திருமால் திருவீதியெழுந்தருளி வெண்ணையாசகஞ் செய்வர். இதன் உண்மையென்னையெனின், சிரவணமனன நிதித்யாஸனங்களால் ஞானம் நிலைக்கப் பெற்ற பிரமவித்வரிஷ்டர்கள் சீர்ஷண்யப் பிரமரந்திரத்தில் நின்று § ஞானாமிர்தபானம் செய்து விளங்குகிற ஞானவஸ்தையாகிய ஞானவெண்ணையை (கைவல்யநவநீதத்தை) தனக்கர்ப்பணம் செய்யும்படிக் கேட்கும் திருக்கோலமாம். இதற்குப் பிரமாணம், "யத்கரோஷியதச்நாஸியஜ்ஜுஹோஷிததாஸியத்-யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்ப்பணம்" என்னும் கீதாப்பிரமாணத்தால் கண்டுகொள்க.

ஊடலுற்சவ தத்துவம்:—ஊடலுற்சவ மென்பது பிரணய கலகோத்ஸவமாம். இதனையே மட்டையடி உத்ஸவமென்பார்கள். ஞானத்தாலே விளங்குகின்ற நிருவிகல்பக ஸமாதிநிஷ்டையை யடைந்து ஸகல தத்துவங்களையும் தன்னிடத்தில் லயஞ்செய்து, தன்னையும் ப்ரம்மத்தினிடத்தில் லயம்பண்ணி நிரதிசயமான ஸுகத்திலிருக்கின்ற ஞானியானவன், கர்மவசத்தால் ஒருவேளை ஸவிகல்பகத்திலிழிந்து விஷயஸுகானந்தத்தை அடைந்து, பிறகு அந்த நிர்விகல்பக ஸமாதியில் நிற்க விரும்புவானாகில், அந்த நிர்மல ஞானமானது அவனை வரவொட்டாமல் தடுக்கும். உலகமும் அவனைப்பழிக்கும். நம்போலியர் கூறினும் நகைப்பர். திருவருள் ஞானம்பெற்ற பெரியோரே அறிந்து அவனை நிர்த்தோஷியென்று கூற வல்லுனராவர். இதனைப்பெருமானுக்கும் பிராட்டிக்கும் ஸம்வாதம் என்னும் ஊடலுற்சவத்தால்காட்டியருளுகிறார். இக்கலகத்தின்கண் சேனை முதலிகள் எழுந்தருளி, பெருமானை நிர்த்தோஷியென்று பிராட்டிக்கு உரைத்து நம்பச்செய்தலின் மேல், பெருமானும் பிராட்டியும் முன்போல ஒன்றாகி அன்பு பாராட்டுகின்றனர் என்னும் ஆசாரம் இவ்வுண்மையைத் தெளிவிக்குமென்றறிக. இது எம்பெருமான் மறைந்திருந்து ஆசாரியன் மூல

§ இது எட்டாநாள் உத்ஸவம் அசுவவாகனத்தில் கூறியவிஷயம்.

* ஒன்பதாநாள் காலையில் சிவாலயங்களில் பிக்ஷாடனமூர்த்தி திருக்காட்சியுண்டாம். திருமாலும் வெண்ணைத்தாழியை யேந்திய திருக்கோலங்கொண்டு அவர் வெண்ணை யாசிக்கிற பாவனையாகத் தரும் காட்சியால் உபயமூர்த்திகளும் ஒன்பதாநாளில் யாசகத் திருக்கோலங் காட்டுதல் இனிது விளங்கும். நவநீதக் கண்ணன் திருக்கோலத்தை வடநாட்டுத் திருப்பதிகளிலும் வேறுசில ஸ்தலங்களிலும் கண்டுகொள்க.

மாய் அநுக்கிரகிப்பதனால் இதனைலயக்கிரமத்தில் அநுக்கிரகமென
[illegible]

தீர்த்ததானம், கொடியிறங்குதல், புஷ்பயாகம்.

உறக்ரம ணக்கிரம வழிவந்து வினையடைந்
தோர்க்குநீ புரியுமருளின்
சொற்பிலாத் தீர்த்ததா னத்தினுரை செய்யவரு
மொழியாத மாயபாசப்
புற்கொழிவு கொடியிறங் குதலினாற் போதரும்,
புட்பவடி வாயகுருவாம்
புண்ணிய வினைப்பூசை செயவேண்டு வகைமகா
புட்பயாகத்தி விலகும்,
நிற்குண நிரஞ்சன நிராகார நிர்த்தொந்த
நிஜபக்த சுரபூருகா!
நிகிலசுர சேவிகங் காதிபாலன சதுர !
நின்மலா னந்தரூபா !
முகுட மகற்றுமணி சக்ரகர தலவரத !
வனஜபத யுகளசீலா !
மதுமதன மதுரேச மாதவ முராந்தகா !
வடவேங்க டேசகுருவே. ! ! !

வி-ம். ஸிர்த்திக்கிரமத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் செய்கின்ற ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, திரோதான அநுக்கிரகங்களாகிற பஞ்சகிருத்தியங்களால் அகத்தும் புறத்தும் அறியப்படுகின்ற தத்துவங்களை முறையே முதல் ஐந்துநாள் உத்ஸவங்களால் தெரிவித்து, அதன்மேல் லயக்கிரமத்தில் அவர்செய்கின்ற பஞ்சகிருத்தியங்களாகிய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, திரோதான அநுக்கிரகங்களையும் முறையே அறிவிக்கத் திருவுளங்கொண்டு, ஆறாவது ஏழாவது எட்டாவது உத்ஸவங்களால் லயக்கிரம ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைத் தெரிசிப்பித்து,
உத்ஸவத்தால் லயக்கிரம திரோதான கிரு
ருளுகின்றார். ஆகையால் இதுலயக்கிரம தி
படும். அல்லது பிருகுமுனீந்திரர் தமது உ
றியபடி ஸம்ஹாரத்தில் ஸம்ஹார கிருத்

ரோத்ஸவமெனவும் அறியப்படும். இவ்வுத்ஸவத்தில் எம்பெருமான் தீர்த்ததானம் செய்வதனாலும், தீர்த்தத்தினால் ஸ்நானம் விதிக்கப்படுகின்றமையாலும் இது தீர்த்தோத்ஸவமெனப்படுகின்றமையுங்காண்க. இதற்கே அவப்ருதோத்ஸவமென்றும் பெயர். யாகத்தில் தீக்ஷிதர்களுக்கு யாகமுடிவிலே அவப்ருதஸ்நானம் செய்தல் வேண்டுமென்று சாஸ்திரங்கள் விதிக்கின்றன. யாகமோ இரண்டுவகைப்படும். அவை கருமயாகம் ஞானயாகம் என்பனவாம். கருமயாகத்தை இன்ன அதிகாரி இன்ன காலத்தில் இன்னவிடத்தில் தொடங்கி இத்தனை நாள்களில் முடித்தல் வேண்டுமென்று சாஸ்திரங்கள் நியமங்களைக் கூறும். அம்முறைமையால் ஆரம்பித்து முடித்துச் செய்கின்ற ஸ்நானத்தை அவப்ருதஸ்நானமென்பார்கள். கருமயாகத்துக்குக்கூறிய அதிகாரிநியமம காலநியமம் முதலியன ஞானயாகத்துக்குக்கூறப்படாமையாலும், அதற்கு யாவருமே அதிகாரிகளாகின்றமையாலும், அதனை இத்தனை நாளில் முடித்துவிடவேண்டுமென்னும் நிர்ப்பந்தமில்லாமையாலும் ஜீவிதகாலம் முழுதும் அந்தஞானயாகத்தில் தீக்ஷிதராய், தனது தேகவியோகமாகிறமரணத்தையே அதற்கு அவப்ருதஸ்நானமாகக் கொள்ளவேண்டுமென்று சுருதி கோஷிக்கின்றமையாலும், ஞானயாகத்துக்கு மரணமே அவப்ருதஸ்நானமென்பார் மேலோர். இதற்குச் சுருதிப்பிரமாணம் அறியவேண்டில், "தஸ்யைவம்விதுஷோயஜ்ஞஸ்யாத்மாயஜமான:" என்பது தொடங்கி, "யன்மரணம்ததவப்ருதம்" என்பது ஈறாக, அந்தர்யாகலக்ஷணம் தைத்திரீய உபநிடதத்தில்கோஷிக்கப்படுமாற்றால் கேட்டுத்தெளிந்திடுக.

இதனால் ஸமஸ்த தத்துவங்களையும் ஒடுக்கிப் பிராண உத்கிரமணத்துக்கு ஸித்தமாய், பிராணவாயுவை மூலாதாரத்திலிருந்து எழுப்பி முறையே நாபி, இருதயம், கண்டஸ்தானம், தாலுமூலம், புருவமத்தியம், ஆகிய இடங்களுக்குஏற்றி, அங்கிருந்து ஸர்வஶ்ரேய, ரந்திரமாகிய பிரமரந்திரத்திற்கேற்றி லயப்படுத்தி ஆரூடநிலையில் நிற்கின்ற ஞானயோகிகள் பிரமரந்திரத்தைப் பேதித்துக்கொண்டு தேகத்தை விடுகின்ற * தருணமே அவர்களுக்கு அவப்ருதஸ்நானமெனப்படுகின்றமையால், இந்தப்பரமரகசியத்தைத் தீர்த்

* பிரமரந்திரத்தைப் பேதித்துக்கொண்டு வெளிவந்து தேகத்தைவிடுதலுக்குப்பிரமாணம்-பாகவதமஇரண்டாவதுஸ்கந்தம் "[illegible]" || இத்யாதி.

தோத்ஸவமாகிய லயக்கிரம திரோதான திருக்கோலத்தால் அறிவிக்கின்றார் என்பதாம்.§

ராத்திரி விமானோத்ஸவம்

இவ்வண்ணமாகப்பிரமரந்திரத்தைப்பேதித்துக்கொண்டுவெளியேவந்து தேகத்தை விடுத்த பிரமவித்வரிஷ்டர்கள் "ஓங்கார ரதமாருஹ்ய" என்கிறபடியே ஓங்கார ரதத்தின்மேலேறி அர்ச்சிராதிமார்க்கமாய்ச் செல்கின்ற ரகசியத்தை, சகலமான சேதனர்களும் அறிவித்து உய்விக்கும்பொருட்டு விமானோத்ஸவத்தைத்திருவுளம்பற்றுகிறார் என்பதாம்.

த்வஜாவரோகண, புஷ்பயாக, ஸப்தாவரண காட்சிகள்.

இங்ஙனம் பிரமரந்திரவழியாய்ப்புறப்பட்டு அர்ச்சிராதிமார்கத்தால் புனராவர்த்தியில்லாத ஸ்தானத்தை அடைவதற்குச் செல்கின்ற சேதனனுக்கு மீண்டும் மாயாபாச ஸம்பந்தமான ஜென்மமில்லாமையால் த்வஜாவரோகணக்காட்சியால் மாயாபாசவிமோசனம் † உணரப்படும். புஷ்பயாகத்தினால் புஷ்பரூபியாகிய ஸர்வேசுவரன், சேதனனை அநுக்கிரகிக்கும திருவருளை யுணர்த்தும் சேதனன்ஏழு ஆவரணங்களையுடைய இந்தப்ரம்மாண்டத்தில் ஒவ்வொரு ஆவரணமாக ஏழு ஆவரணங்களையுங் கடந்து ஸ்ரீவைகுண்டம் அடைந்து திருவருட்சோதியில் ஒடுங்குமுண்மையை ஸப்தாவரணக்காட்சி அறிவிக்கும். இங்ஙனம ஸ்ருஷ்டிக்கிரமத்திலும் லயக்கிரமத்திலும் செய்கிற பஞ்சகிருத்தியங்களை முறையே முதலைந்து நாள் உத்ஸவங்களாலும், பின்னைந்து நாள் உத்ஸவங்களாலும் காட்டி, ஞானாதிகாரி, கர்மாதிகாரி, கிரியாதிகாரி, உபாஸனாதிகாரி, யோகாதிகாரிகளாகிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நிலைகளை அவலம்பித்த எல்லா அதிகாரிகளும் அந்தர்முகத்தில் அறிந்து உய்யக்காட்டிய பரிமுகரகசியத்தை யுடைய

§ 72-வது பக்கத்தில் முதல்வரியில் (அநுக்கிரககோலம்) என்றிருப்பதை திரோதானகோலம் என்று மாற்றிக்கொள்க.

† பிருகுமுனீந்திரர் உத்ஸவதத்வம் = "த்வஜாவரோஹணம் ஸ்ம்ருத்வா மாயாபாசாஹிமோசனம்" என்பதனால் அறிக.

பிரமோத்ஸவத்தின் கருத்தை உணர்த்துகின்ற இந்த உத்ஸவகாண்டம் அவரவர் அகத்து இனிது விளங்கி அகவிருளை நீக்கிப் பேரானந்தப் பெருமகிழ்ச்சியுண்டாக்கவேண்டுமாக!

சாதுக்களுடையசந்தோஷத்தின்பொருட்டுச் செய்யப்பட்ட இந்நூல் மண்ணோர் விண்ணோர் வெற்பெனத்திகழும் திருவேங்கடமாமலையெம்பெருமான் திருவுள்ளத்துக்குகப்பாகவேண்டுமாக! சுபம்! சுபம்! சுபம்!

வாழி.

திருமலையின் மீதிலொளிர்கரிய முகிலேவாழி!
செய்யதிரு மாதுவாழி!
திவியநூற் றெண்டிருப்பதிகடாம் வாழிநனி
திகழர்ச்சை வடிவம்வாழி!
மருவுமுன் வலதுகர மிலகாழியும் வாழி!
வண்ணமார் சங்குவாழி!
வாதனையெலாந்தவிர்த் தெளியனேற்கருளபய
வரதவத்தங்கள் வாழி
வருமிடரொழித் தெனக்கரணாயினதுபொன்
வனச திருவடிகள் வாழி!
மகிதலந் தன்னிலுன தலரடித் தொண்டுசெய்
வழியடியர் நாளும்வாழி!
குருமொழி யுணர்ந்து கிட்டானுபூதி யிலுறக்
குலவும் பொருள்களெல்லாங்
கொண்டவுற் சவகாண்ட மென்னுமிந் நூல்வாழி
கோதிலுன தருள்வாழியே!

ஸ்ரீ வேங்கடேசபாதாரவிந்தாப்யாம்நம:

ஸ்ரீவேங்கடேசார்ப்பணமஸ்து

விஷ்ணு ஆலய உத்ஸவதத்வம்

முற்றிற்று.

ஸ்ரீ வேங்கடேசாய நம:

உத்தரகாண்டஶ்லோகா:

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ௨

[illegible] ௩

[illegible]

[illegible] ௪

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ௨௰௧

[illegible] ௨௰௨

[illegible] ௨௰௩

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

ஸ்ரீரஸ்து

உத்ஸவகாண்டம்

இரண்டாவது பிரகரணம்

சிவாலயஉத்ஸவதத்வம்.

ஸ்ரீமகாவிஷ்ணுவைப் போலவே சிவபெருமானும் ஆலயத் திருக்கோலங்கொண்டு உலகில் வீற்றிருப்பதற்கு அடியார்களை ஆட்கொள்ளவேண்டுமென்னும் பெருங்கருணையே காரணம். இவரது மஹோத்ஸவங்களுக்கும் விஷ்ணுவினது மஹோத்ஸவங்களுக்குச் சொல்லப்பட்ட தத்துவங்களே சான்றாம். ஆயினும் அவரது வாகனவரிசைக்கிரமத்தையும் அதன் தத்துவத்தையும் கூறுமுழி, கூறியதே கூறியதாகுமென்னுங் குற்றமஞ்சி விடுவோமாயினும் சிவனடியார்களின் சந்தோஷத்தின் பொருட்டுச்சிலமுக்கியாம்சங்களை எடுத்துக்காட்டுவாம். அடியார்கள் ஒருவருக்கொருவர் அகம்மகிழச்செய்யும் கைங்கிரியமே ஆண்டவனுக்கும் உவப்பாதலால், வைஷம்மிய மில்லாமலியற்றப்பட்ட இந்நூலைக் "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம், தொண்டீரெல்லீரும்வாரீர்". என்று நஞ்சடகோபராகிய குருகைப்பெருமுனிவர் திருவாய் மலர்ந்தருளியவாறு, நமது சிவநேசச்செல்வர்கள் கண்டுமகிழ்வாராக.

முதலாநாள் உத்ஸவம்

விருக்ஷத்தடிஸேவை.

இதனை வ்ருத்திக்கிரம ஸ்ருஷ்டி கோலமென்பார். இதன் பொருள் விஷ்ணுஆலய ஆறுநாள் காலை உத்ஸவம் புன்னை வ்ருக்ஷத்தடி ஸேவையில் விவரிக்கப்பட்டமை காண்க. சிலவிஷ்ணு ஆலயங்களில் முதல் நாளிலே விருக்ஷத்தடி காட்சியுண்டாம். முதல் நாளில் காட்டியதால் வ்ருத்திக்கிரம ஸ்ருஷ்டிகோலமும், ஆறுநாள் காட்டியதால் லயக்கிரம ஸ்ருஷ்டிகோலமும் அறியப்படுகின்றமையால் வ்ருத்தி லயக்கிரமங்கள் பேதப்படினும் ஸ்ருஷ்டிமாத்திரம் ஒன்றாகவே இருக்கும் உண்மையைக்கண்டு தெளிக.

இரண்டாநாள்

சூர்யசந்திரபிரபாகாரதிருக்காட்சி



இது விருத்திக்கிரம ஸம்ஹாரகாலம். இதன் கருத்தை விஷ்ணுவுக்கு இரண்டாநாள் காலையில் நடத்தப்படுகிறதாகச் சொல்லப்பட்ட சூரியப்பிரபாகார திருக்காட்சியின் விசேஷார்த்தங்களில் கண்டுகொள்க.



மூன்றாம் நாள் உத்ஸவம்.

நந்தி, பூதவாகனாரோஹணம்.




காலையிலே அதிகார நந்திவாகனாரோகணத்திருக்காட்சியும், மாலையிலே பூதவாகனாரோகணத்திருக்காட்சியும் உண்டாம். நந்தியென்பது சூரியகலையான ஜீவசக்தியைக்குறிப்பது; பூதமென்பது ஜீவமாயையைக்குறிப்பது. ஜீவசக்தியினால் ஜீவன் தேடிக்கொள்ளுகிற ஜென்மம், தண்டனை, துக்கம், காலம்முதலானவைகளை ப்ராப்தரூபமாய் விதிப்பவர் என்று காலையிலே நந்திவாகனாரோகணத்தாலும், சந்திரகலையாகிய ஜீவமாயையினால் ஜீவன் தேடிக்கொள்ளுகிற ஜன்மாந்தர பாபவிசேஷத்துக்குத் தக்கபடி மரணாவஸ்தையை விதிப்பவர் என்று பூதவாகனாரோகணத்தாலும் உணர்த்துகின்றார் என்பதாம், இத்திருக்கோலத்தை விருத்திக்கிரம ஸம்ஹாரகோலமென்பார்.



நாலாநாள் உத்ஸவம்

பல்லக்குச்சேவையும், ஐந்துமுக நாகாரோகணமும்.



நாலாநாள் காலையிலே பல்லக்குச்சேர்வை கோலமும், மாலையிலே ஐந்துமுகநாகாரோகண காட்சியும் உண்டாம். அவ்விரண்டனுள் சிவபெருமான் தாம் ஜீவர்களால் அறியப்படாமலிருக்குந்தன்மையை பல்லக்குச்சேர்வை உணர்த்தும், ஆவரணத்திரையால் மறைந்து குண்டலிச்சக்தியைப்பரிக்கிரக சக்தியாகவுடைய

வர் என்பதை ஐந்துமுகநாகாரோகணம் விளக்கும். பல்லக்கென்பது ஓர் மேல்முகடும், அதில் தொங்கவிட்ட நான்கு குஞ்சங்களும், இரண்டு பக்கங்களிலும் முப்பத்திரண்டு குஞ்சங்களும், ஆவரணத்திரையொன்றும் உடைய ஓர் வாகன விசேஷம். பல்லக்கின்மேல் முகடுபோல விளங்கும் சிவபெருமான் தமது யதார்த்த ஸ்வரூபத்தை அஞ்ஞானமாகிய ஆவரணத்திரையால் மறைத்து, தத்போத, தத்பேத, தத்பாவ, தச்சூன்னியம் என்கிற திரைகளால் ஈசுவராவரண சக்திரூபமாய் விளங்குவர். அல்லது சதுர்வித புருஷார்த்த ரூபமாய் விளங்குவரெனவு மொக்கும். பல்லக்கின் இரண்டுபக்கங்களிலுமுள்ள முப்பத்திரண்டு குஞ்சங்களால் சைவசித்தாந்தத்தில் கூறப்படுகிற முப்பத்திரண்டு தத்துவங்களாகிய ஆவரணத்தால் ஜீவான்மாக்களுக்குக் கோசரமாகாமல் நிற்பரென்பது பெறப்படும்.

ஐந்துமுகநாகம்:—நாகம் என்பது அவருடைய ஸ்ருஷ்டி தத்துவமாகிய ஜீவசைதன்னியமென்றும், அதனை பஞ்சமுகங்களாகிய ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ ஸத்யோஜாதங்களென்கிற ஆவரணத்திரைகளால் மறைத்துக் கொண்டிருப்பவர் என்றும் கூறுவார். எப்படியெனில், ஈசான முகத்தால் வாஞ்சாவிஷய விஷம்போன்ற பரதத்துவஞானாவரணத்திரையாலும், வாமதேவமுகத்தால் விர்த்திவிஷம்போன்ற ஸ்திதி தத்வ தத்போதாவரணத்திரையாலும், அகோரமுகத்தால் விஷயவிஷம்போன்ற க்ருத்திய தத்வ தற்பேதா வரணத்திரையாலும், தத்புருஷமுகத்தால் ஆசாபாசபந்த தொந்த விஷம்போன்ற போக்த்ருத்வ தத்பாவரணத்திரையாலும், ஸத்யோஜாதமுகத்தால் ஜென்மகர்மாதி விஷம்போன்ற அனுபவத்வ தநுதயாவரணத்திரையாலும், மறைத்துக்கொண்டிருப்பவர் என்பதைக் காட்டியருளுகின்றார் என்பதாம். அதுவுமல்லாமல் ஸர்ப்பாகாரமாகிய குண்டலினி சக்தியின் தோற்ற ஒடுக்கங்களே பிரபஞ்சத்தின் தோற்ற ஒடுக்கங்களாகையால் அதுவே ஞானேயமான சுழிமுனை நாடியை மறைத்துக் கொண்டிருப்பதைப்பற்றி அதனை பரிக்கிரக சக்தியாகவுடையவராய்த் திரோபவகிருத்தியத்தையடைந்தவராய் விளங்குகின்றார் என்பதும் அறியற்பாலனவாம். இது விருத்திக்கிரம திரோபவகோலம் இதனை விரிவாகச்சேஷவாகனாரோகணத்தில் கண்டுகொள்க.



ஐந்தா நாள் உத்ஸவம்,

இலிங்காகார, இடபவாகனாரோகணம்.

காலையிலே அண்டவட்டசொரூபம்போலிருக்கிற லிங்காகாரவட்டசொரூப பிரபையின் மத்தியில் எழுந்தருளுந்திருக்காட்சியும், மாலையிலே இடபவாகனருட திருக்காட்சியுமுண்டாம். சிவபெருமானால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட சதுர்தச புவனங்களையும், சூரியன் முதலான சகல ஜோதிர்மண்டலங்களையும், அவற்றுக்குள் இருக்கிற ஸகல ஜீவகோடிகளையும், இந்த ஞானாகார வட்டத்துள் மிதக்கவும், ஜீவித்து வாழவும் அமைத்து, அவற்றிற்கு உள்ளும் புறமும் ஊடுருவி நிறைந்து, ஸர்வவியாபகத்வ பரமானந்த சுத்த பரப்பிரம சொரூபியாய் விளங்குகிறவர் என்றும், அதற்குமேலே ஏகசக்கரக்குடையொன்றைத்தரித்து, யாவற்றுக்குந்தானே அதீதமாய் ஏகசக்கராதிபதியாய் விளங்குகின்றவரென்றும், காட்டியருளுவர்.

இடபமாவது ஜீவஞானம் அல்லது தருமஸ்வரூபமென்றும், இதன் நான்கு பாதங்களும் தவம், பரிசுத்தம், தயை, ஸத்தியம் என்றும், அதன் முசுப்பு அபரோக்ஷஞானமென்றும், நீலகண்டாரியர் தமது பாரத வியாக்கியானங்களில் கூறுவர். ஞானயோகி

கள் இதனை அமனஸ்கராஜயோகமென்று ஞானமென்பார்கள். அமனஸ்கமென்பது மனோலயத்துக்குப்பெயர். பாசமெனப்படுவதும் இதுவேயாம். மனம், புத்தி, சித்தம், அஹங்காரமென்னும் நான்கு கரணங்களும் இடபத்துக்கு நான்கு கால்களாக விளங்கும். இந்த நான்கு கரணங்களோடுகூடி ஸமஷ்டியில் அந்தக் கரணமென்று சொல்லப்படுகின்ற இந்த மனது வருஷபத்துக்கு ரூபகமாகும். இந்த அந்தக்கரணத்தின் விரிவை நிரோதித்து சுயஸ்தானத்தில் நிறுத்தி ஈசுவரனுடைய ஸர்வவியாபக ஞானத்தில் ஒடுக்கினால் பாசஞானமொழிந்து ஆத்மஞானமுண்டாகும். ஈசுவர ஞானம் என்கிற பரஞானம் அல்லது பரபோதம் ஆன்மஞானமாகிற பசுபோதம் அல்லது தற்போதத்திற்கு மேலே அதீதமாய் விளங்கா நிற்கும். அதிலே பசுபோதமாகிய ஆன்மஞானத்தைலயப்படுத்தினால் ஈசுவரஞானமாகிய பரஞானமுதயமாகும். இதுவே பதிஞானமெனப்படுவதாம். அந்த ஞானஸ்வரூபியாகிய சிவபெருமானுக்குமேலே ஏகசக்கரக்குடையொன்று விளங்கலால், அது அவரது அதீத நிலையைக்குறியாநிற்கும். அதில் ஈசுவரஞானத்தை யொடுக்கினால் ப்ரம்ம ஞானமாகும். இதுவே பாசஞானம், பசுஞானம், பதிஞானமென்பவைகளுக்கு அதீதமாய் விளங்கும் ஞானம். இங்ஙனம் விருத்திக்கிரம சிவஞானபோதானுக்கிரக காலத்தைத இடபவாகனரூடராய்க் காட்டியருளுகின்றார் என்ப.

ஆறுநாள் உத்ஸவம்

யானைவாகனரோகணம்.

இது லயக்கிரம சிருஷ்டியைக்காட்டுந் திருக்கோலமாம். இதனால் பரஞானமென்னும் யானையையுடையவர் என்பதுவிளங்கா நிற்கும். இதைச்சேர்ந்த விசேஷார்த்தங்களை மஹாவிஷ்ணுவினது ஆறுநாள் உத்ஸவமாகிய யானைவாகனத்திற்கு அமைந்த வியாக்கியானங்களில் கண்டுகொள்க.

ஏழாநாள் உத்ஸவம்

இரதாரூடதிருக்காட்சி.

இது லயக்கிரம ஸ்திதி கோலமாம்

இரதோத்ஸவத்தைப்பற்றி விஷ்ணுவுக்குச் சொன்ன விசே

ஷார்த்தங்களே சிவபெருமானுடைய இரதோத்ஸவத்துக்கும் பொருந்திய தத்துவங்களாம். அவற்றை ஆங்கு கண்டுகொள்க.

எட்டாநாள் உத்ஸவம்

அசுவவாகனரோகணம்.

எட்டாநாளில் அசுவவாகனரோகண திருக்காட்சியுண்டாகும். இது லயக்கிரம சங்காரகோலம் எனப்படும். விஷ்ணு ஆலயங்களில் போலவே சிவாலயங்களிலும் அசுவவாகனரோகண உத்ஸவம் நடத்தப்படுகின்றது. இதன தத்துவத்தையும் ஆங்கு கண்டுதெளிக.

ஒன்பதாநாள் உத்ஸவம்

பிக்ஷாடனமூர்த்த திருக்காட்சி.

இது லயக்கிரம திரோபாவகோலம் அல்லது ஸம்ஹாரக் கிரமத்தில் ஸம்ஹாரகோலம். பிக்ஷாடனம் இரண்டு வகைப்படும். அவை பகிர்முகம், அந்தர்முகம் என்பனவாம். பகிர்முகத்தால் அஞ்ஞானவிர்த்தியும், அந்தர்முகத்தால் ஞானவிர்த்தியுமுண்டாம். ஞானம் மேன்மேலும் விர்த்தியாகும்போது அஞ்ஞானம் மேன்மேலும் ஒழிந்துகொண்டு வரும். "யஸ்யாநுக்ரஹமிச்சாமிதஸ்ய வித்தம்ஹராம்யஹம்" என்கிறபடி, அந்தஞானமும் ஸர்வேசுவரனுக்கே உரியபொருளாகையால் பிரகிருதி குணங்களை அழித்து மாயாபந்தத்தை யொழித்து ஞானாகாரத்தில் நிற்கின்ற சேதனனுடைய ஞானத்தைத் தானே அபேக்ஷித்து அதனைத் தன்னிடத்தில் லயப்படுத்திக்கொண்டு கடாக்ஷிக்கின்ற லயக்கிரமதிரோபாவகிருத்தியத்தைப் பிக்ஷாடனமூர்த்த திருக்கோலத்தால் காட்டுகிறார் என்பதாம். இதன் விசேஷார்த்தம் வெண்ணெய்த்தாழிக்கண்ணன் கோலத்தில் கண்டுகொள்க.

பத்தாவது நா

திருநடனகாட்சி, பந்தம்பறிகாட்சி.

இது லயக்கிரமத்தில் அநுக்கிரக கோலமாம்.

அநுக்கிரகம் பகிர்முகம் அந்தர்முகமென இரண்டுவகைப்ப பகிர்முகாநுக்கிரகம் விருத்திக்கிரமத்தில் அங்கயித்து மே

ன்மேலும் ஞானத்தை விளக்கி ஜென்மபரம்பரையை யொழித்துவிடும். பிறவிப்பெருங்கடலில் ஆழ்ந்து துயரமடைகின்றவர்கள் அத்துயரம் நீங்கி மீண்டும் பிறவாவண்ணம் ஸர்வேசுவரனுடைய அநுக்கிரகத்தைத் தேடவிரும்புவார்கள். விரும்புமழி, அருளைமுன்னிட்டுக்கொண்டு சேதனமுயற்சியால் சித்தவிர்த்திகளைச் சிறிது சிறிதாகநிரோதித்து, சித்தத்திலேயே லயப்படுத்தி, பிறகுபடிப்படியாய் மேலேறி பரப்பிரம்மத்தினிடத்தில் நிறுத்தவேண்டுமென்று, ஏழெட்டொன்பது உத்ஸவங்களால் அறிவித்த பகவான், அச்சேதனர்களுக்குச் செய்கின்ற அநுக்கிரக கிரமத்தை பத்தாநாள் உத்ஸவத்தால் காட்டுகிறார். அநுக்கிரக திருக்கோலங்களும் பந்தம்பறியுமே இவ்வுத்ஸவத்தில் விசேடித்தன. அநுக்கிரககிரமத்தை நடனத்திருக்கோலங்களால் காட்டுவர். நடனத்திருக்கோலங்கள் சிவகேசவர்களிருவருக்கும் உண்டாம். அல்லியக்கூத்து குடக்கூத்து முதலியன திருமாலின்நடனங்கள். சிவபெருமானுக்கு உரியன அசைவுத்தாண்டவம், குதிக்கும் தாண்டவம், சாய்ந்தாடும் தாண்டவம், அசைவற்று நிற்கும் தாண்டவம் முதலியனவாம். இவற்றால் முறையே பிரம ஞானாநுக்கிரகம், ஈஸ்வர ஞானாநுக்கிரகம, சத்திஞானாநுக்கிரகம், ஆன்மஞானானுக்கிரகமுமாகிய நான்குவித அநுக்கிரகங்களையும் உணர்த்தி, ஜென்மபந்தம், கன்மபந்தம், விருத்திகுணபந்தம், அபிமான பந்தம், அவிவேகபந்தம், தொந்தபதார்த்தபந்தம் விடயபந்தம் வாசனாபந்தம், ஈஷணாத்திரயபந்தம், ஆசாபந்தம், மாயாபந்தம், முதலிய பந்தசக்திகளை அகற்றி அடித்துத்துறத்தி, அடியார்களிடத்திலிருந்து பந்தங்கள் யாவையும் பறித்துக்கொண்டு தம்மைப்போலாக்கும் உண்மையைக்காட்டியருளுகிறார் என்பார். இதனாலேயே இவ்வுத்ஸவத்தை பந்தம்பறி உத்ஸவமென்று உலகோர்வழங்குவர் என்ப.

பதினோராநாள் உத்ஸவம்

நடராஜ தியாகராஜமூர்த்த தரிசனகோலம்

பதினோராநாளிலே சூரியோதய காலத்திலேபகிரண்ட வட்டவடிவாகிய பஞ்சகிருத்திய விராட்டீஸ்வர நடேச பசுபதி மூர்த்திகோலமாய் எழுந்தருளி தமது ஈஸ்வரத்வத்தினுடைய எல்லா ரகசியங்களையும் விளங்கச்செய்வதுமல்லாமல் ஆன்மாக்கள் பிரமத்துடன் ஐக்கியமாகிற லயக்கிரம முக்தி ஸம்பந்தத்தை தியாகராஜ தக்ஷிணாமூர்த்த குருமூர்த்திகளால் அனுக்கிரகிப்பர் என்பதாம். இப்படி ஸ்ருஷ்டிக்கிரமத்தில் சிவபெருமான் செய்கின்ற பஞ்சகிருத்தியங்களை முதல் ஐந்துநாள் உத்ஸவங்களாலும், பிறகு ல



யக்கிரமத்தில் செய்கின்ற பஞ்சகிருத்தியங்களைப் பின் ஐந்துநாள் உத்ஸவங்களாலும் காட்டி, மோக்ஷப்பிராப்தியைப் பதினோராவதுநாள் உத்ஸவத்தாலும் உணர்த்தல் காரணமாகச் செய்யப்படுகின்ற பதினொருநாள் பிரம்ம உத்ஸவத்தை முடித்தபின் பற்ற இருபத்தொருநாள் உத்ஸவங்களை ஆரம்பித்து முடித்தல்வேண்டும். இந்த இருபத்தொருநாள் உத்ஸவம் தரிசனப்பிராப்தி சாந்நிவசந்த உத்ஸவக்காட்சி நிமித்தமாகச்செய்யப்படும் உத்ஸவமாம். இந்த இருபத்தொருநாள்களில் முதல் பதினாறுநாள்கள் ஈஸ்வரனுடைய சோடசகலாதரிசன நிமித்தமுடையனவாய் சோடசகலாதரிசனகாட்சியையும், பின் நாலுநாள் உத்ஸவங்கள் சதுஸ்தாரக பிரம்மகாட்சிநிமித்தமுடையனவாய்ச் சதுஸ்தாரகபிரம்ம தரிசனக்காட்சியையும், இருபத்தோராவதுதினமாகிய கடைநாள் உத்ஸவம் ஸாயுஜ்யநிமித்தமுடையதாய் சிவஜீவ ஸாயுஜ்யகாட்சியையும், தந்தருளும். இங்ஙனம் அந்தர்முக ரகசியங்களையுடையனவாய், பகிர்முகத்தில் செய்யப்பட்டு, ஆன்மகோடிகளுக்கு ஞானத்தையுணர்த்துகின்றனவாய், தத்வரூபமாக விளங்குகின்ற உத்ஸவங்களின் அந்தரார்த்தங்களை அறியாமல் அர்ச்சாவதாரத்தை அசட்டைசெய்து அஞ்ஞானப்பேரிருளில் ஆழ்ந்துகிடக்கும் ஆன்மாக்களின் அகவிருளை நீக்கி ஞானப்பிரகாசங்கொண்டு எழிலுலாவுகின்ற "பிரம்மோத்ஸவ தத்வதீபிகை" என்னும் இந்நூல் சாதுக்களுடைய சந்தோஷத்தின் பொருட்டும் எம்பெருமானுடைய திருவருட்கடாக்ஷத்தின் பொருட்டும் நீடூழிகாலம் விளங்கிக்கொண்டிருக்கவேண்டுமாக ! சுபம் !! சுபம் !!! சுபம் !!!!